விஜய மஞ்சரி. மலர். 2.

உ

முருகன் துணை

# நமது குலத் தொழில்.

அரச குலத்தைக் குறித்து
எழுதிய
ஓர் பிரபந்தம்.

இஃது
சென்னை, தண்டையார்பேட்டை
க்ஷத்திரிய மித்திரன் பத்திராதிபரும்,
தோ. சா. த. ப. சங்கக் காரியதரிசியும்,
கிராமணிகுலப் பிரதிநிதியும்,
ஆரிய க்ஷத்திரியகுல விளக்கம், க்ஷத்திரியன் நூற்களின்
ஆசிரியருமாகிய
த. விஜய துரைசாமி கிராமணி அவர்களால்
இயற்றப்பட்டு,

சென்னை
க்ஷத்திரிய மித்திரன் பிரஸில்
பதிப்பிக்கப்பட்டது.

1926.

விலை ரூபா. 1.] Registered. [தபால் பிரத்தியேகம்.

“எப்பொரு ளெத்தன்மைத் தாயினு மப்பொருண்
மெய்ப்பொருள் காண்ப தறிவு” (திருக்குறள்)



ஸ்ரீமான், செ. தங்கவேல் நாடார்,

கௌமார சோதிடர், இமனேஸ்வரம்.

௳

முருகன் துணை.

## ஸ்ரீமான். செ. தங்கவேல் நாடார் அவர்கள்.

இவர் இராமனாதபுரம், இமனேஸ்வரகிராமம் செ. அ. செம்புலிங்கநாடார் அவர்களது குமாரரும்; பரம்பரை கௌமார சோதிடரும்; கந்தர்நாடி, காக்கையர்நாடி பரிட்சையில் வல்லவரும்; முருகதாஸ் என்ற தண்டபாணி சுவாமிகளது சிஷியர் இராமானந்த சுவாமிகளால் புலவர் என்ற பட்டம் பெற்றவரும்; கும்பகோணம், வாலீபநாடார் சங்க பிரசிடெண்டும்; நாடார் மகாஜனசங்கம், கும்பகோணம், 11-வது மகாநாட்டின் உபசரணைக்கமிட்டி உபத்தலைவரும்; பொதுஜன உழைப்பாளியும்; சாதியபிமானியும்; எமது ஆப்த நண்பரும்; இந்நூல் நிறைவேறப் பொருள் சகாயஞ் செய்தவருமாவர். இந்நூல் அன்னவர் பேருக்கு அற்பணஞ் செய்யப்பட்டது.

சுற்றத்தாற் சுற்றப்பட வொழுகல் செல்வந்தான்
பெற்றத்தாற் பெற்ற பயன்.

## பொருளடக்கம்.

——:o:——


1. வேதகாலத்தில் ஓர்வித செடியிலிருந்து சோமபானஞ் செய்தனர். ... ... ... 7

2. மநுகாலத்தில் மாவினாலும், வெல்லத்தினாலும், இலுப்பைப் பூவினாலும் கள் செய்தனர் 11

3. வால்மீகி ராமாயண காலத்தில் மேற்கூறிய மூவகையாலேயே கள் செய்தனர். ... 14

வால்மீகர் காலத்தில் கள் செய்தவர் சௌண்டிகர் எனப்படுவர். ... ... 16

அக்காலத்தில் கிராமணி பட்டம் அரசருக்குரியது. ஸ்ரீராமர் அணிந்தனர். ... ... 17

4. புராணகாலத்திலும் மேறகூறிய மூவகை கள்ளையே செய்து வந்தனர். ... ... ... 17

கள் செய்தவரைக் குசலர் என்பர் 20

அக்காலத்தில் கிராமணி என்னும் பெயர் அரசருக்குரியது. ... ... ... 21

5. சங்ககாலத்தில் கள் அரிசி மாவினாலும், வெல்லத்தினாலும், பூவினாலுஞ் செய்தனர். ... 22

சங்ககாலத்தில் தென்னை, பனைமரங்களிருந்தன. அவைகளில் கள் உற்பத்தி செய்யவில்லை. 29

கரும்பு வெல்லத்தையே கர்ப்பட்டி எனப்படும். 32

பனை கற்பகத்தருவாகாது ... 33

சுட்கிப் பனையே சொற்கப்பனை என வழங்கினது. 35

அக்காலத்தில் கள்விலைஞரை வலைச்சியர், நுளைச்சியர், பழையர் என்பர் ... ... 35

அந்தக்காலத்தில் சான்றார், சான்றோர் என்னும் பெயர்கள் அரசருக் குரியன. ... 38

நாடார் என்னும் பெயர் அரசருக் குரியது 39
கபிலர் அகவல் ஓர் கட்டுக்கதை ... 40
கபிலர் சான்றோர் என்னும் பெயர் அரசரையும், அறிவுடையோரையுங் குறிக்கு மென்பர் 40

6. நல்லாடர் காலத்தில் கள் பனை, ஈந்து முதலிய மரங்களி லிருந்து உற்பத்தி செய்தனர். இவர் காலத்தி லிருந்தே மரங்களிலிருந்து கள் உற்பத்தி செய்யப் பட்டது. ... ... ... 42

7. அமரசிம்மர் காலத்தில் கள் உற்பத்தி செய்தவரை சௌண்டிகர், மண்டகாரகர் என்றழைத்தனர் 44
இவர் காலத்தில் அரசரை கிராமணி என்றழைத்த னர். ... ... ... 46

8. திவாகரர் காலம் ... ... ... 46
இவர் காலத்தில் கள்விலைஞரை பழையர் துவசர், படுவர் என்றழைத்தனர் ... 51
இவர் சான்றோன் என்பது சூரியனையும், அறிவோனை யுங் குறிக்கு மென்பர். ... ... 51

9. கம்பர் காலம் ... ... ... 52
இவர் காலத்தில் கள்விலைஞரை பழையர் துவசர் 'என்றனர். ... ... ... 53
இவர் சான்றவன், சான்றோன் என்னும் பெயர்கள் சூரியகுலத்தையும் அறிவுடையோனையும் விளக்கு மென்பர். ... ... ... 54
நாடன், நாடான் என்னும் பெயர்கள் அரசரை விள க்கு மென்பர் ... ... 55
கம்பர் அரசராவர் ... ... 56
கம்பர் சூரிய குலத்தவர் ... ... 58

10. சேக்கிழார் காலம் ... ... 59
ஏனாதிநாத நாயனார் சூரிய குலத்தவர் ... 60
ஏனாதிநாத நாயனார் சான்றார் என்னுஞ் சாதிப் பெயரை யுடையவர் ... ... 61
ஏனாதிநாத நாயனாருக் குரிய சான்றார் என்னுஞ் சாதிப்பெயர் சூரிய குலத்தவர் என விளக்கும் 65
ஈழக்குலம் என்பது ஈழராஜன் வம்ஸத்தைத் தெரிவிக்கும். ... ... 76
ஈழன் என்பதும், ஈழவன் என்பதும் ஒருபொருளைக் குறிக்காது. ... ... ... 78
11. பிங்கல நிகண்டார் காலம் ... ... 82
இவர் காலத்தில் கள்விலேஞர் பழையர், துவசர், படுவர் என்னுஞ் சாதிப்பெயர்களைப் பெற்றனர் 84
இவர் சான்றோன் என்பது சூரியனையும், அறிவோனையும், மிருகசீரிட நட்சத்திரத்தையுங் குறிக்குமென்பர். ... ... ... 84
12. கொத்தவன்குடி உமாபதி சிவாச்சாரியார் காலம் 85
இவரால் இயற்றிய சேக்கிழார் நாயனார் புராணத்தில், பிற்காலத்தவர் பல நூதனச் செய்யுள்களை நுழைத்தனர். ... ... 86
13. நச்சினார்க்கினியர் காலம் ... ... 93
இவர் சான்றார் என்பதை சாதிப்பெயரென ஒப்பினர். ... ... ... 93
கள்விலேஞருக்கு பழையர் என்னும் பெயர் உரியதென்றனர். ... ... ... 94
14. சூடாமணி நிகண்டார் காலம் ... 94
இவர் கள்விலேஞரை பிழியர், சௌண்டிகர், துவசர், படுவர் என்பர் ... ... 95

சான்றோன் என்பது சூரியனையும், அறிவோனையும், மிருகசீரிட நட்சத்திரத்தையுங் குறிக்குமென்பர் 95
படவர் நீலகிரியில் வசிப்பர். ... 97
பழையர் மதுரையில் வசிப்பர். ... 98
சௌண்டிகர் ஒரியாவில் வசிப்பர் ... 101
சௌண்டிசர் வீட்டில் பிராமணர் புசிப்பர். 101
சௌண்டிகரின் பிறப்பின் தன்மை. ... 102

15. குமரகுருபர சுவாமிகள் காலம் ... 106
இவர் தெரிவித்த சான்றாண்மை என்பது கள்ளைக் குறிக்காது. ... ... ... 108

16. சதுரகராதி காலம் ... ... 110
இக்காலத்தில் கள்விலைஞர் சௌண்டிகர், துவசர், படவர், பழையர், பிழியர் என்னுஞ் சாதிப் பெயர்களை வழங்கினர். ... ... 111
சால், சால்பு, சான்று, சான்றாண்மை, சான்றவர், சான்றோர், நாடன், கிராமணி என்னும் பெயர்கள் கள்விலைஞரைக் குறிக்காதெனவும், வேறு பொருளைத் தருமெனவும் வரைந்துள்ளது. 111

17. இராட்லர் அகராதி காலம். ... 111
இவர் சாணர் என்பதும், கிராமணி என்பதும் கள்விலைஞரைக் குறிக்குமெனல் தவறு 112

18. தமிழ்பாஷை அகராதியார் காலம். 114
இவ்வகராதியார் சாணர் என்பதும், கிராமணி என்பதும் கள்விலைஞரைக் குறிக்குமென 8-வருடத்திற்குமுன் இராட்லர் கூறியது தவறென மறுத்தனர். ... ... ... 115

19. உவின்ஸ்லோ அகராதியார் காலம் ... 115

இவர் சான்றார், சாணர், கிராமணி, நாடார் என்ப
வை கள்விலைஞரைக் குறிக்குமென்பது தவறு. 116

20. தமிழ்ப்பேரகராதி உவின்ஸ்லோ கூறியது முற்றுந்
தவறென வெறுத்தது ... ... 118

21. தென்னிந்தியாவின் சாதிகளும், குலங்களும் என்
னும் புத்தகத்துள் கள்தொழில் தற்காலம் பல
சாதியாருக் குரியதென்பது. ... 201

22. அபிதான சிந்தாமணியார் அயோக்யத்தனமாக அரு
ணகிரி புராணத்தி லில்லாத சான்றார் என்பதை
இருப்பதாகக் கூறியது தவறு ... 134
சாதிநூலில் கள் விலைஞரை பழையர் என்றனர் 136
சாதிநூலையே சாதிபேத விளக்கமென மறுபெயர்
தந்து அச்சிட்டு, அதில் சான்றாரே கள்விலைஞர்
எனக் கூறியது தவறு ... ... 137

23 தமிழ்ச்சொல் லகராதியார் சான்றார் கள்விற்போர்
என்னும் பொருளை பராசர ஸ்மிருதி தருவ
தாகக் கூறியது தவறு ... ... 138
இது விஷயமாக மதுரை தமிழ்ச்சங்கம் மானேஜர்
ஸ்ரீமான், லெக்ஷ்மி நாராயண ஐயர் அவர்களுக்கும்
ஷை தமிழ்ச்சங்கக் கலாசாலைத்தலைமை உபாத்தி
யாயரும், செந்தமிழ் பத்திராதிபருமாகிய,
ஸ்ரீமான். திருநாராயண ஐயங்கார் அவர்களுக்
கும், இந்நூலாசிரியருக்கும் நடந்த கடிதங்கள். 139

24 தற்காலதமிழ்ச்சொல்லகராதியார் சான்றான், சா
ணான், நாடான், கிராமணி என்னுஞ் சொற்களு
க்கு தமது அந்தஸ்துக்குத்தக முறைதிறம்பாது
தமக்கு முன்னுள பெரியோர்களது நூற்களின்

போக்கை யனுசரித்து பொருள் எழுதியுள்ளார். இவர் வாக்கு முறைதிறம்பிய அயோக்கியரைக் கண்டித்ததைப் போலாகும் ... 149
கள்குலத்தவர் பெயர்கள். ... ... 151
25. ஆகவே சான்றார் கள்குலத்தவர் அல்லர் 152
சான்றார் ஆயுதத்தொழிலர் ... ... 153
அவ்வாயுதத் தொழிலும் சான்றாருக்குக் குலத்தொழிலாகும் ... ... 162
ஆயுதத் தொழில் அரசருக் குரியது ... 165
அதனால் ஆயுதத்தொழிலையுடைய சான்றார் அரசராவர் ... ... 169

## இந்நூலில் மேற்கோளாக எடுத்துக்காட்டிய நூற்களின் பெயர்கள்.

**வேதங்கள்.**

ருக்குவேதம் (கிரந்தம்)
அதர்வண வேதம் (கிரந்தம்)
யஜுர்வேதம் (கிரந்தம்)

**இதிகாசங்கள்.**

வால்மீகி ராமாயணம்
கம்ப ராமாயணம்
வியாசபாரதம் (கிரந்தம்)
பகவத்கீதை (கிரந்தம்)
Wilkin's Bhagwat Gita

**18. புராணங்கள்.**

சைவ புராணம் (கிரந்தம்)
கூர்ம புராணம் (கிரந்தம்)
லிங்கபுராணம் (கிரந்தம்)
ஆக்னேய புராணம் (கி-ம்)
மச்ச புராணம் (கிரந்தம்)
பாகவத புராணம் (கிரந்தம்)

**ஸ்மிருதிகள்.**

மநுஸ்மிருதி (கிரந்தம்)
ப்ரகஸ்பதி ஸ்மிருதி (கிரந்தம்)

பராசர ஸ்மிருதி (கிரந்தம்)

## சங்க நூற்கள்.

சீவக சிந்தாமணி
சிலப்பதிகாரம்
மணிமேகலை
புறநானூறு
அகநானூறு
பெரும்பாணாற்றுப்படை
சிறுபாணாற்றுப்படை
பொருநராற்றுப்படை
பட்டினப் பாலை
மலைபடுகடாம்
மதுரைக்காஞ்சி
பரிபாடல்
பதிற்றுப்பத்து
ஐங்குறு நூறு
நற்றிணை
பாரத வெண்பா
நாலடியார்
திருக்குறள்
இன்னா நாற்பது

## இலக்கணங்கள்.

தொல்காப்பியம்
நன்னூல்
இலக்கண விளக்கம்
தொன்னூல் விளக்கம்
இலக்கண சிந்தாமணி
இலக்கணக் கொத்து
முத்து வீரியம்

## நிகண்டுகள்.

அமரம் (கிரந்தம்)
திவாகரம்
பிங்கல நிகண்டு
சூடாமணி நிகண்டு
உரிச்சொல் நிகண்டு
ஆசிரிய நிகண்டு
ரேவண சூத்திரம்

## இலக்கிய நூற்கள்.

கல்லாடம்
நைடதம்
மதுரைக் கலம்பகம்
காசிகாண்டம்
நளவெண்பா
அருணகிரி புராணம்

## நாயன்மார் சரித்திரங்கள்.

உபமன்னிய பக்தவிலாசம்
அகஸ்திய பக்தவிலாசம்
பெரிய புராணம்
நம்பியாண்டார் நம்பியந்தாதி
திருநாமக் கோவை
திருத்தொண்டர் புராண சாரம்
திருநட்சத்திரக் கோவை
திருவிளையாடற் புராணம்
திருவாலவா யுடையார் திரு விளையாடல்

சேக்கிழார்நாயனார் புராணம்

### கோவைகள்.

தஞ்சைவாணன் கோவை

திருக்கோவையார்

### அகராதிகள்.

சதுரகராதி

தமிழ்ப்பாஷை யகராதி

தமிழ்ப் பேரகராதி

தமிழ்ச்சொல் லகராதி

தற்கால தமிழ்ச்சொல் லகராதி

### சாதிநூற்கள்.

சாதிநூல்

சாதிபேத விளக்கம்

க்ஷத்திரியகுல விளக்கம்

கபிலரகவல்

ஜாதக சிந்தாமணி

### பத்திரிகைகள்.

க்ஷத்திரிய மித்திரன்

சுதேசமித்திரன்

சுதந்தரன்

### [கடிதங்கள்.

ஸ்ரீ திருநாராயணையங்கார்

### ஆங்கில சரித்திரங்கள்.

Rottler's Tamil and English Dictionary

Dictionary Tamil and English

Winslow's Tamil and English Dictionary

Essay On Hindu Castes

Thurston's Castes and Tribes of Southern India

Bishop Caldwell's Tinnevelly Shanars.

W. W. Hunter's Statistical Account of Bengal.

On the Original Inhabitant of Bharatavarsha or India

Kamudi Case, Court Record.

W. W. Hunter's Imperial Gazetteer of India.

The Native States of India and Their Princes.

Census of India 1891

Madras Government Museum Bulletin

Tod's Rajasthan.

Epigraphia Indica

Travancore State Manual.

Talboy wheeler's History of India.

Ramash Chunder Dutt's Ancient India.

# க்ஷத்திரிய மித்திரன்.

———(o)———

இது புத்தக ரூபமாக வெளிப்படும் ஓர் மாதாந்தத் தமிழ்ப் பத்திரிகை. இதில் பிராமணர், க்ஷத்திரியர், வைசியர், சூத்திரர் ஆகியநான்கு வகுப்பினரில் க்ஷத்திரிய வகுப்பினரின் தன்மையையும், கொள்கையையும், நடைநொடி பாவனைகளையும் வழக்கப் பழக்க அநுபோக உரிமைகளையும், அவர்களுக்கு அத்தியாவசியமாக ஆகவேண்டிய கல்வி, செல்வம், கைத்தொழில், இலௌகீகம், நாகரீகம், வர்த்தகம், விவசாயம் ஒற்றுமை, சமயம் முதலிய விஷயங்களில் விருத்தியடைய வேண்டிய சாதனங்களையும், பூர்வீக செப்பேடு சிலாசாசன சரித்திரங்களைக் கொண்டும், சங்க நூற்களின் போக்குகளைக் கொண்டும், வேதாதி புராணங்களின் கொள்கைகளைக் கொண்டும், ஆங்கிலேய நூற்களின் அபிப்பிராயங்களைக்கொண்டும், பிற்பட்ட வித்துவான்களின் துணிவுகளைக் கொண்டும், இடை இடையே தமிழ், கிரந்தம், தெலுங்கு, இங்லீஷ் ஆகிய பாஷா நூற்களின் ஆதாரவுகளை மேற்கோளாகத் தந்தும், நமது க்ஷத்திரிய குலத்தவர்களின் முன்னேற்றத்தினையே இலக்ஷியமாகக்கொண்டு இனிய தமிழ் நடையில் பிரசுரிக்கப்பட்டு வருகின்றது. ஆகவே, குலாபிமானம வைத்து ஒவ்வொருவரும் சாந்தாதாரராக சேர்ந்து பத்திரிகையை ஆதரிப்பீர்களென்று தாழ்மையுடன் கேட்டுக்கொள்ளுகின்றனன்.

உள்ளூர் வருடச் சந்தா ரூபா 3—0—0
வெளியூர் வருடச் சந்தா ரூபா 4—0—0

விலாசம்:—

**க்ஷத்திரிய மித்திரன் ஆபீஸ்,**
**தண்டையார் பேட்டை, சென்னை.**

# முக்கிய அறிவிப்பு.

——(o)——

சூரிய சந்திரகுல க்ஷத்திரிய சிகாமணிகாள்! நம்குலத்தவர் பூர்வம் இத்திராவிட தேசத்தைப் பரிபாலித்து வந்த சூரிய சந்திர குலத்திலுதித்த சேர சோழ பாண்டிய வம்சத்தில் வந்த க்ஷத்திரிய குலத்தவர் என "கிரந்தம், தமிழ்,தெலுகு, இங்கிலீஷ்" ஆகிய பாஷாநூற்களின் ஆதாரவுகளைக் கொண்டு அடியிற்கண்ட நூற்கள் நன்கு விளக்கி எழுதப்பட்டுள்ளன. சிலகாப்பிகளே கையிருப்பு. ஆடருக் கெதிர்பார்க்கின்றேன்.

| | | | | |
|---|---|---|---|---|
| க்ஷத்திரியகுல விளக்கம் தபால் சார்ஜ் உள்பட ரூபா | | 1—8—0 | | |
| "க்ஷத்திரிய மித்திரன்" முதல் வால்யம், காப்பி, தபால் சார்ஜ் உள்பட ரூபா | | 1 | 8 | 0 |
| "க்ஷத்திரிய மித்திரன்" | 2-ம் வால்யம், | 1 | 8 | 0 |
| ,, | 3-ம் வால்யம், | 1 | 8 | 0 |
| ,, | 4-ம் வால்யம், | 1 | 8 | 0 |
| ,, | 5-ம் வால்யம், | 1 | 8 | 0 |
| ,, | 6-ம் வால்யம், | 1 | 8 | 0 |
| ,, | 7-ம் வால்யம், | 1 | 8 | 0 |
| க்ஷத்திரியன் விலை அணு | | 0 | 2 | 0 |

விலாசம்:—

த. விஜயதுரைசாமி கிராமணி,
"க்ஷத்திரிய மித்திரன்" பத்திராதிபர்,
தண்டையார்பேட்டை, சென்னை.

## தஞ்சை "சுதந்தரன்" பத்திராதிபர்

# ஸ்ரீமான், வ. ராமஸ்வாமி அய்யங்கார் அவர்கள்

### அபிப்பிராயம்.

நண்பர் சென்னை "க்ஷத்திரிய மித்திரன்" பத்திராதிபர் ஒரு புத்தகம் அனுப்பினர். அதன் பெயர் "நமது குலத் தொழில்." அதிலே அவர் "சான்றூர்களின்" தொழில் என்ன வென்பதை ஆய்ந்து ஒரு முடிவுக்கு வந்துள்ளார். எந்த ஆராய்ச்சிக்குமே, அறிவைக்காட்டிலும் உணர்ச்சிவேண்டும் என்பது நான் கண்டு கொண்ட அனுபவம். காந்தியின் சரித் திரத்தை ஒரு வீணன், வம்பன் எழுதுவது சாத்தியமாகாது. ஸத்தியாக்கிரகத்தின் நுட்பத்தைத் தெரிந்து அதன்படி சிறிது அளவேனும் நடக்கவல்ல உத்தமன் ஒருவன்தான் காந்தியின் வாழ்வின் சரித்திரத்தை எழுதமுடியும்.

க்ஷத்திரிய மித்திரன் பத்திராதிபருக்கு அறிவு சம்பந்த மான ஆற்றலு மிருக்கிறது. உணர்ச்சியோ அளவுகடந்து நிற் கின்றது. இத்தகைய மனிதர்கள்தாம், தாங்கள் பிறந்த குலத்தை உலகத்தில் தூக்கி நிலை நிறுத்த முடியும். அவரு டைய குலாபிமான உணர்ச்சியை எவரும் இலேசாக மதித்து விடுதல்கூடாது. மனிதனுக்கு மண் உலகத்திலே இந்த உணர்ச்சிதான் கடைசிசொத்து. குலாபிமான உணர்ச்சிதான் இறுதியில் மனிதன் கெடாமல் காப்பாற்றவல்ல உணர்ச்சியா கும். ஒருவனுக்கு தன் கடமையில் அறிவு இல்லாமலிருக்க லாம். எனினும் அவன் அதர்மக்காரியம் ஒன்றுமே செய்ய மாட்டான். "என்னை யார் என்று எண்ணினீர்கள்? நான் நாயுடு. நான் அந்தக்காரியம் செய்ய இசையேன்" என்பான். தருமம் காப்பாற்றாத மனிதனை குலம் காப்பாற்றிவிட்டது. ஆகவே ஒவ்வொருவனுக்கும் தன் குலத்தைப்பற்றிய நல் லுணர்ச்சி இருக்குமாயின், அவன் ஒருநாளும் தகாதகாரியம் செய்யவேமாட்டான் என்பது நாம்காணும் அனுபவமாகும்.

கடந்த காலத்தில் சான்றூருக்கு கள்ளிறக்கும் தொழில் அமையவில்லை என்று நண்பர் உருசுப் படுத்துகின்றனர்.

அவர் முடிவு சரியென்றே எனக்குத் தோன்றுகிறது. என்னுடைய அனுபவத்தைச் சொல்லுகிறேன். நான் வளர்ந்த ஊரில் ஒரு மரமேறி இருந்தார். அவர் கள்ளிறக்கி வந்தார். எங்கள் வீட்டில் தேங்காய் பிடுங்கவேண்டியிருந்தது. அந்த சமயம் தற்செயலாய் அந்த மரமேறி நானிருக்கும் பக்கமாய்ச் சென்றார். "ஓய் நாடாரே! இங்குவாரும்" என்றேன். "நான் நாடார் அல்ல நாய்க்கர்" என்றார். எனக்கு திகைப்புண்டாகி விட்டது. பின்னர் அவரை வினவினேன். அவர் சொன்னதாவது:—கள்ளிறக்குகிற தொழிலில் எத்தனையோ ஜாதியார்கள் கலந்துகொண்டிருக்கின்றனர். நாய்க்கன், படையாச்சி, கவுண்டர், நாடார், கிராமணி முதலியவர்கள் கள் இறக்குகின்றனர். எல்லோரும் "சாணர்" அல்ல என்று முடித்தார். நண்பர் க்ஷத்திரிய மித்திரன் பத்திராதிபர் ஒருக்கால் புத்தகம் எழுதுமுன்னரே, சாணர் கள்ளிறக்குபவர்கள் அல்ல என்ற முடிவுக்கு நான் வந்துவிட்டேன். ஆனால் அதை வலியுறுத்தி எவரிடமும் பேசினதில்லை. நண்பர் கிராமணி அவர்கள் சான்றார்களுக்கு பழைய நாட்களிலே கள்ளிறக்கும் தொழிலே இருந்ததில்லை எனவும், ஆயுதம் ஏந்தி போர்த் தொழில் பயிலுதலே அவர்கள் தொழிலெனவும், உருசுக்கு மேல் உருசுக்காட்டுகின்றார். அவை ஒப்பத்தக்க முடிபேயாம்.

இன்னொரு அனுபவம், ஒரு ஊரில் பெயர் வேண்டியதில்லை. சிலகுடும்பங்கள் இப்பொழுது வேசித்தொழில் புரிகின்றன. இதைக்கொண்டு அவர்கள் பரம்பரை வேசிகள் என்று கொள்ளுதல் கூடாது. இந்தத் தலைமுறைக்கு முன்னர் அவர்கள் தனவந்தர்களாயும் அதிகாரம் படைத்தவர்களாயும் இருந்தனர் என்பது அந்த ஊரில் யாவரும் அறிந்த விஷயம். காலகதியினால் நேர்ந்த ஒரு விபத்தை, பரம்பரை என்று கொண்டாடுதல் மடமையாகும்.



த. விஜயதுரைசாமி கிராமணி,

க்ஷத்திரியமித்திரன் பத்திராதிபர்.

# முன்னுரை

"தேடிய வடியவர் மனத்தில் நின்றதாள்
நாடிய சுந்தரர்க் கருளு நல்லதாள்
கோடிய காலனை யுதைத்துத் தில்லையுள்
ஆடியே சிவந்ததாள் என்னை யாண்டதாள்."

சீருஞ் சிறப்புஞ் செழித்தோங்கும் இந்த இந்தியா அல்லது பரதகண்டத்தில் "தொழில்" என்பது ஒவ்வொருசாதிக்கும் ஏற்பட்ட படித்தரமாயுள்ளது. அது "கருமமுஞ் செயலுந் தருமமுந் தொழிலும், வினைவு மொருபொருள் விதிபுமாகும்" என்னுந் திவாகரத்தால் "கருமம், செயல், தருமம், வினை" எனப் பல பெயர் குறித்த ஒருபொருள் திரிச்சொல். பூர்வம் ஒவ்வொரு கூட்டத்தவருக்கும் ஒவ்வொரு தொழில் கொடுக்கப்பட்டது. அக்கூட்டத்தவருக்கு அவர்கள் ஏற்றுக் கொண்ட தொழிலை நோக்கியே பெயரும் இடப்பட்டது. அப்பெயர் பிற்காலத்தில் அக்கூட்டத்தவருக்கு சாதிப்பெயராக நின்று நிலைத்து விட்டது. இவ்விதம் சாதி என்பது தொழிலை நோக்கி ஏற்பட்டதே யன்றி, சாதியை நோக்கி தொழில் ஏற்படவில்லை. அப்படி பூர்வம் ஏற்பட்ட சாதிப் பெயரும், தொழிலும் தொன்றுதொட்டு ஒவ்வொரு கூட்டத்தவரையும் விட்டு விலகாது நாளதுவரையும் விளங்கிவருகின்றது. பிராமணர் என்பார் வேதாதி கிருத்தியங்களுக்குட்பட்டும், ஓமாதி கிருத்தியங்களைச் செய்தும் வருகின்றனர். இதைப்போல், செட்டிகள் வார்த்தகத்தையும், வேளாளர் பயிரையும், குயவர் மட்பாண்டங்களையும், பரவர் சமுத்திரத்தையும் பரிபாலித்து வருகின்றனர். இவ்விதம் ஒவ்வொரு சாதியாரும், அவரவர்களது சாதிப்பெயர் களுக்குரிய தொழிலை நாளதும் ஆண்டு அனுபவித்து வருகிறார்கள்.

ஆயின் சிலர் இக்காலத்தில் சாதிப்பெயர் வேறு, தொழில் வேறாக மாறிவழங்கி வருகின்றனர். அப்படி மாறி நிற்பவர்களுக்கு சாதிப்பெயர் மாறினவா? அல்லது தொழில் மாறினவா? எனவாராயின் சாதிப்பெயரோ இவ்விந்தியாவில் என்றும் ஒருபடித்தரமாக நின்று நிலைத்துவிட்டது. தொழிலோ மாறிமாறி வரக்கூடியது. இது உலக அநுபவம். அப்படி தொழில் மாறி நிற்பவர்கள் இவ்விந்தியாவில் அரசவம்ஸத்தவர்களே யாவர். அவர்கள் இகலரசரால் இடுக்கணுற்று, அவர்கள் சாதிக்குரிய தொழிலையும் இகலரசர்பால் விட்டு, இழிந்த தொழிலைப் புரிந்து வருகின்றனர்.

"Kshatriyas now found in Bengal, at the present day, instead of forming a Warrior Class, they are returned in the Census as a trading caste." Vide, W. W. Hunter's Statistical Account of Bengal, Vol. IX, P. 286,

"தற்காலத்தில் பெங்காலில் காணப்படும் க்ஷத்திரியர்கள் குடிமதிப்பில் யுத்தசாதியாராக விருப்பதற்கு பதிலாக, வர்த்தக சாதியாராக மாறி யிருக்கிறார்கள்" என்பதாம். இப்பகுதியை நோக்க அரசர்களே தொழில் மாறி யிருப்பதாக விளங்குகின்றது. அதேபோல் நமக்குரிய சாதிப்பெயரும்,தொழிலும் ஒன்றோடொன்று ஒத்துவராமல் மாறுபட்டிருக்கின்றன. அப்படி யிருத்தற்குக் காரணம், நாம் உன்னத நிலைமையிலிருந்து, காலமாறுபாட்டால் தாழ்ந்த தசையை யடைந்ததால், பலவிதத் தொழில்களைக் கைக்கொள்ள நேர்ந்தது. நமது பூர்வ உன்னத நிலைமையையும், நம்முன்னோர்களுடைய சரித்திரங்களையும், கீர்த்திப் பிரதாபங்களையும், நாம் எண்ணுந்தோறும் நமக்குள் ஒருவித எழுச்சியுண்டாவதோடு, நமக்குரிய கல்வியும் நம்மூடே நின்று, பிராமணருக் கிரண்டாவதாக நம்மைக் கைதூக்கி விட்டமையால், நாம் உத்தி

யோகத் துறைகளிலும், வர்த்தகத் துறைகளிலும், மிக் கோங்க நேர்ந்தது. இதற்கு 1841-ம் வருடம் திருநல்வேலி யில் மிஷினரி வேலைபார்த்து பேர்பெற்ற பிஷப் கால்டுவெல் துரை அவர்கள் தம்முடைய ஜீவியகாலத்தில் கண்ட அனு பவத்தை (They now occupy a very high place amongst the most progressive native tribes and castes in Southern India.) "சான்றூர்கள் இப்போது தென் இந்தியாவில் மகாமேலாய் முன்னுக்குவருகிற சுதேச குலங்களும், சாதிகளுமானவர் களுக்குள்ளே மிகவும் உன் னத ஸ்தானத்தை யடைந் திருக்கிறூர்கள்" என வெழுதி யிருத்தலே போதிய சாட்சியாகும். அப்படி நாம் அடைந் திருக்கும், அடைந்து வரும் நிலைமையைக் கண்ட இத் தென்தேசப் பொருமைக்காரர்கள், பொருமைகொண்டு, நம்மைத் தாழ்த்த வெண்ணி, நம் சாதிப்பெயரோடு மாறு பட்ட கள்தொழிலையும் நம்மோடு சேர்த்து ஒன்றுபடுத்தியும், நம் பூர்வோத்திரம், சரித்திரம், அந்தஸ்து முதலானவைகளை வேணுமென்று குறைத்தும், மாற்றியும், 1862-ம் வருடத்தி லிருந்து, சிலமேதாவிகளெனப் பெயர்படைத்தவர்கள், அவர் களது யுக்திப் பிரயோகங்களை யெல்லாம் பிரயோகித்து, அவ் வருடத்திற்கு முந்தின நூற்களுக்கு விரோதமாக வெழுதியு ம்வந்தார்கள், வருகிறூர்கள். இவர்கள் தங்களது மூளையை கடன் கொடுத்துவிட்டு, பிறருடைய அறிவை விலைக்கு வாங் குபவராவர். மற்றவர்களுடைய மனதை யறியச் சிரத்தை எடுத்துக் கொள்வதை பார்க்கிலும் தங்களுடைய மனதை யறியச் சிரதை எடுத்துக் கொள்ளுவதே, அறிவைப் பெற்ற தாலாகிய பெரும்பயனுகும். முற்காலத்தில் விவேகிகள் குறி த்த விஷயத்தை நினைந்து நினைந்துத் தாமே ஆராச்சி செய்ய ஆரம்பித்தனர். அநேக கிரந்தங்களை வாசிப்பதினுலேயே ஒருவனுக்குச் சிறந்த அறிவுண்டாகு மென்பதில்லை. சுய

ஆராய்ச்சி யில்லாத மனதிற்கு, அதிகப்படிப்பினால் என்ன பயன்? ஆகவே எடுத்துக்கொண்ட விஷயம் எவ்வளவுதூரம் சரியான தென்று ஆராய்ச்சிசெய்யாமல் புத்தகத்தில் சொன்னதுதான் சரியென்று, மூடத்தனமாய் நம்பிவிடும்பட்சத்தில், மானிட விவேகம் விருத்தி யடைவதற்குப் பதிலாய்க் குன்றி விடும். இச்சாதிப்படிப்பும் மற்ற வித்தைகளைப் போலவே பழக்கத்தைப் பொறுத்ததாயும், நீண்டநாளைய உழைப்பை வேண்டியதாயு மிருக்கிறது. சாமான்யமாய் அறியக்கூடிய தல்ல. அத்தகைய உழைப்புகளில்லாமல் சில அறிவினர்கள் B. A., M. A. பரிக்ஷை செய்துவிட்டோம் எனவும், தமிழில் எல்லாம் அறிந்துவிட்டோம் எனவும், அகம்பாவங் கொண்டு, நம் முன்னோர்களால் எழுதப்பட்டுள்ள கருத்துகளை யனுசரியாமலும், சாஸ்திரசம்மதத்திற்கு விரோதமாகவும் எழுதியுள்ளார்கள். அத்தகைய அவிவிவேகிகளுக்கு அறிவையூட்டும் அருஞ்சுடராக "நமது குலத் தொழில்?" என்னும் இப் பிரபந்தத்தைப் பிரகாசப்படுத்த நேர்ந்தது.

இவ்விஷயம் சிவகாசியில் கூடிய நாடார் மகாஜன சங்கம், 8-வது கான்பரன்ஸ், மூன்றாந்தினம் (29-6-1922) ஆரம்பத்தில் "நம் சாதிக்குரிய தல்லாததும், காலமாறுபாட்டால் நம்சாதியாரில் சிலர் கையாண்டு வருவதுமான 'கள்' இறக்குந் தொழிலை நம் குலத்தினர் முற்றிலும் நிறுத்தி விடவேண்டு மென்றும், கள்ளுக்கடை ஏலம் எடுக்கவாவது, கள் விற்கவாவது கூடாதென்றும், இம்மகாநாடு கேட்டுக் கொள்ளுகிறது." என்ற தீர்மானத்தை ஆதரித்து எம்மால் பேசியதாகும். நாம் எவ்விஷயத்தை எடுத்துரைப்பினும் அஃது நியாய சமூகத்தில புராதன நூற்களுக்கு மாறுபடாமல் நிலைத்து நிற்பதுதான் கனம் பெறும். ஆகவே, யாம் வெளியிடும் இந்நூலும் நியாயவாதிகள் சமூகத்தில் கனம் பெறுமென்பதே யாம். சுபம்.

உ

முருகன் துணை.

# நமது குலத் தொழில்.

"உலகெலா முணர்ந் தோதற் கரியவன்
நிலவு லாவிய நீர்மலி வேணியன்
அலகில் சோதிய னம்பலத் தாடுவான்
மலர்சி லம்படி வாழ்த்தி வணங்குவாம்."

---

இந்தியாவில் வசித்து வரும் இந்துக்களாகிய நாம் பல் வேறு கூட்டத்தவர்களாக பிரிந்திருக்கின்றனம். அப்படிப் பிரிந்திருக்கும் ஒவ்வொரு கூட்டத்தவருக்கும் ஒவ்வொரு தொழில் குலத்தொழிலாக உரியது. முற்காலத்தில் அத் தொழிலை நோக்கியே அக்கூட்டத்தவருக்கு சாதிப்பெய ரும், பட்டப்பெயரும் இடப்பட்டது. அப்படி இடப்பட்ட சாதிப்பெயர், பட்டப் பெயரோடு பொருந்தி நின்ற தொழி லையே "குலத்தொழில்" எனப்படும்.

இதற்கு உதாரணமாக பிராமணரைக் கவனிப்பாம்.

கல்லாடம், 11-வது அகவல்.

"மூன்றழ* லுன்மறை முனிவர் தோய்ந்து
மறைநீ ருகுத்தலின் மறையோ னாகியும்."

---

* நாற்சதுரமும், முச்சதுரமும், வில்வடிவுமாகிய மூன்றுவகை யைக் கருதின ஆகவனீயம், தக்கிணாக்கினியம், காருக பத்தியம் என்னும் மூன்று தீயானுண்டாகிய செல்வத் தினையு முடையவர் என்பதாம்.

எனக் கல்லாடர் கூறியவாறு பிராமணன் கர்ம மீமாம்சையைப் படித்து யாகாதி கிருத்தியங்களைச் செய்தலும், பிர்ம மீமாம்சையைப் படித்து யோகாதி கிருத்தியங்களைச் செய்தலும், அவர்களுக்கென் றேற்பட்ட தொழில்களாம். இவைகள் திவாகர நிகண்டுகளில் கூறும்* "வேதம் ஓதல், யாகஞ் செய்தல்" என்னும் இரு தொழில் களும் அவர்களுக்குரிய அறு தொழில்களுள் அடங்கும். இவற்றுள் வேதம் ஓதலால் பிராமணன் (பிராமணம்=வேதம்; அதை யோதுபவன் பிராமணன்) என்னும் பெயரும், யாகஞ் செய்தலால் வேதியன் (வேதிகை=யாகம், அதை செய்பவன் வேதியன்) என்னும் பெயரும், அத் தொழில்களை யுடையார்க்கு சாதிப்பெயர்களாய் நின்றன. ஆகவே "குலத்தொழில்" என்பது சாதிப் பெயரோடு, ஒத்து நிற்குந்தொழில் எனப் பொருள் கொள்ளும்.

இக்காலத்தில் ஒருசாதியார் தன்சாதிக்குரிய தல்லாத தொழிலைச் செய்து ஜீவித்தலும் இயற்கையே! அத் தொழிலை மநுவும், பராசரும் "ஆபத்துத் தருமம்"† என்றனர். ஆயின் சிலர் தாங்கள் உயரவேண்டுமென்ற எண்ணங் கொண்டு இதுவரைக்கும் கையாண்டு வராததும், தங்கள் சாதிக் குரிய தல்லாதது மாகிய பட்டப் பெயர்களாகிய "இராஜா, பூபதி, வர்மா" என்னும் பெயர்களை வைத்துக்கொண்டு, இரண்டொரு வருடமாகத் தடமாடி வருகின்றனர். அப்படி வழங்கி வருதலை இன்ன தருமமென ஸ்மிருதி யாதிகளில் கூறுததால், அதை அயோக்கி

* "ஓத லோதுவித்தல் வேட்டல் வேட்பித்த, லீத லேற்ற லென்றிரு மூவகை, யாதிக் காலத் தந்தண ரறுதொழில்" திவாகரம்.

† மநுஸ்மிருதி, 10-வது அத்தியாயம், 95-வது சுலோகம்.

யத் தருமமெனமுடிப்பாம். அதனால் அவர்கள் உயர்ந்துவிட மாட்டார்கள் எனவும் அறிவிப்பாம். இதற் குதாரணமாக பண்டாரங்களை கவனிப்பாம். பண்டாரங்கள் பட்டப்பெயரால் ஐயர் என வெளிப்படுகின்றனர். அப்படி அவர்கள் ஐயர் என்னும் பட்டப்பெயரைப் பெற்றிருத்தலால் பிராமணர் என்கலாமா? பிராமணர் ஆகார் எனத் தடுத்தற்கே பண்டாரம் என்னும் அவர்கள் சாதிப்பெயர் குறுக்கிடுகின்றது. இதைப்போல் நூதனப் பட்டப்பெயர் வைத்துக் கொள்பவரும், தங்கள் சாதிப்பெயரை நோக்க அவமானப்படுவர் எனவறியவும். இவ்வித அசம்பாவிதம் ஏற்படாமல் இருக்க சாதிப் பெயரோடும் பட்டப் பெயரோடும், தொழிலும் ஒத்திருக்கப் பார்க்கவேண்டும். அப்படி ஒத்திருத்தலையே "குலத்தொழில்" எனப்படும்.

நமது குலத்தவருக்கு **சான்றான்** என்னுஞ் சாதிப் பெயரும் "**கிராமணி, நாடான்**" என்னும் பட்டப்பெயர்களும் தொன்றுதொட்டு வழங்கிவருகின்றன. இவற்றுள்:—

(a) சான்றான்§என்பது சூரியனையும், சூரிய குலத்தவனையும், அரசனையும், அறிவோனையுங் குறிக்கும். இப்பொருள்களன்றி வேறு தாழ்ந்த பொருளைக் குறிக்க நூற்பிரமாணங் கிடையாது. இச் **சான்றான்** என்பது இத்தமிழ் எல்லையில் நமது குலத்தவருக்கு அன்றி, அதாவது **கிராமணி, நாடாருக்கன்றி**, மற்ற சாதியார்களுக்கு சாதிப் பெயராய் வழங்குதலின்று. இதன் விவரம் எம்மால்

§ "சான்றான்" என்னும் வார்த்தை உலகில் "சாணான்" என மரூஉவி வழங்கிவருகின்றது. அப்படி வழங்கி வருவதும் 1834-ம் வருடத்திலிருந்தே நூற்களில் வழங்கி வருகின்றது.

வெளிப்படுத்தப்படும் "சான்றோர் என்னுஞ் சொல் ஆராய்ச்சி" என்னும் நூலில் விரிவாகக் காணலாம்.

(b) கிராமணி என்பது அரசனையும், சிரேஷ்டனையும் குறிக்கும். இக் கிராமணி என்பது இவ்விந்தியாவில் நம் குலத்தவருக் கன்றி, மலையாளத்தில் கிராமத்தையுடைய நம்பூரி பிராமணருக்கும், சேலம் முதலிய இடங்களில் கைக்கோளர் சாதித்தலைவர்களுக்கும், வடதேசத்தில் (Khatris) காத்திர அரச வம்ஸத்தவருக்கும் வழங்கி வருகின்றது. இதன் உண்மையை எம்மால் இயற்றப்படும் "கிராமணி என்னுஞ் சொல் ஆராய்ச்சி" என்னும் நூலில் இனிது உணர்த்தப்படும்.

(c) நாடான் என்பது அரசனைக் குறிக்கும். இப்பெயர் இத்தமிழ் எல்லையில் நமது குலத்தவருக் கன்றி, மற்ற சாதியார்களுக்கு சாதிப் பட்டப்பெயராய் வழங்குத லின்று. இதன் விளக்கம் இப்பொழுது அச்சிட்டுவரும் "நாடார் என்னுஞ் சொல் ஆராய்ச்சி" என்னும் நூல் இனிது விளக்கக் காணலாம். ஆகவே, இம்மூன்று பெயர்களும் அரசரைக் குறித்தலால், நாம் அரச சாதியாரென முந்து கின்றோம்.

இச்சாதிப் பெயர்களுக்குரிய தொழிலுண்டா வெனக் கவனிப்பாம். தற்காலம் நமது குலத்தவர்களுள் பலர் வர்த்தகத்தையும், சிலர் கள் தொழிலையும் கையாண்டு வருகின்றார்கள். அவற்றுள் வர்த்தகம் புரிதல் நமது சாதிப் பெயர்களுக்கு ஒத்த குலத்தொழிலா? கள்தொழில் செய்தல் ஒத்த குலத்தொழிலா? அல்லது இவ்விரண்டும் அல்லாது வேறு தொழிலுண்டா? என ஆராய்வாம்.

I. வர்த்தகம்:—தற்காலம் 100-க்கு, 70-பேரால் செய்துவரும் வர்த்தகம் நமது சாதியாருக்குரிய குலத்

தொழிலாக விருப்பின், அவ்வர்த்தகத்தை விளக்கக்கூடிய "செட்டி (செட்டு=வர்த்தகம்)" என்னும் பட்டப்பெயரும், "வைசியர் (வைசியம்=வர்த்தகம்)" என்னுஞ் சாதிப் பெயரும் நமக்கு சாதிப் பட்டப்பெயராக விளங்க வேண்டும். அப்படி விளங்காமல் "நாடார், கிராமணி" என்னும் பட்டப் பெயர்களும், சான்றார் என்னுஞ் சாதிப்பெயரும் நமக்கு இருத்தலால் நாம் வர்த்தகத்தை குலத்தொழிலாகப் பெறேம். அதோடு நமது சாதிப்பெயரும் வர்த்தகத்தை விளக்காது. அவ்வாறாயின் நமக்கு வர்த்தகம் வந்த வழி எவ்வாறெனின்? விளக்குவாம்.

"There exists a tradition to the effect that the Kshatriyas followed the profession of arms up to the time of Emperor Alamgir, when a large number of them having been slain in the Dakhin wars, the Emperor, out of pity, ordered their widows to be remarried. This command the head of the caste disobeyed, so the Emperor dismissed all Kshatriyas from his military service, and ordered them to be shop-keepers and brokers for the future." Vide, W. W. Hunter's Statistical Account of Bengal, Vol. IV, P. 48.

"இதற்கொரு சரித்திரப் பிரமாணம் உண்டு. ஆலம்கிர் சக்ரவர்த்தி காலம் வரைக்கும் ஆயுதத்தொழிலை அரசர்கள் மாத்திரம் கையாண்டு வந்தார்கள். அந்த சக்ரவர்த்தி காலத்தில் நடந்த ஒரு பெரிய தக்காண சண்டையில் அநேக அரசர்கள் கொலையுண்டார்கள். சக்கரவர்த்தி மனம் இரங்கி, இறந்த அரசர்களின் விதவைகளை மறுமணம் புரிந்துகொள்ள உத்தரவிட்டான். இந்த உத்தரவை சாதித்

தலைவர்களைப் புறக்கணித்தார்கள். அதனால் சக்கரவர்த்தி யுத்தத் தொழிலிலிருந்து எல்லா அரசர்களையும் விலக்கி, பிற்காலம் அதாவது வருங்காலத்தில் அவர்கள் வர்த்தகர்களாகவும், தரகரிகளாகவும் இருக்க அவர்களுக்கு உத்தரவிட்டான்'' என்பதாம்.

இப்பகுதியிற் கூறியவாறு பூர்வம் அன்னிய அரசனால் அரச குலத்தவர்களுக்கு வைசியத்தொழில் ஏற்பட்டது. அவ்வேற்பாட்டை பின்பற்றியே வடதேசத்திலுள்ள க்ஷத்திரியர்களும், இத்தென்தேசத்திலுள்ள க்ஷத்திரியர்களாகிய நாமும் நாளதும் வைசியத்தொழிலை செய்துவருகின்றோம்.

"Kshatriyas now to be found in Bengal, at the present day, instead of forming a warrior class, they are returned in the Census as a trading Caste'' Vide, W. W. Hunter's Statistical Account of Bengal, Vol. IX, P. 286.

"இப்பொழுது பெங்காலில் காணப்படும் க்ஷத்திரியர்கள் குடிமதிப்பில் யுத்தச்சாதியாராக இருப்பதற்கு பதிலாக வர்த்தக சாதியாராக மாறியிருக்கிறார்கள்'' என்பதாம்.

இப்பகுதியிற் கூறியவாறு வடதேசத் தரசர்களைப் போல்; நாமும் பூர்வம் யுத்தத் தொழிலராகவிருந்து,* தற்காலம் வர்த்தகத்தை ஆபத்துத்தருமமாக† அனுஷ்டித்து வருகின்றோம். இவ்வேதுக்களால் தற்காலம் செய்து

* உபமன்னிய பக்தவிலாசம், 29-வது அத்தியாயம், ஏனாதிநாதர் சரிதம், 3, 6-வது சுலோகங்கள்; பெரியபுராணம், ஏனாதிநாத நாயனார் புராணம், 3, 5, 7-வது செய்யுள்கள்; அகஸ்திய பக்தவிலாசம், 21-வது அத்தியாயம், ஏனாதிநாதர் சரிதம், 16, 17-வது சுலோகங்கள்.

† மநுஸ்மிருதி, 10-வது அத்தியாயம், 85-வது சுலோகம்.

வரும் வர்த்தகம் நமது குலத்தொழில் அல்லவென அறியவும். அன்றியும், நமது குலத்துள் சிலர் அதாவது நூற்றிற்குப் பத்துப்பேரால்* செய்துவரும் கள்தொழிலாவது நமக்குரிய தொழிலாகுமா? வென ஆராய்வாம்.

II. கள்தொழில்:-தற்காலம் தென்னைமரத்தி லிருந்தும், பனைமரத்தி லிருந்தும், ஈச்சமரத்தி லிருந்தும் உற்பத்தியாகும் இரசத்தைக் **கள்** என்று சொல்லப்படும்.

(க) இந்த கள்ளை பூர்வம் எந்தவகையால் உற்பத்தி செய்து வந்தார்கள்?

(உ) எந்த சாதியாரால் செய்யப்பட்டது?

(ங) அந்த தொழிலை நமது சாதியார் பூர்வம் செய்ததுண்டா?

(ச) நாம் எக்காலத்திலிருந்து செய்து வருகின்றோம்?

(ரு) நமது சாதியார்களுக்குரிய சாதிப்பெயரென்ன?

(சு) அந்தப் பெயர்களில் கள் சப்தம் உண்டா?

என்பதாதிகளை ஆராய்வாம். பூர்வம் தென்னைமரத்தி லிருந்தாவது, பனைமரத்தி லிருந்தாவது, ஈச்சமரத்தி லிருந்தாவது கள் உற்பத்தி செய்ததாகக் காணப்படவில்லை.

1. **வேதகாலம்**:—வேதகாலத்தை வரையறுக்க முடியாது. வியாசரால் வேதம் வரையப்பட்டதே எனின், அஃதன்று. அவரால் சிக்கறுக்கப்பட்டு, ருக்கு, எசுர், சாமம், அதர்வணம்† என நான்காக வகுக்கப்பட்டதேயன்றி, இயற்றப்பட்டதல்ல. அவற்றுள் ருக்குவேதத்தில் கள்ளை "**சோமபானம்**" எனப்பட்டிருக்கின்றது.

---

* நூற்றிற்கு 20-பேர் மற்ற உத்தியோகம் கைத்தொழிலாளர்.

† தொல்காப்பியம், எழுத்ததிகாரம், சிறப்புப்பாயிரத்தின்கீழ் நச்சினார்க்கினியரால் விளக்கியவையாலு மறியலாம்.

ருக்குவேதம், முதல்அஷ்டகம், முதல்மண்டலம், முதல்அத்தியாயம், முதல் அநுவகம், இரண்டாம் சூக்தம், முதலாஞ் சுலோகம்.

"Vayu, worthy of being seen (libations† of) Soma have been dressed, come, drink of them; and, hear our invocation."

இரண்டாஞ் சுலோகம்.

"Vayu, the eulogists who have prepared the Soma-Juice, who know the sacrifice, praise thee with encomiastic verses."

மூன்றாஞ் சுலோகம்.

"Vayu, thy speech describing the qualities of Soma, comes to the giver (of the libation) and to many others (who invite thee) to drink of the Soma-Juice."‡

"இந்திரன், அக்கினி, வாயு, வருணன், அஸ்வனி முதலிய தேவர்களுக்கு பூர்வம் மதுபான நைவேத்தியஞ் செய்து வந்ததாக ருக்குவேதத்தில் கூறப்பட்டுள்ளது. அம்மதுபானத்தை சோமபானம் எனப்படும்.

---

* நமது அச்சுக்கூடத்தில் தேவநாகரம் எழுத்து இல்லாமையால் ருக்குவேத சுலோகத்தை அச்சிட ஏதுவில்லாமல் அதன் மொழிபெயர்ப்பை மாத்திரம் பிரசுரிக்கப்பட்டது.

† libations-மதுபான நைவேத்தியம்.

‡ இந்த ருக்குவேதத்தை (Manmatha Nath Dutt (Shastri) M. A; M. R. A. S.) ஸ்ரீமான், மன்மதநாத் தத்து அவர்களால் அங்கிலேய பாஷையில் மொழிபெயர்க்கப்பட்டது.

அமரம், இரண்டாங்காண்டம், பிராமண வர்க்கம்,
410-வது சுலோகம்.

ஸொமெ வீயீ தூ ஸொமவொ ஃ|

"ஸோம பீதீது ஸோமபா"

இச்சுலோகத்தில் வரும் "சோமபீதீ, சோமபா" என்னும் இரண்டு பெயர்களும் சோமபானம் பண்ணினவனுக்குப் பெயராம்.

அமரம், இரண்டாங்காண்டம், பிராமண வர்க்கம்,
449-வது சுலோகம்.

ஸுூதுூ ஷிஷுவஸுவ நஜுூஸா||

"ஸ்ஸூத்யா பிஷவஸ்ஸவ நந்துஸா"

இச்சுலோகத்தில் வரும் "சுத்யா, அபிஷ்வ:, சவநம்" என்னும் மூன்று பெயர்களும் சோமலதையை யிடித்ததுக்குப் பெயராம்.

அமரம், இரண்டாங்காண்டம், பிராமண வர்க்கம்,
412-வது சுலோகம்.

ஸுூக்ஷாக்ஷஷிஷெவக்ரூதீ |

"ஸூத்வாத் வபிஷவே க்ருதீ"

இச்சுலோகத்தில் வரும் "சுத்வா, அபிஷவே, க்ருதீ" என்னும் மூன்று பெயர்களும் சோமலதையை யிடித்துப் பிழிந்தவனுக்குப் பெயராம்.

அமரம், இரண்டாங்காண்டம், வைசியவர்க்கம்,
733-வது சுலோகம்.

கிணாஂ வுூஂவஸிதுூ நஜஹூஃ ஃ||

"கிீண்வம் பும்ஸிது நக்நஹூ"

இச்சுலோகத்தில் வரும் "கிண்வம், நக்நஹு" என்னும் இரண்டு பெயர்களும் மத்யகோதுக்குப் பெயராம். இந்நான்கு சுலோகங்களாலும் **சோமபானம்** சோமசெடியிலிருந்து பிழிந்த இரசமென விளங்குகின்றது.* சோமசெடியை இடித்த மொத்தத்தை **சோமலதை** என்றும், அச்சோமலதையிலிருந்து பிழிந்த இரசத்தை **சோமபானம்** என்றும், திப்பியை **மத்தியகோது** என்றும். கூறிவந்ததாக விளங்குகின்றது.

நைடதம், கலிதோன்று படலம்,
10-வது செய்யுள்.

"அருமறை முனிவர்யாரு மோர்கலத் தார்வமோடும்
பருகிய வாறுநோக்கித் தீவினை பயந்ததென்ன
விரைவினிற் சேரலோடு மறைமொழி கூறும்வேள்விக்
குரியது **சோமபான** மெனவுள முடைந்து போனான்"

இச்செய்யுளால் சோமபானத்தை பூர்வம் பிராமணர் செய்து பானஞ்செய்து வந்ததாக விளங்குகின்றது. இது அதிவீரராம பாண்டியரது அபிப்பிராயம். ஆகவே, மது பானம் வேதகாலத்தில் ஓர்வித செடியிலிருந்து இடித்துப் பிழிந்த இரசமென விளங்குவதால், அக்காலத்தில் பிராமணர் முதல் எல்லாச் சாதியாருஞ் செய்து உண்டார்களேயன்றி, இன்ன சாதியார்தான் செய்யவேண்டு மென்னும்

---

* "Arangkrita or alangkrita, literally dressed or perpared. The Soma-Plant, being pressed, yields a profuse milky juice of a mild nature. It is used in sacrifice when it goes through a process of fermentation." This view of Mr. Stevenson is warranted by various expressions in the succeeding hymns.

கியதியில்லை.* சோமபானஞ் செய்தலை அமரத்தில் பிரா மணவர்க்கத்தில் கூறியிருப்பதையும் இங்கு அறியலாம்.

2. மநுகாலம்:—மநுகாலத்தை புராண காலத்திற்கு முற்பட்டதாகக் கொள்ளவேண்டும். அதேனெனில் வியாச ரால் பாடிய பதினெண் புராணங்களிலும் மநுவந்தரத்தை யும், மநுகாலத்தையும் குறிக்கப்பட்டுள்ளது. அதனால்

* வேதகாலத்தில் கள்ளை பிராமணர் முதல் பலருஞ் செய்து அனுபவித்து வந்ததுபோல். க்ஷவரஞ்செய்தல் அதாவது மயிர் சிரைத்துக்கொள்ளுதல் பிராமணர்களுக்கு பிரா மணர்களே செய்து வந்தார்கள். அதர்வண வேதத்தில் ஆருவது அத்தியாயத்தில் 6, 83-வது சுலோக மந்திரங் கள். "ஓம் யேனுவபத் ஸவிதா க்ஷுரேண, ஸோமஸ்ய ராக்ஞோ வருணஸ்ய வித்வாவன்." "தேன பிராஹ் மணோ வாபதேத மஸ்ய, கோமா நச்வா நயமந்து பிரஜ வான்." (இ-ள்.) "ஏ பிராமணர்களே! நல்ல கத்தியால் க்ஷவரஞ் செய்யுங்கள். கடவுள், சவிதர், பெரியோர், பிரா மணர், ஸோமன், ராஜன், வருணன் முதலியவர்களை க்ஷவரஞ்செய்தவர்க ளாவீர்கள். க்ஷவரஞ் செய்யும் பிரா மணன் பசுக்கள், குதிரைகள் பெரிய குடும்பங்களைப் பெற்று வாழ ஆசீர்வாதமடைவான்" என்பதாம். இன் னும் ருக்குவேதம், 7-வது அத்தியாயம், 217-வது மந்தி ரம்; 8-வது அத்தியாயம், 4, 16, 1, 166, 10-வது மந்திரங்களும்; 10-வது அத்தியாயம், 8, 9-வது மந்தி ரங்களும்; யஜுர்வேதம், 3-வது அத்தியாயம், 63-வது மந்திர சுலோகமும் க்ஷவரஞ் செய்துக்கொள்ளுதலை பிரா மணருக்குள்ளேயே செய்துக்கொண்டு வந்தார்களெனத் தெரிவிக்கிறது. அத்தொழிலுக்குத் தனித்த சாதியார் வேதகாலத்தில் கிடையாது. பிற்காலத்திலேயே ஒவ் வொரு தொழில், ஒவ்வொரு கூட்டத்தவருக்குக் கொடுக் கப்பட்டு, சாதிப் பிரிவுகள் ஏற்படுத்தப்பட்டதென விளங்குகின்றது.

மநுகாலம் புராணகாலத்திற்கு முற்பட்டதாகும். அம் மநு காலத்தில் கள்ளுற்பத்தியைப் பற்றி பின்வருமாறு கூறி யுள்ளது.

மநுஸ்மிருதி, 11-வது அத்தியாயம்,
93-வது சுலோகம்.

𑌸𑍁𑌰𑌾𑌵𑍈𑌮𑌲𑌮𑌨𑍍𑌨𑌾𑌨𑌾𑌂
𑌪𑌾𑌪𑍍𑌮𑌾𑌚𑌮𑌲𑌮𑍁𑌚𑍍𑌯𑌤𑍇 ।
𑌤𑌸𑍍𑌮𑌾𑌦𑍍𑌬𑍍𑌰𑌾𑌹𑍍𑌮𑌣𑌰𑌾𑌜𑌨𑍍𑌯𑍌
𑌵𑍈𑌶𑍍𑌯𑌶𑍍𑌚𑌨𑌸𑍁𑌰𑌾𑌂𑌪𑌿𑌬𑍇𑌤𑍍

"சுரா வைமல மந்நா நாம்
பப்மாச மலமுச் யதே/
தஸ்மாத் ப்ராஹ்மண ராஜந் யௌ
வைஸ்யஸ்ச நஸுராம் பிபேத்//"

(இ-ள்.) "பைஷ்டி என்னுங் கள்ளானது, அரிசிமாவி னால் செய்யப்படுகிறபடியால், அது அன்னங்களின் மலம். அந்த மலத்திற்குப் பாபமென்று பெயர். ஆதலால் மூன்று வருணத்தாரி லொருவனும் அதைக் குடிக்கக்கூடாது" என்பதாம். இச்சுலோகத்தில் "கள்" அரிசிமாவினால் செய்த தாக விளங்கு கின்றமையால் அன்னமலம் எனப்படுகிறது.

அமரம், இரண்டாங்காண்டம், வைசியவர்க்கம்,
618-வது சுலோகம்.

𑌆𑌰𑌨𑌾𑌳𑌕𑌸𑍌𑌵𑍀𑌰
𑌕𑍁𑌲𑍍𑌮𑌾𑌷𑌾𑌭𑌿𑌷𑍁𑌤𑌾𑌨𑌿𑌚 ॥
𑌅𑌵𑌨𑍍𑌤𑌿𑌸𑍋𑌮𑌧𑌾𑌨𑍍𑌯𑌾𑌮𑍍𑌲
𑌕𑍁𑌞𑍍𑌜𑌲𑌾𑌨𑌿𑌚𑌕𑌾𑌞𑍍𑌜𑌿𑌕𑍇

"ஆர நாளக ஸௌவீர
குல் மாஷா பிஷுதா நிச/

அவந்தி ஸோம தாந்யாம்ல
குஞ்ஜலா நிசகாஞ் ஜிகே//."

(இ-ள்.) "ஆரநாளகம், ஸௌவீரம், குல்மாஷம், அபிஷுதம், அவந்தி, சோமம், தாந்யாம்லம், குஞ்ஜலம், காஞ்ஜிகெ என்னும் ஒன்பது பெயர்களும் கள்ளுக்குப் பெயர்" என்பதாம். இச்சுலோகத்தில் விளங்குந் **தான்யமலம்** என்பதும், மநுகூறிய **அன்னமலம்** என்பதும் ஒன்றென விளங்கும். அதனுல் **கள்** மநுகாலத்தில் அரிசிமாவினுல் செய்ததாக விளங்குகின்றது.

மநுஸ்மிருதி, 11-வது அத்தியாயம்,
94-வது சுலோகம்.

𑌗𑍌𑌡𑍀𑌪𑍈𑌷𑍍𑌟𑍀𑌚𑌮𑌾𑌧𑍍𑌵𑍀𑌚
𑌵𑌿𑌜𑍍𑌞𑍇𑌯𑌾𑌤𑍍𑌰𑌿𑌵𑌿𑌧𑌾𑌸𑍁𑌰𑌾 ।
𑌯𑌥𑍈𑌵𑍈𑌕𑌾 𑌤𑌥𑌾𑌸𑌰𑍍𑌵𑌾
𑌨𑌪𑌾𑌤𑌵𑍍𑌯𑌾𑌦𑍍𑌵𑌿𑌜𑍋𑌤𑍍𑌤𑌮𑍈𑌃 ॥

"கௌடீ பைஷ்டீச மாத் வீச
விஜ்ஞே யாத்ரி விதா சுரா/
யதை வைகா ததா ஸர்வா
நபா தவ்யாத் விஜோத் தமை//."

(இ-ள்.) "கௌடீ=வெல்லத்தால் செய்யப்பட்ட கள், பைஷ்டீ=மாவினுற் செய்யப்பட்ட கள், மாத்வீ=இலுப்பைப் பூவினுல் செய்யப்பட்ட கள் ஆக கள் மூவகைப்படும். இவற்றில் பைஷ்டிக்கும் மற்ற இரண்டு கள்ளுக்கும் ஒன்றுக்கொன்று பேதமில்லை" என்பதாம். ஆகவே, மநுகாலத்தில் **கள்** வெல்லத்தினுலும், மாவினுலும், இலுப்பைப் பூவினுலும் செய்தார்களே யன்றி, பனை, தென்னை, ஈச்சமரங்களி லிருந்து உண்டாக்கியதாக விளங்கவில்லை.

இதோடு வேதகாலத்திலும், மநுகாலத்திலும் கள் செய்தவருக்குச் சாதிப்பெயர்கள் ஏற்படவில்லை. அதனால் வேண்டியவர்கள் செய்து சாப்பிட்டார்களென விளங்கும்.

3. இராமாயண காலம்:—இராமாயணம் வால்மீகியரால் இயற்றப்பட்டது. இராமர் சரித்திரத்தைக் கூறும் நூல். இராமர் சரித்திரத்தை வியாசரால் இயற்றிய பதினெண் புராணங்களிலும் கூறியிருத்தலின், இராமாயணம் புராணங்கட்கு முற்பட்டதெனப்படும். இராமாயணத்தில் விஸ்வாமித்திரர் சேனையோடு வஸிஷ்டர் ஆச்சிரமம் சென்றதாகவும், வஸிஷ்டர் விசுவாமித்திரருக்கும் அவரது சேனைகட்கும் விருந்து செய்யுங்கால், அவ்விருந்தில் கள்ளும் விநியோகிக்கப் பட்டதாகவும்‡ விளங்குகின்றது.

வால்மீகிராமாயணம், பாலகாண்டம், 53-வது சர்க்கம், 1-வது சுலோகம்.

ஏவமுக்தா வஸிஷ்டேந ஸபலா ஶத்ருஸூதந।
விததே காமதுக் காமாந் யஸ்ய யஸ்ய யதேப்ஸிதம்॥

"ஏவமுக்தா வஸிஷ்டேந ஸபலா ஸத்ருஸூதந/
விததேகா மதுக்காமாந் யஸ்யயஸ்ய யதேப்ஸிதம்//"

2-வது சுலோகம்.

இக்ஷூந் மதூந் ததா லாஜாந்
மைரேயாம்ஶ்ச வராஸவாந் ।
பாநாநி ச மஹார்ஹாணி
பக்ஷ்யாம்ஶ்சோச்சாவசாம்ஸ்ததா ॥

‡ "நறையு நானமு நாறு நறும்புகை, விறகின் வெள்ளி யடுப்பினம் பொறகல, நிறைய வாக்கிய நெய்பயி லின்னமிர், துறையு மாந்தர் விருந்தொடு முண்பவே" சீவகசிந்தாமணி, நாமகளிலம்பகம், 102-வது செய்யுளில் விருந்தில் கள்ளும் அருந்தினர்.

"இக்ஷூன்மதூம் ஸ்ததாலாஜாந்
மைரேயாம்ஸ்ச வராஸவாந்/
பாநாநிச மஹார்ஹாணி
பக்ஷ்யாம்ஸ்சோச் சாவசாம்ஸ்ததா//"

(இ-ள்.) "பகைஞரைப் பருக்கின்றவ! இவ்வாறு வஸிஷ்ட்டரால் கட்டளையிடப்பட்ட சபளை என்கின்ற காமதேனுவானது கரும்புகளையும், தேன்களையும், பொரிகளையும், மைரேயங்களையும்,* ச்ரேஷ்ட்டமான ஆஸவங்களையும்† மேலான பாநகங்களையும், பலவகைப் பணியாரங்களையும், இஷ்டவஸ்த்துக்களையும், யாராருக்கு எங்கெந்தப்படி இஷ்டமோ (அந்தப்படியே) ஸித்தஞ்செய்துக் கொடுத்தது" என்பதாம். இச் சுலோகங்களால் மேற்கூறிய கள்ளையும் இராமாயண காலத்தில் பார்ப்பார் அரசர் முதலியவர்கள் உண்டுவந்தார்களென விளங்குகின்றது. சீதை தனது புருஷனோடு கங்கையைக் கடக்கும் காலத்தில் நியமங் கொண்டு "கங்காதேவி! நான் மறுபடியும் பட்டணத்திற்கு சுகமாக போய் சேர்ந்தால் ஆயிரங் கட்குடங்களாலும் மாம்ஸத்துடன் கூடிய அந்நங்களாலும் பக்தியுடன் உன்னைப் பூஜிக்கிறேன்"§ என்னும் பகுதியிற்கூறிய கள்ளும்

---

* மைரேயம் என்பது தாதகீ புஷ்பம், வெல்லம், பொரி ஆகிய இவைகளாற் செய்யப்பட்ட மத்யம் என S. G. அநந்தாசாரியாருடைய அபிப்பிராயம்.

† ஆஸவம்-காய்ச்சாத கருப்பஞ் சாற்றினால் செய்யப்பட்ட மத்யம்.

§ "ஸுராகட ஸஹஸ்ரேண மாம்ஸபூதோ தநேநச, யக்ஷ்யேத்வாம் ப்ரயதாதேவி புரீம்புந ருபாகதா" வான்மீகி ராமாயணம், அயோத்தியாகாண்டம், 52-வது சர்க்கம் 89-வது சுலோகம்; ஷை 55-வது சர்க்கம், 20-வது சுலோகம்.

அரிசிமாவே! இந்தக் கள்ளையும் இராமாயண காலத்தில் எச்சாதியாரால் செய்யப்பட்ட தெனின்,

வால்மீகிராமாயணம், அயோத்தியாகாண்டம்.

83-வது சர்க்கம், 14-வது சுலோகம்.

ஸுவர்ணகாரா: ப்ரக்யாதா

ஸ்ததா கம்பளதாவகா: |

ஸ்நாபகோச்சாதகா வைத்யா

தூபகாஸ் ஸௌண்டிகாஸ்ததா ||

"சுவர்ண காரா: ப்ரக்யாதா/

ஸ்ததா கம்பள தாவகா:

ஸ்நாபகோ ச்சாதகா வைத்யா

தூபகாஸ் ஸௌண்டிகா ஸ்ததா"

(இ.ள்.) "பிரசித்தர்களான பொன் வேலைக்காரர்களும், கம்பளங்களை சுத்தப் படுத்துகிறவர்களும், எண்ணெய் தேய்ப்பவர்களும், உடம்பு பிடிப்பவர்களும், வைத்தியர்களும், தூபம் போடுகிறவர்களும், சௌண்டிகர்களும்." (இன்னும் மற்றவர்களும் பரதர் சித்திரக்கூட பர்வதஞ் சென்று ஸ்ரீராமரை அழைத்து வரப்போகுங்கால், பரதருடன் கூடச்சென்றார்கள்) என்பதாம். இச்சுலோகத்தில் கள் செய்பவர்களை சௌண்டிகர் எனக் கூறியிருக்கிறது. சௌண்டிகர் என்றால் சுண்டி=கள், அதைசெய்பவர் சௌண்டிகர் எனப்படுவர். இச்சௌண்டிகர் என்னும் பெயரை நமது சாதியார் சாதிப்பெயராகப் பெற்று வராமையால் நாம் சௌண்டிகர் ஆகோம்.

வான்மீகி ராமாயணம், யுத்தகாண்டம், 12)-வது சர்க்கம், 15-வது சுலோகம்.

ஸுஜீத வ்ருத்தி விஷண்ண க்ருஷ்ணவ ஸூதஹஸ்தவத்ஸ:

ஸைநா வீத்ருத்யாச்ச ஸ்ரேணீவத்தா ஹிரண்யஸ்ய ஸ்த்ரோத்ர கசோரசா:

"அஜித கட்க த்ருத் விஷ்ணு
க்ருஷ்ணச் சேய்வ புருஅத் பலா
சேனு சிர்க் கிராமணிஸ் சத்வம்
புத்திச் சத்யஞ் ஷமா தமா"

(இ-ள்.) "நந்தகமென்னும் கட்கத்தைக் கைக்கொண்டவனும், விஷ்ணுவும், கிருஷ்ணனும், அஸாதாரணமான ஸாமர்த்திய முடையவனும், தேவர்களது சேனைகளை நிர்வகிப்பவனும், கிராமணியும், ஸத்வமும், புத்தியும், க்ஷமையும், தமமும் தேவரீரே" என்று பிரமதேவர் ஸ்ரீராமரைத் துதித்தார்.

இச்சுலோகத்தில் நமது சாதியாருக்குரிய கிராமணி என்னும் பட்டப்பெயரை சௌண்டிகர் பெறுது, ஸ்ரீராமர் பெற்றிருத்தலால், அப்பட்டப் பெயரையுடைய நாம் அரச வம்ஸத்தவரே யாவோம். அதனால் சௌண்டிகர் வேறு சாதியார், சான்றார் வேறுசாதியார் எனப்படுவர்.

4. புராணகாலம்:—புராணங்கள் வியாசர் பாடியவை. வியாசர் கலியுகம் பிறப்பதற்கு முன் ஐந்தாறு தலைமுறைகளுக்கு முற்பட்டவர். அதனால் புராணகாலம் ஏழாயிரம் எண்ணாயிரம் வருடங்களுக்கு முற்பட்டிருக்கலாம். வியாசரால் பதினெண்புராணங்கள் இயற்றப்பட்டன. அவற்றுள், "சைவம், மார்க்கண்டேயம், பவுடிகம், இலிங்கம், வராகம், காந்தம், வாமனம், கூர்மம், மற்சம், வாயவியம்" என்னும் பத்தும் சிவ புராணங்களாம். "வைணவம், பாகவதம், நாரதீயம், காருடம்" என்னும் நான்கும் விஷ்ணு புராணங்களாம். "பிரமம், பதுமம்" என்னும் இரண்டும் பிரம புராணங்களாம். ஆக்கினேயம் அக்கினி புராணமும், பிரம கைவர்த்தம் சூரியபுராணமுமாம். இவற்றுள் சிவபுராணமாகிய சைவபுராணத்தைக் கவனிப்பாம்.

சைவபுராணம், 71-வது அத்தியாயம்.
8-வது சுலோகம்.

క్షత్రియాయాం సముత్పన్నః
శూద్రాత్ కుశల ఉచ్యతే।
సురాపైష్టిక మైరేయ
గౌడీమార్ద్వీక జీవనః॥

"க்ஷத்ரி யாயாம் ஸமுத் பந்நோ
சூத்ராத் குசல உச்யதே/
ஸுரா பைஷ்டிக மைரேய
கௌடி மார்த்விக ஜீவந://

(இ-ள்) "க்ஷத்திரிய ஸ்திரீக்கும், சூத்திரனுக்கும் பிறந்தவன் குசலன். இவனது தொழில் அரிசிமாவினால் செய்த கள்ளும், கரும்பு வெல்லத்தினால் செய்த கள்ளும், இலுப்பைப் பூவினால் செய்த கள்ளும் விற்பது" என்பதாம். அதாவது:—

"ஸுரா பைஷ்டிக மைரேய
கௌடி மார்த்விக ஜீவந://"
என்பதற்கு.

ஸுரா = கள்ளை. ("ஸுரா ஹலிப்ரியா ஹாலா பரிஸ்ருத் வருணாத் மஜா."* என்னும் அமரசுலோகத்தால் சுரா என்பது கள்ளைக் குறிக்கும்.)

பைஷ்டிகம் = அரிசிமாவினாலும். (மேலே பைஷ்டிகம் அல்லது அன்னமலம் என மநுவும், தாந்யமலம்

* அமரம், இரண்டாங்காண்டம், சூத்ரவர்க்கம், 729-வது சுலோகம்; வால்மீகிராமாயணம், அயோத்தியாகாண்டம், 91-வது சர்க்கம், 52-வது சுலோகம்.

என அமரசிம்மருங் கூறியிருத்தலால், பைஷ்டி கம் என்பது அரிசி மாவினால் செய்த கள்ளேயே குறிக்கும்.)

மைரேய கௌட=கரும்பு வெல்லத்தினாலும். ("மைரேய மாஸவஸ் ஸிது"* என்னும் அமர சுலோகத்தில் வரும் "மைரேயம்† ஆஸவ: ஸிது" என்னும் பெயர்கள் கரும்பின் சாற்றின் கள்ளேக் குறித்தலால், "மைரேய கௌட" என்பது கரும்பு வெல்லத்தினால் உண்டாகும் கள்ளேக் குறிக்கும்.)

மார்த்விகம்=இலுப்பை பூவினாலும். ("மத்வாஸவோ மாதவகோ மதுமார்த் விகம்"‡ என்னும் அமர சுலோகத்தில் வரும் "மத்வாஸவ: மாத்வக:, மது, மார்த்வீகம்" என்னும் நான்கு பெயர்களும் இலுப்பைப்பூவின் கள்ளேக் குறித்தலால், மேலே கூறிய மார்த்வீகம் என்பதும் இலுப்பைப் பூவின் கள்ளேயே குறிக்கும்.)

ஜீவந:=(செய்து விற்று) ஜீவித்து வந்தார்கள் எனப் படும்.

ஆகவே அரிசிமாவினாலும், கரும்பு வெல்லத்தினாலும், இலுப்பைப் பூவினாலும் புராணகாலத்தில் கள் செய்து

---

* அமரம், இரண்டாங்காண்டம், சூத்ரவர்க்கம், 732-வது சுலோகம்.

† "அந்யா:ஸ்ரவந்து மைரேயம் ஸுராமந்யாஸ் ஸுநிஷ்டிதாம்" வான்மீகிராமாயணம், அயோத்தியாகாண்டம், 91-வது சர்க்கம், 15-வது சுலோகம்.

‡ அமரம், இரண்டாங்காண்டம், சூத்ரவர்க்கம், 731-வது சுலோகம்.

ஜீவித்து வந்தார்களே யன்றி, தென்னை, பனை, ஈந்து மரங்களிலிருந்து கள் உற்பத்தி செய்துவந்ததாக விளங்க வில்லை. அப்பைஷ்டிகம் முதலிய மூவிதக் கள்ளும் புராண காலத்தில் எச் சாதியாரால் செய்து வந்ததெனின்? **குசலர்** என்னுஞ் சாதியாரால் செய்யப்பட்டு வந்ததென வறியலாம்.

"க்ஷத்ரி யாயாம் ஸமுத் பந்நோ,
சூத்ராத் குசல உச்யதே."*

(இ-ள்) "க்ஷத்திரியஸ்ரீக்கும், சூத்திரனுக்கும் பிறந்தவன் குசலன்" என்பதாம். இச் சுலோகத்தின் "சுரா பைஷ்டிகம்" என்னும் அடுத்த அடியை நோக்க இவனே கள் தொழிலுக் குரியவனென விளங்கும்.

அமரம், இரண்டாங் காண்டம், வைசிய வர்க்கம்,
618-வது சுலோகம்.

சுவாதி ஸொமதாந்யாமூ
கஞ்ஜலாநிசகாஞ்ஜிகெ

"அவந்தி ஸோம தாந்யாம்ல
குஞ்சலா நிச காஞ்ஜிகே"

இச்சுலோகத்தில் வெளிப்படும் "அவந்தி, சோம, தாந்யமலம், குஞ்ஜலா, நிசகாஞ்ஜிகே" என்னும் பெயர்கள் கள்ளைக் குறிக்கும். இவற்றுள் ஒன்றாகிய "குஞ்ஜலா" என்பது, இடை குறைந்து, "குஜலா" என நின்று, கள்ளை விளக்கி, அக் கள்தொழில் உடையாரை "குஜலன் (குசலன்)" என வெளிப்படுத்தும். இதனால் குசலன் என்பது கள்ளடியாகப் பிறந்த சாதிப்பெயரென விளங்கும். இக் குசலர் என்னும் பெயர் நமது சாதியாருக்கு சாதிப்

* சைவபுராணம், 71-வது அத்தியாயம், 8-வது சுலோகம்.

பெயராக என்றும் வழங்கவில்லை. அல்லது நமது சாதிப் பெயர்களாகிய "சான்றான், நாடான், கிராமணி" என்னும் பெயர்களின் கருத்திலும் சம்பந்தப் பட்டது மல்ல. ஆகவே, நாம் வேறு சாதியார், அக் குசலர் வேறு சாதியார் என வறியவும்.

கூர்மபுராணம், 39-வது அத்தியாயம்,
ஆதித்தமண்டல வர்ணனை, 19-வது சுலோகம்.

గన్ధర్వాప్సరసశ్చైవ నృత్తగీతై రుపాసతే ।
గ్రామణ్యోరక్షభూతాహి కుర్వతేఽభీశు సఙ్గ్రహమ్॥

கந்தர்வா ப்ஸரஸ ச்சைவன்ருத்த கீதைருபாஸதே
க்ராமண்யோ ரக்ஷபூதாஹி குர்வதே அபீசுஸங்க்ரகம்.

லிங்கபுராணம், 55-வது அத்தியாயம்,
சூர்யரத பரிமாணுதி, 57-வது சுலோகம்.

సేనజిచ్చ సుషేణశ్చ సేనానీ గ్రామణీశ్చతౌ ।
ఆపోవాతశ్చతావేతౌ యాతుధానా వుభౌస్మృతౌ ॥

சேனஜிச்ச ஸுஷேணஸ்ச சேனானீர் க்ராமணீச் சதௌ
ஆபோவாதச்சதாவேதௌயாதுதாநுவுபௌஸ்ம்ருதௌ.

ஆக்னேயபுராணம் 38-வது அத்தியாயம்.
நாநார்த்தவர்க்கம், 10-வது சுலோகம்.

మౌర్వ్యాం ద్రవ్యాశ్రితే సత్వ శుక్లసన్ధ్యాదికేగుణః ।
శ్రేష్ఠధిపే గ్రామణీస్స్యాత్ జుగుప్సా కరుణేఘృణే ॥

மௌர்வ்யாம்த்ரவ்யாச்ரிதேஸத்வ சுக்லஸந்த்யாதிகேகுண
ச்ரேஷ்டேதிபே க்ராமணீஸ்யாஜ்ஜுகுப்ஸா கருணேக்ருணே

* இச்சுலோகங்களுக்கு உரைமுதலியவை கிராமணி என்னுஞ் சொல் ஆராய்ச்சியின் கீழ் விளக்குவாம்.

மற்சபுராணம், 245-வது அத்தியாயம்,
வராகவதார சரித்திரம், 40-வது சுலோகம்.

యన్నదర్శితవానేష కస్తదన్వేష్టు మర్హతి ।
గ్రామణీ స్సర్వభూతానా మగ్నిమారుతయోర్గతిః ॥

யந்நதர் சிதவானே ஷகஸ்ததன்வேஷ்டு மர்ஹதி
க்ராமணீஸ் ஸர்வபூதாநா மக்நிமாருத யோர்கதிஃ

இச்சுலோகங்களில் வரும் **கிராமணி** என்பவை அரசர்களையே குறித்து நிற்றலால், சைவபுராணத்துள் கூறிய குசலர் வேறுசாதியார், கிராமணிகள் வேறுசாதியாரென அறியவும்.

5. சங்ககாலம்:—சங்ககாலம் ஏறக்குறைய இரண்டாயிரம் வருடத்திற்கு முற்பட்டதாகும். சங்கத்தவர்கள் இயற்றிய நூற்கள் "அகத்தியம், தொல்காப்பியம்" என்னும் இலக்கணங்களும்; "குண்டலகேசி, சீவகசிந்தாமணி, சிலப்பதிகாரம், மணிமேகலை, வளையாபதி" என்னும் பஞ்சகாவியங்களும், "நற்றிணை, குறுந்தொகை, ஐங்குறுநூறு, பதிற்றுப் பத்து, பரிபாடல், கலித்தொகை, அகநானூறு, புறநானூறு" என்னும் எட்டுத் தொகையும், "திருமுருகாற்றுப்படை, பொருநராற்றுப்படை, சிறுபாணாற்றுப்படை, பெரும்பாணாற்றுப்படை, முல்லைப்பாட்டு, மதுரைக்காஞ்சி, நெடுநெல்வாடை, குறிஞ்சிப்பாட்டு, பட்டினப்பாலை, மலைபடுகடாம்" என்னும் பத்துப்பாட்டும், "நாலடி, நான்மணிக்கடிகை, இனியது நாற்பது, இன்னா நாற்பது, களவழி நாற்பது, கார் நாற்பது, ஐந்திணையம்பது, ஐந்திணையெழுபது, திணைமொழியைம்பது, திணைமாலை நூற்றைம்பது, திருக்குறள், திரிகடுகம், ஆசாரக்கோவை, பழமொழி, சிறுபஞ்சமூலம், முதுமொழிக்காஞ்சி,

வலாதி, கைந்நிலை'' என்னும் பதினெண் கீழ்க்கணக்கும் முதலியனவாம். இச் சங்கநூற்களைக் கொண்டு கள் உற்பத்தியான வகையையும், அது செய்தாரையும் ஈண்டு ஆராய்வாம்

மணிமேகலை, ஆதிரை பிச்சையிட்ட காதை,
66, 67-வது வரிகள்.

"கள்ளடு குழிசியுங் கழிமுடை நாற்றமும்
வெள்ளென் புணங்கலும் விரவிய விருக்கையில்"

(இ-ள்) "கள் காய்ச்சும் பானையும், மிக்க புலால் நாற்றமும், மாமிச வற்றலும் நெருங்கிய வீட்டில்'' என்பதாம். இதில் வரும் "கள்ளடு குழிசியும்'' என்பதற்கு,

கள்=கள்ளை (அரிசிமாவினால் செய்த கள்)

அடு=சமைக்கும்("அடுதலே யட்டலென்ப"* என்னுஞ் சூடாமணி நிகண்டிலும், "அடுதன் மிறைசெயல்''† என்னுந் திவாகரத்திலும், "அடப்படுவதடிசில்''‡ என்னும் பிங்கல நிகண்டிலும் அடுதல் என்பது சமைத்தல் என்னும் பொருள் கொண்டமை காண்க.)

குழிசியும்=பானையும்("தடாவுங் குழிசியு மிடாவும் பானை''§ என்னுந் திவாகரத்திலும், "குண்டமு மிடாவுங் குழிசியும் பானை"¶ என்னும் பிங்கல

* சூடாமணி நிகண்டு, 11-வது தொகுதி, டகரவெதுகை, 27-வது சூத்திரம்.

† திவாகரம், பதினோராவது தொகுதி.

‡ பிங்கலநிகண்டு, ஆறுவது அநுபோகவகை, 58-வது சூத்திரம்; திவாகரம், ஆறுவது தொகுதி.

§ திவாகரம், எழாவது தொகுதி.

¶ பிங்கலநிகண்டு, ஆறுவது அநுபோகவகை, 641-வதுசூத்திரம்.

நிகண்டிலும் குழிசி என்பது பானை என்னும் பொருள் கொண்டமை காண்க.)

மணிமேகலையில் "கள்ளடு குழிசி" எனக் கூறியதைப் போல் "சோறடு குழிசி" என பெரும்பாணாற்றுப்படை, 366-வது வரியுள் வருவதுங்காண்க. "சோறு=சோற்றை, அடு=சமைக்கும், குழிசி=பானை" எனப் பொருள் கொள்ளும். "பாகடு குழிசி"† என சிலப்பதிகாரத்துள் விளங்குவதும், "பாகடு=செம்புருக்கும், குழிசி=மிடா" எனப் பொருள் கொள்ளும். இத்தகைய பிரமாணங்களால் "கள்ளடு குழிசி" என்பது, "அடுப்பிலேற்றிக் காய்ச்சியகள்" எனப் பொருள் கொள்ளும்.

புறநானூறு, 172-வது அகவல்.

"ஏற்றுக வுலையே யாக்குக சோறே,
கள்ளுங் குறைபட லோம்புக"

(இ-ள்) "உலையை ஏற்றுக, சோற்றை ஆக்குக, மதுவையும் நிறைய உண்டாக்குக" என்பதாம். இதில் வரும் "கள்ளுங் குறைபட லோம்புக" என்பது "கள்ளும்=கள்ளும், குறைபடல்=நிறைய, ஓம்புக=ஆக்குக" எனப் பொருள் கொள்ளும். இப்பகுதியாலும் கள் அடுப்பிலேற்றி காய்ச்சியதாக விளங்குகின்றது.

புறநானூறு, 329-வது அகவல்.

"இல்லடு கள்ளின் சில்குடிச் சீறூர்"

(இ-ள்) "வீட்டில் காய்ச்சுங் கள்ளையுடைய, சில குடியை யுடைய சிற்றூர்" என்பதாம். இதில்வரும் "இல்லடு கள்" என்பதற்கு "இல்=வீட்டில், அடு=காய்ச்சும், கள்=கள்" எனப் பொருள் கொள்ளும். இப்பகுதியால் கள் வீட்டில் காய்ச்சியதாக விளங்குகின்றது.

† சிலப்பதிகாரம் அடைக்கலக்காதை, 209-வது வரி.

சீவகசிந்தாமணி, கேமசரியாரிலம்பகம்,
140-வது செய்யுள்.

"அளைவது காம மடூறவு
நெய்யொழுகு மூனும் பின்னு
விளைவது தீவினையே கண்ட
ரிவைமூன்றும் விடுமி னென்றாற்
றளையவிழ் கோதையார் தாமஞ்சேர்
வெம்முலைபோல் வீங்கிக் கண்சேந்
துளைய வுறுதி யுரைப்பாரை
யோஓர்பாவ முணரா ரேகாண்"

(இ-ள்) "அருந்துவதாகிய காமத்தாலும் கள்ளாலும், ஊனாலும் பின்பு விளைவது தீவினையே காணுங்கோள்; இவை மூன்றையும் கைவிடுங்கோளென்று பிறர்க்குக் கூறினால், இங்ஙனம் தாம் வருந்தக் காரியங் கூறுவாரை முலைபோற் பொருமிக் கோபித்து உணரார்காண்; ஓ! இஃதொருபாவ மிருந்தபடி என்னென்றானென்க." இச் செய்யுளில் கள்ளை அடூறவு எனக் கூறி, சமைத்தகள் என்கின்றார்.

சீவகசிந்தாமணி, பதுமையாரிலம்பகம்,
32-வது செய்யுள்.

"ஆங்க வெல்லை யிசந் தடு தேறலும்
பூங்கட் பொற்குட முந்நிறைத் தீண்டிய
வேங்கு கம்பலத் தின்னிசை சூழ்வயற்
றுங்கு சீர்த்தக்க நாட்டணி காண்டியே"

(இ-ள்) "அந்தக் கடத்தின் எல்லையைக் கடந்து போய் அடூறவும், பூவாலாக்கின மதுவும் பொற்குடங்களிலே நிறைத்தலாலே அதனையுண்டு பாடுகின்ற இன்னிசையீண்டிய கம்பலத்தைச் சூழ்ந்த வயலினையும் சீரினையு

முடைய தக்க நாட்டினழகைக் காண்பாயென்க" என்பதாம். இச்செய்யுளில் அடுதேறல் எனக் கூறி, காய்ச்சிய கள் என விளக்குகின்றார்.

பரிபாடல், 21-ம் பாடல், 20-வது வரி.

"யடுநறு மகிழ்தட்ப வாடுவா டகைமையின்"

(இ-ள்) "காய்ச்சிய கள்ளையுண்ட மகிழ்ச்சி தடுப்ப ஆடுவாள் அழகு காரணமாக" என்பதாம். பின்னும் "ஈப்பா யடுநறுக் கொண்டதிவ் யாறெனப்"*எனப் பரிபாடலும் விளக்கும்.

பெரும்பாணாற்றுப்படை, 339-வது அடி.

"கள்ளடு மகளிர் வள்ள நுடக்கிய"

(இ-ள்) "கள்ளைச் சமைக்கின்ற மகளிர் வட்டில் கழுவின" என்பதாம். மேல் செய்யுட்க ளெல்லாம் கள் அடுப்பிலேற்றி சமைத்தல் என விளக்குகின்றன. இதில் பெண்களே சமைத்ததாக விளங்குகின்றது.

சீவகசிந்தாமணி, பதுமையாரிலம்பகம்,
68-வது செய்யுள்.

"ஊழினீ ருண்ப தென்னென்
றுரைத்தலு முவந்து நோக்கி
மோழலம் பன்றி யோடு
முளவுமாக் காதியட்ட
போழ்நிணப் புழுக்கறேனைப்
பொழிந்துகப் பெய்து மாந்தித்
தோழயாம் பெரிதுமுண்டுந்
தோண்டிக்க ளிதனையென்றான்"

(இ-ள்) "முறையால் நீர் உண்பதென்னென்று கேட்டபின், உவந்து பார்த்து, தோழ! ஆண்பன்றி

* பரிபாடல், 171-வது பக்கம்.

யோடே எய்ப் பன்றியையுங் கொன்று சமைத்த புழுக்க லைத் தேனை மிக வார்த்துத் தின்று, பின்பு நெல்லா லாக்கின கள்ளாகிய இதனையும் உண்பே மென்றுனென்க" என்பதாம். இதில்வரும் "தொண்டிக்கள்" என்பதற்கு "நெல்லாலாக்கின கள்" என நச்சினார்க்கினியார் உரை எழுதியுள்ளார்.

பெரும்பாணாற்றுப்படை, 142-வது அடி.

"இல்லடு கள்ளின் றேப்பி பருகி"

(இ-ள்) "இல்=வீட்டில், அடு=சமைக்கும், தோப் பிக் கள்ளின்=நெல்லரிசிக்கள்ளை, பருகி=சாப்பிட்டு" என் பதாம். அதாவது "தமது இல்லிலே சமைத்த கள்ளுக ளில் இனிதாகிய நெல்லாற் செய்த கள்ளை யுண்டு" என் பதாம்.

அகநானூறு, 35-வது அகவல், 9-வது அடி.

"தோப்பிக் கள்ளொடு துரூஉப்பலி கொடுக்கும்"

(இ-ள்) "அரிசிக் கள்ளோடு பலியுங் கொடுக்கும்" என்பதாம். "தோப்பிக்கள்" என்றால் "நெல்லரிசிகள்" எனப் பொருள் கொள்ளும்- இந் நெல்லரிசி கள்ளையே மநுவும் வியாசரும் "பைஷ்டிகம்" எனக் கூறியது. ஆகவே, கள் சங்ககாலத்தில் அடுப்பிலேற்றி காய்ச்சியதாக விளங்கலால், சைவபுராணம், மநுஸ்மிருதிகளில் கூறிய படி அரிசிமாவோடு சில சாமான்கள் சேர்த்து உண்டாக் கியதென விளங்குகின்றது.

சீவகசிந்தாமணி, குணமாலையாரிலம்பகம்,
89-வது செய்யுள்.

"அழலம் பூநற வார்ந்தழ லூர்தரச்
சுழலுங் கண்ணினன் சோர்தரு மாலையன்

கழலன் காழகம் வீக்கிய கச்சையன்
மழலைச் சொற்களின் வைதிவை கூறினன்"

(இ-ள்) "தீம்பூவாலாக்கின நறவை அஞ்சனமருந்து தலாலே வெம்மை பரக்கும்படி சுழலுங் கண்ணினனாய் மாலையினனாய்க் கழலனாய் வீக்கின கருங் கச்சையனாய் மழலைச் சொற்களாலே வைது மேல் இவ்வார்த்தையைக் கூறினனென்க" என்பதாம்.

இக்கள்ளை புறநானூறும், 396-வது அகவலில் "நனைகள்" என்றார். நனை=பூ. இப்பூவாலாக்கிய கள்ளையே மநுவும், வியாசரும், மார்த்வீகம் எனக்கூறியது.

மணிமேகலை, சமயக்கணக்கர் தந்திறங் கேட்டகாதை, 264, 265-வது வரிகள்.

"தாதகிப் பூவுங் கட்டியு மிட்டு,
மற்றுங் கூட்ட மதுக்களி பிறந்தாங்"

(இ-ள்) "தாதகிப்பூவும்=ஆத்திப்பூவும்,† கட்டியும்=கருப்புக்கட்டியும், மற்றும்=கூட்டற்குரிய மற்றப்பொருள்களையும், இட்டு=ஒன்று சேர்த்து, கூட்ட=கூட்ட, மதுக்களிபிறந்தாம் = களிப்பைத்தரும் கள் உண்டாயினது" என்பதாம். இக்கரும்புக்கட்டியாலாகிய கள்ளையே மநுவும், வியாசரும், வால்மீகரும் மைரேயம் எனக் கூறியது. இவ்வெல்லக்கள்ளும் "மைரேய மாஸவஸ் ஸிது"§ என்னும் அமரசுலோகத்தால் "மைரேயம், ஆஸவம், ஸிது" என்னும் மூன்று பெயர்களைப்பெற்று, மூன்றுவிதமாகச் செய்யப்பட்டு வந்தது. அவற்றுள் மைரேயம் என்பது

† "ஆரே தாதகி யாத்தி யாகும்" திவாகரம், மரப்பெயர்த் தொகுதி.

§ அமரம், இரண்டாங்காண்டம், சூத்திரவர்க்கம், 732-வது சுலோகம்.

மந்தாரைப்பூ, கரும்புவெல்லம், கழுநீர் என்பவைகளி னால் செய்யுங் கள்ளாகும். ஆஸவம் என்பது பக்குவமா காத கரும்பு ரசத்தினால் செய்யுங் கள்ளாகும். ஸீது என் பது பக்குவமாகிய கரும்பு ரசத்தினால் செய்யுங் கள்ளா கும். ஆகவே, புராணகாலத்தில் செய்தனுபவித்த "மைரே யம் தாதகி புஷ்பகுட தாங்யாம்" என்னுஞ் சுலோகத்தில் வெளிப்படும் "மைரேயம், பைஷ்டிகம், மார்த்விகம்" என் னும் மூவிதக்கள்ளும் சங்ககாலத்திலும் விசேஷமாகக் கையாண்டு வந்ததாக விளங்குகின்றது. இச்சங்ககாலத் திற்கு 400-வருடத்திற்குப் பிற்பட்ட அமர நூலாசிரிய ரும் இம்மூவிதக்கள்ளையே விளக்கியுள்ளார். அதனால் சங்க காலத்தில் பனமரத்திலிருந்தாவது, ஈச்சமரத்திலிருந்தா வது, தென்னமரத்திலிருந்தாவது கள் உற்பத்தி செய்து வந்ததாக நூற்பிரமாணம் ஏற்படவில்லை. ஆனால், பட்டி னப்பாலை, 89-வது வரியில் "பிணர்ப் பெண்ணைப் பிழி மாந்தி யும்" என்னும் பகுதியில் "பனையின் கள்ளை யுண்டார்கள்" என விளங்குவதால், சங்க காலத்திலும் பனங்கள் உண்டெ னக் கூறுவர். அக்கள் அக்காலத்தில் அவ்வளவு விசேஷித் ததாகக் காணவில்லை. என்றாலும் அக்காலத்தில் தென்ன மரம், பனமரங்கள் இல்லையெனவுஞ் சொல்லமுடியாது. அதிகமாகவே இருந்தன. அவைகளின் பலன்களாகக் கள் தவிர மற்றவைகளையே விசேஷமாகக் கொள்ளப்பட்டது.

சங்ககாலத்தில் தென்னை பனை மரங்களில்
உண்டாகிய பலன்கள்.

சீவகசிந்தாமணி, இலக்கணையாரிலம்பகம்,
25-வது செய்யுள்.

"வருக்கை யின்பழம் வாழையின் கனி
திருக்கொண் மாங்கனி தெளிந்த தேறலைக்

கருப்புச் சாற்றொடு கலந்து கைசெய்து
புரித்த தெங்கிள நீரும் பூரிப்பார்''

புறநானூறு, 29-வது அகவல், 15-வது வரி.

"தெங்கி, னிளநீ ருதிர்க்கும் வளமிகு நன்னாடு''

இவ்விரு பகுதிகளாலும், சங்ககாலத்தில் தேங்கிள நீர் உண்டெனை விளக்குகின்றது.

சீவகசிந்தாமணி, நாமகளிலம்பகம்,
2-வது செய்யுள்.

"காய்மாண்ட தெங்கின் பழம் வீழக் கமுகி னெற்றிப்
பூமாண்ட தீந்தேன் றொடைகீறி வருக்கை போழ்ந்து
தேமாங் கனிசிதறி வாழைப் பழங்கள் சிந்து
மேமாங் கதமென் றிசையாற் றிசைபோய துண்டே''

புறநானூறு, 61-வது அகவல், 9-வது வரி.

"தெங்குபடு வியன்பழ முனையிற் றந்தையர்''

என்னும் இவ்விரு பகுதிகளும் தேங்காயை விளக்குகின்றது.

புறநானூறு, 24-வது அகவல். "முண்டகக் கோதை யொண்டொடி மகளி, ரிரும் பனையின் குரும்பை நீரும், பூங் கரும்பின் றீஞ் சாறு, மோங்கு மணற் குவவுத் தாழைத்,தீ நீரோ டுடன் விரா அய், முந்நீருண்டு'' என்பதற்கு "மாலையை யுடைய விளங்கிய வளையை யணிந்த மகளிர் பெரிய பனையினது நுங்கின்நீரும், பொலிவினை யுடைய கரும்பினது இனிய சாறும், உயர்ந்த மணலிடத்துத்திரண்ட தெங்கினது இனிய இளநீருடனே கூடக்கலந்து இம்மூன்று நீரையும் உண்டு'' என்பதாம்.

புறநானூறு, 225-வது அகவல், "தலையோர் நுங்கின் றீஞ்சேறு மிசைய, விடையோர் பழத்தின் பைங்கனி மாந்தக், கடையோர் விடுவாய்ப் பிசி ரொடு சுடுகிழங்கு நுகர, நிலமலர் வையத்து வலமுறை வளை இ" என்பதற்கு "முன்செல்லும் தூசிப்படையோர் பனையின்கணுளதாகிய நுங்கி னது இனிய செறிவைஅயில, இடைசெல்வோர் பழத்தினது செவ்விக் கனியைநுகர, பின்செல் வோர் நீங்கிய வாயையுடைய பிசிருடனே சுடப்பட்ட கிழங்கினை நுகர இப்படி யொழுங் குடைத்தாகி இடமகன்ற உலகத்து வலமுறை யாகச் சூழ்ந்து" என்பதாம்.

புறநானூறு, 389-வது அகவல். "நீர் நுங்கின் கண் வ்விப்ப" என்பதற்கு "நுங்கினது நீரையுறிஞ்ச" என்பதாம்.

புறநானூறு, 265-வது அகவல். "போந்தையந் தோட் டின் புனைந்தனர் தொகுத்து" என்பதற்கு "பனையோலையா லலங்கரித்துத் தொகுத்து" என்பதாம்.

புறநானூறு, 61-வது அகவல். "பெண்ணைப் பழந் தொட முயலும்" என்பதற்கு "பனையினது பழத்தைத் தொடுதற்கு முயலும்" என்பதாம்.

புறநானூறு, 177-வது அகவல். "இரும்பனங் குடை யின் மிசையும்" என்பதற்கு "பெரிய பனையோ லையா னியன்ற குடையிலே நுகரும்" என்ப தாம். தற்காலத்திலும் பட்டைகட்டி சள்குடிப் பதும், கஞ்சிகுடிப்பதும் நாட்டின் வழக்கமா யிருக்கிறது.

ஆகவே, மேற்கூறிய பகுதிகளால் சங்ககாலத்தில் தென்னமரத்திலிருந்து "இளநீரும், தேங்காய்ப்பழமும்" பனைமரத்திலிருந்து "பனையோலை, பனையோலைப்பட்டை, நுங்கு, பனம்பழம், பனங்கிழங்கு"* முதலியவைகளும் உற்பத்தியாயினவென விளங்குகின்றன. அவற்றோடு "கள்ளும்" உற்பத்தியானதாக விளங்கவில்லை. கள்ளும் உற்பத்தியாயிருக்குமேல் சங்க நூற்களில் கருப்புக்கட்டியைக் கூறியிருத்தலைப்போல், பனைக்கட்டியையும் கூறியிருப்பர். பனைக்கட்டி கரும்புக்கட்டிக்குப் பிந்தின தென்னும் உண்மையை ருசுப்படுத்துதற்கே "கர்ப்பட்டி" என்னும் பெயரை பனைவெல்லம் ஏற்று•நின்றது. "கரும்பு+கட்டி=கரும்புக் கட்டி" என்னும் பெயரே "கருப்புக்கட்டி, கர்ப்புக் கட்டி. கர்ப்பட்டி" என நாளாவட்டத்தில் சிதைந்து வழங்கிவருகின்றது. சங்ககாலத்தில் அதாவது சங்கநூற்களில் கரும்புக்கட்டியையும், கரும்பின்சாற்றையும் விளக்கினவர்கள் பனைக்கட்டியையும், பனஞ்சாற்றையும் விளக்கவில்லை. அதனுல் கரும்புவெல்லம் முந்தினதும், பனைவெல்லம் பிந்தினதுமாகும். முதலில் கரும்புக்கட்டி யுண்டாகி வெகுகாலத்திற்குப் பிறகு பனைக்கட்டி யுண்டாகியதால், முதலில் ஏற்பட்ட கரும்புக்கட்டியின் பெயரையே, பனையிலுண்டாகிய பனைக்கட்டிக்கும் இடப்பட்டது. இக்காலத்தில் சத்தியத்தைப் பேசுபவனை அரிச்சந்திரன் என்பதைப் போலவும், இல்லை என்ளுது கொடுப்பவனை கர்னன் என்பதைப் போலவும், கரும்புக்கடிட்டையைப்போல் ரூபத்திலும், ருசியிலும், குணத்திலும் பனைக்கட்டி ஒத்திருத்தலால் முந்தினதாகிய கரும்புக்கட்டியின் பெயரே, பிந்தினதாகிய பனைக்கட்டிக்கும் இட்டார்கள். இது உலகவழக்கு.

* இத்தகைய பிரயோகங்கள் சங்கநூற்களில் இன்னும் பல உள.

ஆயின் சிலர் பனைக்கு "கற்பகத்தரு" என்னும் பெயர் ஒன்று உண்டெனவும், அதனால் அக்கற்பகத் தருவிலிருந்து உண்டாகும் பனைவெல்லத்திற்கு "கற்புக்கட்டி" என்று அழைக்கப்படுமெனவுங் கூறுவர். இது தவறு. பனைக்குக் "கற்பகத்தரு" என்னும் பெயர் நெடுகினுங் கிடையாது. சில அங்கிலேயர் வகையிலாது கூறினும் அது பிரமாணமாகாது.

"பெண்ணை தாலம் புற்றாளி போந்தை யென்
றெண்ணிய நாமம் பனையென விசைப்பர்"*

என்னுந் திவாகர நிகண்டிலும் பனைக்கு "தாலம், தாளி, புல், பெண்ணை, போந்தை" என்னும் பெயர்களே உரியதெனக் கூறியுள்ளது. இவற்றோடு "கற்பகம்" என்னும் பெயரும் ஒன்றுண்டாயின் அதையுஞ் சேர்த்துக் கூறியிருப்பர்.

சில புராணங்களில் தெரிவித்திருக்கும் "கற்பகத்தரு" வென்பதும் பனையைக்குறிக்காது. சோலைகளைச் சிறப்பிக்க கற்பகத்தருவும் உண்டெனக் கூறினார்களே யன்றி, வேறன்று. உரையாசிரியர்களும் "கற்பகத்தரு" என்பதற்கு "பனை" எனப்பொருள் கூறினார்களில்லை. இதற்கொரு பிரமாணம்,

தஞ்சைவாணன் கோவை, களவியல்,
முதற்செய்யுள்.

"புயலே சுமந்து பிறையே
யணிந்து பொருவி லுடன்
கயலே மணந்த கமல
மலர்ந் தொரு கற்பகத்தின்

---

* சேந்தன் திவாகரம், மரப்பெயர்த் தொகுதி.

அயலே பசும்பொற் கொடிநின்ற
தால்வெள்ளை யன்னஞ் செந்நெல்
வயலே தடம் பொய்கை
சூழ்தஞ்சை வாணன் மலயத்திலே"

இச்செய்யுளில் கற்பகத்தரு பொதிய மலையிலிருந்த தாகக் கூறியுள்ளது. அப்படிக் கூறியதைச் சுட்டி:—"புவியின்கண் கற்பகத்தரு கூறினது குற்றமெனின் குற்ற மன்று. என்னை? தேவரிருக்கு மிடத்து கற்பகத்தருவும் இருக்குமென்பது துணிபு. அன்றியும், குறுமுனியிருக்கும் மலையாதலானுங் கூறப்படும்" என சமாதானங் கூறி யுள்ளது. இவ்விதமிருக்க பனையை கற்பகத்தருவென கூறு வது எங்ஙனம் பொருந்தும்? ஆகவே கற்பகத்தருவென்பது பனையைக் குறிக்காது. கற்பகத்தரு திருப்பாற்கடலை கடையும்போது அதில் அகப்பட்டதாகவும், அதை தேவேந்திரனுக்குக் கொடுத்ததாகவும் புராணசம்பிரதாயம். அத்தரு கேட்டதெல்லாங் கொடுக்கக்கூடியதே யன்றி* கள் தரும் மரமெனக் கூறப்பட்டில்லை. கள் தரவுமில்லை.

அமிர்தத்தை தேவர்கள் உண்டார்களே எனின், அவ்வமிர்தம் கற்பகத்தருவி லிருந்து உண்டானதல்ல. அது வும் திருப்பாற்கடலி லிருந்து கற்பகத்தருவோடு உண்டான தாகப் புராண சம்பிரதாயம். அது நீடிய ஆயுளைத் தரு வது. கள் ஆகாது.

இன்னுஞ் சிலர் பனை தேவேந்திரன் பட்டணத்தி லிருந்து கொண்டு வந்தமையால் அதற்கு "சொற்கப்பனை" எனப்பட்ட தென்றுங் கூறுவர். அதுவுந் தவறு. பனையை சொற்கலோகத்தி லிருந்து கொண்டுவந்திருப்பின், அத

* கற்பகம் வேண்டக் கொடுத்தலும், கார் வேண்டாமைக் கொடுத்தலும் இயல்பு.

ளோடு சம்பந்தப்பட்ட தென்னையை எங்கிருந்து கொண்டு வந்தார்கள்? அதற்கு "சொற்கத்தென்னை, கற்பகத்தரு" என்னும் பெயர்கள் கிடைத்திலவே. அப்படி அதற்குக் கிடையாமையால் பனைக்கும் கிடையாதென வறியவும். "சொற்கப்பனை" என்பது மாத்திரமல்ல, "சொக்கப்பானை" எனவும் அழைப்பர். இப்பெயர்கள் பனைமரத்தைக் குறிக்காது. கார்த்திகை மாதத்தில் கிருத்திகை நட்சத்திரத்தில் திருவண்ணுமலையில் பிர்மன் விஷ்ணு ஆகிய இருவருக்கும் மத்தியில் சிவபிரான் அக்னி சொருபமாகக் காணப் பட்டதாகவும், அதை முன்னிட்டு, அந்நட்சத்திரத்தில் ஒவ்வொரு ஆலயத்தின் முன்னும் உலர்ந்த பனையோலையை ஒன்றின்மே லொன்ருக அடுக்கிக் கட்டி தீமூட்டுவது வழக்கம். அதைத்தான் "சொக்கப்பானை" என்றழைப்பர். "சுட்கிப்பனை" என்பதே "சொக்கப்பானை" எனப்படும். "சுட்கிப்பனை" என்ருல், சுட்கி=உலர்ந்த, பனை=பனையோலையாகும். அதாவது உலர்ந்த பனையோலையாகும். இச்சுட்கிப்பனையே நாளாவர்த்தியில் சிதைந்து சொக்கப்பனை எனவும், சொக்கப்பானை எனவுமாயிற்று. இவ்வளவே யன்றி பனையை சொற்கலோகத்தி லிருந்தும் கொண்டுவரவில்லை எனவறிவர்.

இனி சங்ககாலத்தில் கள்ளைச்செய்து விற்றவர்கள் எச்சாதியார் எனவாராய்வாம்? வலைச்சியர், நுளைச்சியர், பரதவர், பழையர் என்னும் சாதிப்பெயர்களைப் பெற்றவர்களே சங்ககாலத்தில் கள்விற்றவர்களென விளங்குகின்றனர்.

சிலப்பதிகாரம், இந்திர விழவூரெடுத்த காதை,
24, 25-வது வரிகள்.

"காழியர் கூவியர் கண்ணெடை யாட்டியர்,
மீன்விலைப் பரதவர் வெள்ளுப்புப் பகருநர்"

(இ-ள்) காழியர்=பிட்டுவாணிகர், கூவியர்=அப்பவாணிகர், கள்=கள்ளை, நொடை=விற்கும், ஆட்டியர்=வலைச்சியர், மின்விலைப் பரதவர்=மீன்விற்கும் பட்டினவர், வெள்ளுப்புப் பகருனர்=உப்புவிற்போர்" என்பதாம். "கள்+நொடை+ஆட்டியர்=கண்ணொடையாட்டியர்" எனப்பிரிந்து புணரும். "நொடை யென்கிளவி விலையென நுவல்வர்"* என்னும் பிங்கல நிகண்டால் "நொடை" என்பது "விலை" என விளங்கும். இதில் கள்விற்பவரை அடியார்க்கு நல்லார் வலைச்சியர் எனப் பொருளெழுதி யிருக்கிறார்.

மணிமேகலை, சுச்சிமாநகர் புக்ககாதை,
31, 32-வது வரிகள்.

"பன்மீன் விலைஞர் வெள்ளுப்புப் பகருநர்
கண்ணொடை யாட்டியர் காழியர் கூவியர்"

(இ-ள்) "மீன்விலைஞர் = மீன்விலைப் பரதவர், வெள்ளுப்புப் பகருநர் = உப்புவிற்கும் உமணர், கள்=கள்ளை, நொடை=விற்கும், ஆட்டியர்=வலைச்சியர், காழியர்=பிட்டுவாணிகர், கூவியர்=அப்பவாணிகர்" என்பதாம். இதிலும் கள் விற்பவரை மகாமகோபாத்தியாயர்,† வே. சாமிநாத ஐயர் அவர்களும் வலைச்சியர் எனப்பொருள் எழுதியிருக்கின்றார். இவ்விரு பிரயோகங்களையும் நோக்க சங்ககாலத்திலும், அதற்குப்பிற்பட்ட அடியார்க்கு நல்லார் காலத்திலும் கள்விற்றவர் "வலைச்சியர்" என்னுஞ் சாதிப்பெயரைப் பெற்றிருந்தார்களென விளங்குகின்றது. இவ் "வலைச்சியர்" என்னும் பெயர்,

---

* பிங்கலநிகண்டு, 7-வது வகை, 535-வது சூத்திரம்; சூடாமணிநிகண்டு, செயல்பற்றிய பெயர்த்தொகுதி, 64-வது சூத்திரம்; சிலப்பதிகாரம், கடலாடுகாதை. 139-வதுவரி.

† மகாமகோபாத்தியாயரும் சங்ககாலத்தை அனுசரித்து பொருளெழுதியுள்ளார்.

"பரதவர்* நுளையர் கடலர் வலையர்
சலவர் திமிலர் நெய்தனில மாக்கள்"

என்னுந் திவாகரம், பிங்கலம், சூடாமணி நிகண்டு களின் சூத்திரங்களில் விளங்கும் நெய்தநில மக்களாகிய பரதவப் பெண்களுக்கு உரியது. பரதம்=சமுத்திரம், அதில் வசிப்பவர் பரதவர் எனப்படுவர்.

பொருந ராற்றுப்படை, 214, 215-வது வரிகள்.

"தேனெய் யொடு கிழங்கு மாறியோர்
மீனெய் யொடு நறவு மறுகவும்"

(இ-ள்) "(குறவர்கள்) தேனாகிய நெய்யோடே கிழங்கையும் மாறி, (பரதவரிடமிருந்து) மீனினது நெய்யோடே நறவையும் கொண்டுபோகவும்" என்பதாம். அதாவது குறவர் "தேனையும், கிழங்கையுங் கொடுத்து, மீனையும், கள்ளை யும்" பரதவரிடமிருந்து கொண்டு போனார்கள் என்பதாம்.

சிறுபா ணாற்றுப்படை, 158, 159-வது வரிகள்.

"நுதிவே லோக்கி னுளைமக ளரித்த
பழம்படு தேறல்† பரதவர் மடுப்பக்"

(இ-ள்)"வேல்போலும் பார்வையினையுடைய நுளைச் சாதியிற் பிறந்த மகளாலே அரிக்கப்பட்ட, பழைதாகிய களிப்பு மிகுகின்ற சட்டெளிவைப் பரதவர் எடுத்து வந்து வாயிடத்தே வைக்க" என்பதாம். இதில் நுளைச்சிகள் சமைத்ததாகவும், பரதவர் கள் குடித்ததாகவுங் கூறியுள் ளது. நுளைச்சி என்பது பரதவரின் ஒருபொருட் கொண்ட சாதிப்பெயராகிய நுளையர் என்பதின் பெண்பால் பெயர்.

* பரதவர் அல்லது பரவருடைய வாழ்க்கையைப் பத்துப் பாட்டு, பட்டினப்பாலையில் பார்க்க.

† பழம்படு தேறல்—புளித்தக் கள்.

மலைபடுகடாம், 459-வது வரி.

"பகன்றைக் கண்ணிப் பழையர் மகளிர்"

(இ-ள்) "பகன்றைப் பூவாற் செய்த கண்ணியை யுடைய கள்விற்கும் வலையருடைய மகளிர்" என்பதாம். இப்பிரமாணத்தால் பரதவராகிய வலையர் சங்ககாலத்தில் பழையர் என்னும் பெயரையும் பெற்றிருந்தார்கள் என்பது நச்சினார்க்கினியர் அபிப்பிராயம். நச்சினார்க்கினியர் காலத்திலும் அதாவது 14-ம் நூற்றாண்டிலும் பரதவரையே பழையர் என வழைக்கப்பட்டிருந்ததாக விளங்குகின்றது. "பழை=கள், அதைச்செய்பவர் பழையர்" எனப்படுவர். ஆகவே, சங்ககாலத்தில் நெய்தநில மக்களாகிய "பரதவர்—பரத்தியர், நுளையர்—நுளைச்சியர், வலையர்—வலைச்சியர்" என்பவர்களால் கள்சமைத்து உண்டதாக விளங்குகின்றது. நாம் நெய்தநில மக்களாகோம். "பரதவன், நுளையன், வலையன், பழையன்" முதலிய சாதிப்பெயர்களும் நமக்குரிய சாதிப்பெயர்களாகாது. அப்பெயர்கள் நமக்கு இன்றளவும் வழங்கி வரவுமில்லை. அதனால் கள்தொழிலை சங்ககாலத்திலும் அதற்குப்பிறபட்ட காலமாகிய நச்சினார்க்கினியர் காலத்திலும் அதாவது 14-வது நூற்றாண்டிலும், நமது சாதியார் செய்தார்களில்லையென வறியலாம்.

பதிற்றுப் பத்து, இரண்டாம் பத்து,
4-வது அகவல்.

"நோன்புரித் தடக்கைச் சான்றோர் மெய்ம்மறை"

பதிற்றுப் பத்து, ஒன்பதாம் பத்து,
2-வது அகவல்.

"கோலக்கோலக் குறையாத் தானைச் சான்றோர்
வண்மையுஞ் செம்மையுஞ் சால்பு மறனும்"

*புறநானூறு, 63-வது அகவல்.*

"தேர்தர வந்த சான்றோ ரெல்லாந்
தோல்கண் மறைப்ப வொருங்குமாய்ந் தனரே"

*புறநானூறு, 301-வது அகவல்,*

"பல்சான் றீரே பல்சான் றீரே
*குமரி மகளிர் கூந்தல் புரைய*
*வமரி னிட்ட வருமுள் வேலிக்*
கல்லென் பாசறைப் பல்சான் றீரே"

*என்பதாதி சங்கநூற்களில் வரும்* "சான்றார், சான்றோர்" *என்னும் பெயர்கள்* அரசரைக்குறித்தலால், சான்றார் *வேறு சாதியார், பழையர், பரதவர் வேறுசாதியாரென வறியவும்.*

*பதிற்றுப் பத்து, மூன்றும் பத்து,*
*4-வது அகவல்.*

"நாடன் விளங்கு நாடா நல்லிசை"

*புறநானூறு, 49-வது அகவல்.*

"நாட னென்கோ வூர னென்கோ
யாங்கன மொழிகோ வோங்குவாட் கோதையை"

*பெருந்தேவனார்* பாரதவெண்பா,*
*உத்தியோகப் பருவம், 52-வது செய்யுள்.*

"*நாடறிய* நாடார் சபையகத்தே *பாஞ்சாலி*
*நாடறிய தூசுரிந்த நாசத்தால்—நாடறியத்*
*தன்னேவந் தீர்க்கத் தழைபூங் குழல்விரித்த*
*பொன்னேயவ் வண்ண மகள்.*"

---

* *பெருந்தேவனார் சங்கப்புலவர்களுள் ஒருவர்.*

என்பதாதி சங்கநூற்களிலும் வரும் "நாடன் நாடான்" என்னும் பெயர்கள் அரசரைக் குறித்தலால், நாடார் வேறு சாதியார், பழையர், பரதவர் வேறு சாதியாரென வறியவும்.

இவ்விதமிருக்க,

"காவிரிப்பூம் பட்டினத்தில் கள்விலைஞர் சேரியில்
சான்ற ரகந்தனில் உறுவை வளர்ந்தனள்"

எனக் கபிலர் கள்விலைஞரை சான்றார் எனக் கூறிய தாகக் கூறுவர். அது பெருந்தவருகும். கபிலர் என்பவர் சங்கப்புலவர்களுள் ஒருவர். அவர் "புலனழுக் கற்ற வந்த ணாளன்" எனவும், "பொய்யா நாவிற் கபிலன்" எனவும், புறநானூற்றிற் கூறியவற்றால் மதிப்பிலும், கல்வியிலும், வாய்மையிலும் மிக்குயர்ந்தவர். "புறநானூறு, ஐங்குறு நூறு, பதிற்றுப்பத்து, நற்றிணை, பத்துப்பாட்டு" முதலிய சங்க நூற்களில் ஒவ்வோர் பகுதியையும், இன்னாநாற்ப தும் பாடியவர். இந்நூற்களை யன்றி அகவலும் ஒன்று பாடியதாகப் புலப்படவில்லை. அவர் சான்றார் என்னுஞ் சொல்லின் பொருளை யறியாதவருமல்லர். அவர் சான்றார் என்பதை பதிற்றுப்பத்தில் அரசர் என்னும் பொருளிலும், இன்னாநாற்பதில் "அறிவுடையார்" என்னும் பொருளிலும் நிறுத்தியுள்ளார். அஃது வருமாறு:—

பதிற்றுப் பத்து, ஏழாம் பத்து,
7-வது அகவல், 13-வது வரியிலிருந்து.

"நாறிணர்க் கொன்றை வெண்போழ்க் கண்ணியர்
வாண்முகம் பொறித்த மாண்வரி யாக்கையர்
நெறிபடு மருப்பி னிருங்கண் மூரியொடு
வளைதலை மாத்த தாழ்கரும் பாசக

ரெஃகா டீனங் கடுப்ப மெய்சிதைந்து
சாந்தெழின் மறைந்த சான்றோர் பெருமகன்
மலர்ந்த காந்தண் மாறு தூதிய
கடும்பறைத் தும்பி சூர்நசைத் தாஅய்ப்
பறைபண் ணழியும் பாடுசா னெடுவரைக்
கல்லுயர் நேரிப் பொருநன்
செல்வக் கோமாற் பாடினை செலினே''

இவ்வகவல் கடுங்கோவாழியாதன் என்னும் சேர வரசன்மீது கபிலர் பாடியது. (இ-ள்.) "தொடுத்தற்குரிய பூவல்லாத பனங்குருத்தினைத் தொடுக்கப்படும் கொன்றையோடு தொடுத்த கண்ணியையும், வாள்வடு முகத்திலே பொறித்த மாண்வரி யாக்கையையும், மெய்யானது சிதைந்து அச்சிதைந்த வடுக்களானே பூசின சாந்தின் அழகை மறைத்த மெய்யையும் உடைய அரசர்ப் பெருமகனும், நேரிமலைக் கரசனும், செல்வமுடையவனுமாகிய சேரனைப் பாடிச் செல்லின்'' என்பதாம். பனங்கண்ணியையும், வாள் வடுவுடைய முகத்தையும், சிதைந்த மெய்யையும் உடையவர் அறிவுடையராகார். இவ்வமைப்பு அரசருக்குரியதால், இதில்வரும் சான்றோர் அரசர் எனப்படுவர்.

இன்னாநாற்பது, 18-வது செய்யுள்.

"ஆன்றவிந்த சான்றோருட் பேதை புகலின்னா''

(இ-ள்.) "நிறைவால் மனமடங்கப்பெற்ற அறிவுடையவர் நடுவே அறிவிலானொருவன் பிரவேசித்தல் துன்பந் தரும்'' என்பதாம். இங்கு சான்றோர் அறிவுடையார் எனப்படுவர். இவற்றால் சான்றோரின் தன்மையை கபிலரும் அறிந்துள்ளார். இதோடு அவர்காலத்தில் ஏற்பட்ட சங்க நூற்கள் பலவற்றுள்ளும் சான்றோர் என்பது அறிவுடையாரையும், அரசரையுங் குறிக்குமென நூற்றுக்கணக்கான

பிரமாணங்கள் உள்ளன. அவற்றுள் ஒன்றுவது கள்விலேஞரைக் குறிக்க முன்னெழவில்லை. அப்பெயரும் கள் சப்தத்தை விளக்காது. நிற்க, எம்மிடம் இருக்கும் ஓலை ஏட்டுப் பிரதியில்

"காவிரிப்பூம் பட்டினத்தில் கள்விலேஞர் சேரியில்
பழைய ரகந்தனில் உறுவை வளர்ந்தனள்"

என எழுதப்பட்டுள்ளது. அப்படி யுள்ளதை பிற்காலத்தவர் **பழையர்** என்பதை நீக்கி, **சான்றார்** என அச்சிட்டுக்கொண்டனர். இக்காலத்தில் சில **சான்றார் கள்தொழில்** புரிதலால் அங்ஙனம் செய்தனர்போலும். அது திருவாரூர் ஞானப்பிரகாச சுவாமிகள் இயற்றி, 1875-ம் வருஷத்தில் அச்சிட்ட சாதி **நூலில்** கள்விலேஞரை "**பழையர்**" எனக் கூறியிருக்க, அதற்கு 34-வருஷத்திற்குப்பின் அதே நூலை புரட்டி "**சாதி பேத விளக்கம்**" என்னும் மறுபெயர் புனைந்து, 1909-ம் வருஷத்தில் அச்சிட்ட, யாழ்ப்பாணம், சி. செல்லையாபிள்ளை, நா. சிவசுப்பிரமணிய சிவாசாரி என்னும் இரண்டு தடியர்கள் "**பழையர்**" என்பதை நீக்கி "**சான்றார்**" எனக் கூட்டி அச்சிட்டதைப்போல் அச்சிட்டாரென வறியவும். அவ்வகவலே சுத்த ஆபாசமுள்ளதெனவும், கபிலரால் பாடிய தன்றெனவும், எம்மால் அச்சிடப்படும் "**கபிலரகவல் கட்டுக் கதை**" என்னும் நூலில் இனிது காண்க.

6. **கல்லாடர் காலம்**:—இவர் காலம் சங்ககாலத்திற்கு பிற்பட்டது. குலேசபாண்டியன் காலத்தில் கடைச்சங்கம் அழிந்தது. அரிமர்த்தன பாண்டியன் குலேசபாண்டியன் புத்திரன். அரிமர்த்தனபாண்டியன் காலத்தில் மாணிக்கவாசகர் இருந்தனர். இம்மாணிக்கவாசகரால் இயற்றிய திருக்கோவையாருக்கு குற்றங்கூறிய புலவர்களை

கண்டித்து, கல்லாடர் என்பவர் இயற்றிய நூலே கல்லாடம் எனப்படும். ஆகவே, கல்லாடம் சங்ககாலத்திற்குப் பிற்பட்டதும், கிறிஸ்தாப்தம் இரண்டாம் அல்லது மூன்றும் நூற்றாண்டில் வெளிப்பட்ட நூலுமாகும். கடைச்சங்கப் புலவர் நாற்பத்தொன்பதின்மரில் கல்லாடர் என்பவரும் ஒருவர். அவர் இவராகார். "உயர்மதிற் கூடலி னாய்ந்த வொண்டீந் தமிழின் றுறை"*என்னும் பிரயோகத்தில் மாணிக்கவாசகரே கடைச்சங்கம் தம்காலத்திற்கு முந்தியதெனக்கூறலின், அம்மாணிக்கவாசகரின் நூலுக்கு சமாதானம் விளக்க வந்தார் அவரினும் பிற்பட்டவர் எனவறியவும்.

கல்லாடம், 17-வது அகவல்.

"பனைக்குடிப் பரதவர் கலத்தோடு மறியச்
சுரிமுகச் செவ்வாய்ச் சூழ்வளை தெறிப்பக்
கழுக்கடை யன்ன கூர்வாய்ப் பெருங்கட்
பனைகிடந் தன்ன வுடன்முத றுணிய"

"பனைக்காட்டில் வாசஞ்செய்யும் பரதவர்கள் மீனோடு பனங்கள்ளையு மருந்தினார்கள்" எனவும்;

கல்லாடம், 25-வது அகவல்.

"கருவி நுனிகொ ணெறியிலை யீந்தின்
முற்றிய பெருநற வெண்ணுடன் குடித்து"

"ஈந்தின் கள்ளை அருந்தினார்கள்" எனவுங் கூறியிருத்தலால், அக்கல்லாடர் காலத்திலிருந்தே, அதாவது கிறிஸ்தாப்தம் மூன்றும் நூற்றாண்டிலிருந்தே பனை ஈந்து தென்னை மரங்களிலிருந்து கள் உற்பத்தியாயின வெனவும், பரதவர் என்னுஞ் சாதியாரால் செய்து குடிக்கப்பட்டு

* திருக்கோவையார் பாங்கன் கூட்டம், பாங்கன் வினாதல், 20-வது செய்யுள்.

வந்ததெனவும் விளங்குகின்றது. இப்பாதவர் என்னும் பெயரும் நமது குலத்தவருக்குரிய சாதிப்பெயராகாது. ஆகவே, கல்லாடர் காலத்திலும் நமது குலத்தவர் கள் தொழில் செய்ய வில்லை என வறியவும்.

7. அமரசிம்மர் காலம்:—இவர் வடமொழியில் நிகண்டு செய்தவர். அதை "அமரம்", என்றும், "அமரசிம்மம்" என்றும் அழைக்கப்படும்.

ధన్వన్తరి క్షపణకా మరసింహ సన్కు।
వేతాళ భట్ట ఘటకర్పర కాళిదాసాః।
ఖ్యాతో వరాహ మిహిరో నృపతే స్సభాయాం।
రత్నాని వై వర రుచి ర్నవ విక్రమస్య॥

"தந்வந்தரி க்ஷபணகா மரஸிம்ஹா ஸன்கு
வேதாள பட்ட கடகற்பர காளிதாஸா:/
க்யாதோ வராஹ மிஹிரோ ந்ருபதேஸ் ஸபாயாம்
ரத்நாநி வைவர ருசிர்னவ விக்ரமஸ்யா"

இச்சுலோகத்தில் வெளிப்படும் "அமரசிம்மர்" என்னும் கவீஸ்வரர் விக்கிரமார்க்கனது சபையை அலங்கரித்த "தந்வந்தரி, க்ஷபணகன், அமரசிம்மன், சென்கு, வேதாளன், பட்டன், கடகர்பரன், காளிதாஸன், வராக மிகிரன்" என்னும் ஒன்பது கவிகளில் ஒருவராவர். அநேக அரசர்கள் விக்கிரமார்க்கன் என்னும் பெயருடன் சிம்மாஸனத்தை வகித்திருத்தலால், அவர்களில் மேற்சொன்ன விக்கிரமார்க்கன் கிறிஸ்து பிறப்பதற்கு, 57-வருடங்களுக்கு முன்னே இருந்தவர் என சிலரும், கிறிஸ்தாப்தம் ஆறும் நூற்றாண்டிலிருந்தவர் என சிலரும் கூறுகின்றனர். ஆனால் இந்த அமரசிம்மனோடு இருந்த வராக

மிகிரன் செய்த சோதிட சாஸ்திரத்தில், வராகமிகிரன் காலம் கிறிஸ்தாப்தம், 509-ம் வருடமென வரையறுக்கப் படுகின்றது. அதனால் வராகமிகிரன் காலத்தவர் ஆகிய அமரசிம்மர் காலமும் கிறிஸ்தாப்தம் ஆறும் நூற்றாண்டின் முதலிலென அறுதியிடப்படும். இந்த ஆறும் நூற்றாண்டில் கள் விலைஞருக்கு வழங்கிவந்த சாதிப்பெயர்கள் வருமாறு:

அமரம், இரண்டாங்காண்டம், சூத்ரவர்க்கம்,

702-வது சுலோகம்.

𑌶𑍌𑌣𑍍𑌡𑌿𑌕𑍋 𑌮𑌣𑍍𑌡𑌹𑌾𑌰𑌕𑌃 |

"ஶௌண்டிகோ மண்டஹாரக:"

இச்சுலோகத்தில் கள்விலைஞருக்கு "சௌண்டிகர்" என்றும், "மண்டகாரகர்" என்றும் சாதிப்பெயர்கள் கூறியுள்ளது. இப்பெயர்களில்,

சௌண்டிகர் என்பது "சுண்டா பாநம் மதஸ் தாநம்"* என்னும் அமரசுலோகத்தில் வெளிப்படும் 'கள்' என்னும் பொருளைத்தரும், "சுண்டா" (சுண்டி) என்னுஞ் சொல்லடியாகப் பிறந்தது.

மண்டகாரகர் என்பது "காரோத் தமஸ் ஸுரா மண்டா"† என்னும் அமரசுலோகத்தில் வெளிப்படும் "கள்" என்னும் பொருளைத்தரும் "மண்டா" என்னுஞ் சொல்லடியாகப் பிறந்தது.

இவற்றால் சௌண்டிகர் என்பதும், மண்டகாரகர் என்பதும் கள்ளடியாகப் பிறந்த கள்விலைஞருக்குரிய சாதிப்பெயர்களென விளங்கும். இப்பெயர்களையும் நமது சாதி

---

* அமரம், இரண்டாங்காண்டம், சூத்ரவர்க்கம், 731-வது சுலோகம்.

† அமரம், இரண்டாங்காண்டம், சூத்ரவர்க்கம், 732-வது சுலோகம்.

யார் தங்குலப் பெயர்களென வழங்கி வராமையால், அவை களும் நமதுகுலப் பெயர்கள் அல்ல வென்பது முடிவு.

இவ்வமர நூலார் கள்விலைஞரை சௌண்டிகர் என்றும், மண்டகாரகர் என்றும் கூறியிருத்தலோடு, நமது சாதிக்குரிய சாதிப்பெயராகிய **கிராமணி** என்பதையும், அவ்வமர நூலிலேயே விளக்கியுள்ளார். அப்படி விளக்கியவர் அக்கிராமணி என்னும் பெயரை சௌண்டிகருக்குரிய சாதிப்பெயர்களில் ஒன்றென விளக்கினரில்லை.

அமரம், மூன்றுங்காண்டம், நாநார்த்தவர்க்கம்.
206-வது சுலோகம்.
஘்ராமணீ ர்நாபிதே வும்ஸி
ஶ்ரேஷ்டே ஘்ராமாதி பேத்ரிஷு ||
**"க்ராமணீர் நாபிதே பும்ஸி**
**ச்ரேஷ்டே கிராமாதி பேத்ரிஷு"**

**(இ-ள்.)** "**கிராமணி** என்பது **சிரேஷ்டனையும், கிராமத்தை யுடையவனையுங் குறிக்கும்**"* என்பதாம். கிராமத்தை யுடையவன் அரசன் என்பது தீர்ந்த முடிபு. இவற்றாலும் கிராமணி வேறுசாதியார், சௌண்டிகர் வேறுசாதியார் எனவறியலாம்.

8. **திவாகரர் காலம்:**—திவாகரம் இயற்றிய சேந்தனார் என்பவர் சோழநாட்டில் காவேரிநதியின் தீரத்திலுள்ள அம்பநாட்டிற்கு அரசராவர்.

திவாகரம், மரப்பெயர்த் தொகுதி.
"நாடேபிறர் நாட்டிற் குவமை யாறே
காலமறிந் துதவுங் காவிரி தானே

* Madras Government Museum Bulletin. Vol III No 1 P 35.

யாடவர் திலக னம்பன் மன்ன
னீடிசைத் தலைவ னருவந்தைச் சேந்த
ஞய்ந்த திவாகரத் தரும்பொருள் விளக்கு"

திவாகரம், பல்பொருட் பெயர்த்தொகுதி.

"வருநற் கங்கை வடதிசைப் பெருமையுந்
தென்றிசைச் சிறுமையு நீக்கிய குறுமுநி
குண்டிகைப் பழம்புனற் காவிரிப் பெரும்பதி
யம்பற் கதிபதி சேந்தன் றிவாகரம்''

என்னுந் திவாகரத்தொகுதி யிறுதிக் கட்டுரைகளில் "காவிரியானே, காவிரிப்பெரும்பதி, அம்பற்கதிபதி, அம்பன்மன்னன்" எனவுங் கூறியிருத்தலின் சேந்தன் சோழ நாட்டிற் கரசனென விளங்குவன்.

திவாகரம், மக்கட்பெயர்த்தொகுதி.

"கற்ற நாவினன் கேட்ட செவியினன்
முற்ற வுணர்ந்த மூதறி வாளன்
நாகரிக நாட்டத் தாரிய னருவந்தைத்
தேருங் காட்சிச் சேந்தன் றிவாகரம்''

என்னுந் திவாகரச் சூத்திரத்தில் சேந்தனுரை ஆரியன் எனவுங் கூறியிருக்கின்றது. அரசர்கள் பூர்வம் ஆரிய நாட்டிலிருந்தே, இத்திராவிட நாட்டிற்கு வந்தவர்களானமையால், அவர்கள் ஆரியர் எனப்படுவர். அவ்வாரிய அரசர்களின் சந்ததியில் சேந்தனும் உதித்தவர் என விளக்கவே ஆரியர் என்னும் பெயரைப் பெற்றனர்.

சூடாமணி நிகண்டு, சிறப்புப்பாயிரம்,
3-வது செய்யுள்.

"அங்கது போய பின்றை
யலகினூல் பிறந்த மற்றுஞ்

செங்கதிர் வரத்திற் றோன்றுந்
திவாகரர் சிறப்பின் மிக்க
பிங்கல ருரைநூற் பாவிற்
பேணினர் செய்தார் சேர
இங்கிவை யிரண்டுங் கற்க
வெளிதல வென்று சூழ்ந்து''

என்னுஞ் சூடாமணி நிகண்டின் செய்யுளால் சேந்தன் ''சூரிய குலத்தவன்'' என விளங்கினன். ஆரிய அரசர்கள் ''சூரியகுலத்தவர், சந்திரகுலத்தவர்'' என இருவகுப்பினராவர். அயோத்தியை யாண்ட தசரதராமர் முதலினோரும் இத்தென்தேசத்தை யாண்ட சோழன், ஈழன், தொண்டன் முதலினோரும், சூரியகுலத்தவராவர். அஸ்தினாபுரத்தை யாண்ட பாண்டவர், துரியோதனர் முதலியோரும், இத்தென்தேசத்தை யாண்ட ''பாண்டியன், சேரன், கொங்கன்'' முதலினோரும் சந்திரகுலத்தவராவர். இவ்விரு குலத்துள் சேந்தனார் சூரியகுலத்தவர் என விளங்கினர். இனி அவர் காலத்தையும் ஆராய்வாம்.

திவாகரம், விலங்கின் பெயர்த்தொகுதி.

''காத லீகையிற் போதிப் பெருந்தவன்
றெவ்வடு கால வைவே லெழிலி
யவ்வை பாடிய வம்பற் கிழவன்
றேன்றூர்ச் சேந்தன் றெரிசொற் றிவாகரம்''

என்னுந் திவாகரச்சூத்திரத்தில் சேந்தனாரை ஒளவையுஞ் சிறப்பித்துப் பாடியிருப்பதாக விளங்குகின்றது, ஒளவை காலத்தை நோக்கின், திருவள்ளுவர் காலமாகிய சங்ககாலத்தில் ஒரு ஒளவையும், அவர்க்கு எண்ணூறு வருடத்திற்குப் பின்னிருந்த கம்பர் காலத்தில் ஒரு ஒவையும் இருந்ததாகப் பெறப்படுகின்றது, அவ்விருவர்களில்

ஒருவர் காலத்தில் சேந்தனார் இருந்திருக்க வேண்டும். சேந்தனாரைப் பாடியது சங்ககால ஔவையா யிருப்பின் சேந்தனாரால் இயற்றிய திவாகரம் சங்கநூற்களில் ஒன்றாக எண்ணப்பட்டிருக்கும். அல்லது சேந்தனாரால் குறித்திடப் பட்ட சாதிப்பெயர்களாவது சங்கநூற்களில் விளங்கி வர வேண்டுமெ. இவ்விருவகையு மில்லாமையால் சேந்தனார் சங்ககாலத்தவர் அல்ல வென்பதும், கம்பர் காலத்தவர் என்பதும் துணிபு.

சேந்தனாரை கம்பர் காலத்திலிருந்த ஔவை பாடியிருத்தலால், ஔவைக்கும் சேந்தனாருக்கும் ஏறக்குறைய ஐம்பது வருடமாவது முற்பட்டிருக்க வேண்டும். அதாவது கம்பர் ஒன்பதாவது நூற்றாண்டின் (A. D. 885) இறுதியி லிருந்திருத்தலால், திவாகரர் ஒன்பதாவது நூற்றாண்டின் முதலி லிருந்தவர் எனக் கணிக்கப்படும். இனி இவரால் இயற்றிய நூற்களைக் கவனிப்பாம்.

திவாகரம், செயல்பற்றிய பெயர்த்தொகுதி.

"அண்ணல் செம்பாதிக் காணி யாட்டியைப்
பெண்ணணங்கை மூவுலகும் பெற்ற வம்மையைச்
செந்தமிழ் மாலை யந்தாதி புனைந்த
நாவல னம்பற் காவலன் சேந்தன்"

என்னும் திவாகரத் தொகுதி இறுதிக் கட்டுரையில் சேந்தனார் திவாகரத்தோடு காளிகாதேவியின் பேரில் செந்தமிழ்மாலை யந்தாதியும் பாடியவர் என விளங்குகின்றது. இதனால் அரசர்கள் காளியைத் துதித்தலும், வணங்கலும் வழக்கென வறியலாம்.

திவாகரம், ஒலிபற்றிய பெயர்த்தொகுதி.

"அரக்கரைப் பொருத முரட்போர் வில்லும்
பாரதம் பொருத பேரிசைச் சிலையுந்

தாருகற் கடிந்த வீரத் தயிலும்
பாடிய புலவன் பதியம்பற் சேந்தன்''

என்னுந் திவாகரத் தொகுதி இறுதிக் கட்டுரையில் சேந்தனார் திவாகரத்தோடு "மூரட்போர்வில், பேரிசைச் சிலை, வீரத்தயில்" முதலிய நூற்களையும் பாடினவர் என விளங்குகின்றது.

திவாகரம், தெய்வப் பெயர்த் தொகுதி.

"வடநூற் கரசன் றென்றமிழ்க் கவிஞன்
கவியரங் கேற்று முபய கவிப்புலவன்
செறிகுணத் தம்பற் கிழவோன்† சேந்தன்''

என்னுந் திவாகரத் தொகுதி இறுதிக் கட்டுரையில் சேந்தனை "வடநூற்கரசன் றென்றமிழ்க்கவிஞன்" எனக்கூறி யிருப்பதால், அவரை இருபாஷையிலும் அதிக பாண்டித்ய முடையவர் எனவறியலாம். இவ்விதமிருக்க ஸ்ரீமான், மஹாமஹோபாத்தியாயர், வே. சாமிநாதையரால் அச்சிட்ட சிலப்பதிகாரத்தின் ஈற்றில் வெளியிடப்பட்ட "அரும்பத முதலியவற்றின் அகராதி" யில் "திவாகரம் தமிழிலுள்ள நிகண்டுகளுள் ஒன்று, அம்பர் நகரத்திருந்த சேந்த னென்பவனுடைய வேண்டுகோளின்படி திவாகர முனிவராற் செய்யப்பட்டது" என அவர் கூறியது தவறாகும்.

சேந்தனார் தமிழில் இலக்கியங் கற்கப் புகுவோர் முன்பு கற்கவேண்டுங் கருவிநூலாகிய நிகண்டை முதன் முதலில் செய்தனர். இவர் இயற்றிய திவாகரத்திற்குப்

† சங்கநூலாகிய புறநானூறு, 385-வது அகவலில் தெரிவிக்கும் "அம்பர் கிழவோன்" என்னும் பகுதி சேந்தனைக் குறிக்காது. அம்பநாட்டை யாளுபவரை எல்லாம் "அம்பர் கிழவோன்" எனக் கூறலாம்.

பிறகே "பிங்கலநிகண்டு, சூடாமணிநிகண்டு, உரிச்சொல் நிகண்டு, காயாகரம், இரேவணசூத்திரம், ஆசிரியநிகண்டு, சதுரகராதி" முதலிய நிகண்டுகள் வெளியாயின.

"முன்னுள திவாகரம் பிங்கல நிகண்டுசீர்
முந்து காங்கேய னுரிச் சொல்
முறைபெறு காயாகரம் பகருமக ராதியிவை
முற்று மொன்றாய்த் திரட்டி"

என்னும் ஆசிரிய நிகண்டின் பாயிரத்தால் விளங்கும். சேந்தனார் இயற்றிய நிகண்டிற்கு திவாகரம் எனப் பெயர் தந்தனர். அது உலகவிருளை விளக்கும் சூரியனைப்போல் தமிழ் பாஷையிலுள்ள பதங்களின் பொருளை செவ்வனே விளக்குதலால் அப்பெயர் தந்தனர்போலும். அவர் திவாகரம் இயற்றியதால் திவாகரர் எனப்பட்டனர். இத்திவாகரர் காலத்தில் கள்விலைஞருக்கு வழங்கிவந்த சாதிப்பெயர்கள் வருமாறு:—

திவாகரம், மக்கட் பெயர்த்தொகுதி.

"பழையர் துவசர் படுவர் கள்விலைஞர்"

கள்விலைஞருக்கு பழையர் என்றும், துவசர் என்றும், படுவர் என்றும் சாதிப்பெயர்கள் திவாகரர் காலமாகிய கிறிஸ்தாப்தம் ஒன்பதாம் நூற்றாண்டில் வழங்கிவந்தன. இப்பெயர்களும் நமது சாதியாருக்கு வழங்கி வராமையால் நாம் கள் குலத்தவராகோம்.

திவாகரர் நமது குலத்தவருக்குச் சாதிப்பெயராக நின்று வழங்கிவரும் சான்றார் என்னும் பெயரை,

திவாகரம், தெய்வப் பெயர்த்தொகுதி.

"சான்றோ னரியே தபநனென் றிவையவு
மான்ற வருக்கற் கநந்தம் பெயரே"

என்னுஞ் சூத்திரத்திலும்;

திவாகரம், மக்கட் பெயர்த்தொகுதி.

"சான்ரோர் மிக்கோர் நல்லவர் மேலவர்
ஆய்ந்தோ ருயர்ந்தோ ராரிய ருலகென
வாய்ந்த வான்றோ ரறிவுடை யோரே"

என்னுஞ் சூத்திரத்திலும் வெளிப்படுத்தி, **சூரியனை**யும் அறிவோனையுங் குறிக்குமெனத் தெரிவித்துள்ளாரே யன்றி, கள்விலைஞரையுங் குறிக்குமெனத் தெரிவித்தாரில்லை. அதனால் **சான்றார்** வேறுசாதியார், கள்விலைஞர் வேறுசாதியாரென வறியவும். ஆயின் சிலர் திவாகரர் **சான்றோர்** எனக் கூறினரே யன்றி, **சான்றார்** எனக் கூறினாரில்லை யென்பர். தொல்காப்பியம் முதலிய இலக்கண நூற்களுள் "ஓர்" விகுதியே கிடையாதென அறுதியிட்டு,* இந்த "ஆர்" விகுதியே செய்யுளில் "ஓர்" ஆக மாறுமெனக் கூறியிருத்தலின்,‡ இந்த "ஆர்" விகுதியைப்பெற்ற **சான்றார்** என்னும் பதமும்; "ஓர்" விகுதியைப் பெற்ற **சான்றோர்** என்னும் பதமும் ஒரு பொருளிலேயே நிற்குமென வறிவர்.

9. **கம்பர் காலம்:**—இவர் சோழநாட்டிலுள்ள கம்பநாட்டிற்கு அரசரும், சூரியகுலத்தவருமாவர். இவர் தமிழில் இராமாயணம் பாடினவர். அந்த இராமாயணத்திலுள்ள ஒரு தனிச்செய்யுளால் கம்பர்காலம் ஏற்படுகின்றது.

கம்பராமாயணம், தனியன்.

"எண்ணிய சகாத்த மெண்ணூற்
றேழின்மேற் சடையன் வாழ்வு

---

* நன்னூல், எழுத்ததிகாரம், பதவியல், 13-வது சூத்திரம்.

‡ "பாலறி மரபி னம்மூ வீற்று, மாவோ வாகுஞ் செய்யுளுள்ளே" தொல்காப்பியம், சொல்லதிகாரம், வினையியல், 14-வது சூத்திரம்.

நண்ணிய வெண்ணெய் நல்லூர்
தன்னிலே கம்ப நாடன்
பண்ணிய விராம காதை
பங்குனி யத்த நாளிற்
கண்ணிய வரங்கர் முன்னே
கவியரங் கேற்றி னானே''

என்னும் இராமாயணத் தனிச்செய்யுளை நோக்க, சாலிவாகன சகாப்தம், 807 என்பதால், கிறிஸ்தாப்தம் ஒன்பதாம் (A. D. 885) நூற்றாண்டி லிருந்தவர்* என விளங்குகின்றது. அதாவது இற்றைக்கு ஆயிரம் வருடத்திற்கு முன்னெனக. இக்கம்பர் கள்விலைஞருக்கு **பழையர்** என்றும், **துவசர்** என்றும் இரண்டு பெயர்கள் உரியதென தாமியற்றிய இராமயணத்தில் எடுத்தாண்டிருக்கின்றார். அஃது வருமாறு:—

கம்பராமாயணம், பாலகாண்டம், நாட்டுப்படலம்,
50-வது செய்யுள்.

''**பழையர்த மனையன பழைநறை நுகரும்**
உழவர்த மனையன வுழுதொழில் புரியும்
மழவர்த மனையன மணவொலி யிசையின்
கிழவர்த மனையன கிளைபயில் வளையாழ்''

இச்செய்யுளில் வரும் ''பழையர்த மனையன பழைநறை நுகரும்'' என்னுந் தொடர் ''**பழையர்தம்=கள்விலைஞருடைய, மனையன=வீட்டில், பழைநறை=புளித்தகள், நுகரும்=குடிக்கும்**'' என்னும் பொருள் கொள்ளும். இச்செய்யுளால் **கள்விலைஞர்** கம்பர் காலத்தில் ''**பழையர்**'' என வெளிப்பட்டனர்.

---

* கம்பர் பதினோராம் நூற்றாண்டில் இருந்தவரென வின்ஸ்லோ துரை அவர்கள் கூறியிருக்கின்றார்.

கம்பராமாயணம், சுந்தரகாண்டம், ஊர்தேடுபடலம்,
112-வது செய்யுள்.

"ஆலையின் மலையின் சாரன் முழையினி லமுத வாரிச்
சோலையிற் துவச ரில்லிற் சோனகர் மனையிற் றூய
வேலையிற்கொளவொணுதவேற்கணூர்குமுதச்செவ்வாய்
வாலெயிற் றூறு தீந்தேன் மாந்தினர் மயங்கு வாரை"

இச்செய்யுளில் வரும் "துவச ரில்லில்" என்பதற்கு "துவசர்=கள்விலைஞர், இல்லில்=வீட்டில்" எனப் பொருள் கொள்ளும். இவற்றால் கம்பர் தனக்கு முன்னிருந்த திவாகரர் கள்விலைஞருக்குரிய சாதிப் பெயர்களெனக் கூறிய "பழையர், துவசர், படுவர்" என்னும் பெயர்களில் "பழையர், துவசர்" என்னும் இரண்டு பெயர்களைமாத்திரம் தாமியற்றிய இராமாயணத்தில் எடுத்தாண்டிருக்கின்றூர். இப்பெயர்களை நமது முன்னோர்கள் சாதிப்பெயர்களாகவாவது, கள் தொழிலை குலத்தொழிலாகவாவது, அல்லது கள்ளை விளக்கும் சாதிப் பெயர்களையாவது பெற்றிருந்ததாக ஏற்படவில்லை. அதனுல் நாம் கள்விலைஞராகோம்.

இக்கம்பர் கள்விலைஞரை "பழையர், துவசர்" எனக் கூறியிருத்தலோடு, நமது சாதிக்குரிய சாதிப்பெயராகிய "சான்றூர்" என்னும் பெயரையும் விளக்கியுள்ளார். அப்படி விளக்கிய கம்பர் சான்றூர் என்னும் பெயரை கள்விலைஞருக்குரியதென விளக்கினுரில்லை.

கம்பராமாயணம், யுத்தகாண்டம்,
வருணனை வழிவேண்டு படலம், 25-வது செய்யுள்.

மொய்த்த மீன்குல முதலற முருங்கின மொழியில்
பொய்த்த சான்றவன் குலமெனப் பொருபணை யெரிய

வுய்த்த கூம்புடை நெடுங்கல மோடுவ கடுப்பத்
தைய்த்த வம்பொடுந் திரிந்தன சாலமீன் சாலம்.

இதில் வரும் **சான்றவன் குலம்** என்பது **சூரியகுலத்தைத்** தெரிவிக்கும்.

கம்பராமாயணம், யுத்தகாண்டம், பிரமாத்திரப்படலம், 215-வது செய்யுள்.

"**சான்றோர்** மாதைத் தக்க வரக்கன் சிறை தட்ட
ஆன்றோர் சொல்லு நல்லற மன்னன் வயமானல்
மூன்றாய் நின்ற பேருல கொன்றாய் முடியா வேல்
தோன்று வோவென் வில்வலின் வீரத் தொழி லம்மா"

இதில்வரும் **சான்றோர்மாது** என்பது சீதையைத் தெரிவித்து, **சூரியகுலப் பெண்**† என விளக்கும். இவற்றாலும் **சான்றார்** வேறு சாதியார், கள்விலேனர் வேறு சாதியார் எனவு மறியலாம்.

இதோடு நமக்கு வழங்கிவரும் "**நாடன், நாடான்**" என்னும் பட்டப்பெயர்களும் கள்விலேனரைக் குறிக்காது.

இராமாயணத் தனியன்.

"இம்பர் நாட்டிற் செல்வ மெல்லா
மெய்தி யரசாண் டிருந்தாலும்
உம்பர் நாட்டிற் கற்பகக்கா
வோங்கு நீழ லிருந்தாலும்
செம்பொன் மேரு வனையபுயத்
திறல்சே ரிராமன் றிருக்கதையிற்

† "Ayodia was founded by the race of Soorya by Ikshwaku, Mithila was founded by Mithilan, the grandson of Ikshwaku." Vide, Tod's Rajasthan, Vol. I, ch. IV, P. 44.

கம்பநாடன் கவிதை யிற்போற்
கற்றோர்க் கிதயங் களியாதே."

இச்செய்யுளில் கம்பரை 'கம்பநாடன்' எனப்பட்டிருக்கின்றது. கம்பர் தமிழ் ராமாயணம் பாடியவர். அதை விளக்கவே அந்நூலை கம்பராமாயணம் எனப்பட்டது. கம்பர் என்னும் பெயரையுடையவரால் இயற்றிய இராமாயணம் என்பது பொருள். இதைப்போல் • 'கம்பநாடன்' என்றாலும் கம்பன் என்னும் பெயரையுடைய அரசன் அல்லது 'கம்பராஜன்' எனவே பொருள்கொள்ளும். இவருக்கு அந்நூலில் 'நாடன்' என்னும் பட்டப்பெயர் உரியதென உரைத்திருக்கின்றது.

ஜாதகசிந்தாமணி, 2168-வது செய்யுள்.

நறைகமழ் கமலப் பொகுட்டில் வீற்றிருக்கு
நான்முகக் கடவுளான் படைத்த
நிறைவுள மாந்தர் வினைப்பய னதனு
னினைபெறு யோகமஞ் சரியாந்
துறையென வழங்கும் வடமொழி யதனைத்
தூயசெந் தமிழினாற் செய்தான்
றிறைகொடா வழுதிப் புகழ்தொண்ட நாடன்
றில்லைநா யகமகி பதியே.

இதில் சாதகசிந்தாமணி என்னும் நூலை வடமொழியினின்று தமிழில் மொழிபெயர்த்துக் காவியம் ஆக்கினவர் தில்லைநாயகப் பாண்டியர் எனக் கூறியிருக்கின்றது. இப்பாண்டியர் 'தொண்ட நாடன்' எனப்பட்டனர். 'தொண்ட நாடன்' என்றால் 'தொண்டநாட்டிற் கரசன்' எனப்படுவர். இவர்கள் அரசகுலத்தவர்கள் ஆனமையினாலேயே 'நாடன்' என்னும் பட்டத்தைப் பெற்றனர். அரசரல்லா திருப்பின் பெறார்கள். இவர்களைப்போல் நூற்கள் இயற்றிய மற்ற

நூலாசிரியர்களில் எவராவது 'நாடன்' என்னும் பட்டப் பெயரைப் பெற்றனரா? இல்லையே? இதனாலும் அவர்களை அரசர்கள் எனவும், அப்பட்டப்பெயர் அரசர்களுக் குரிய தெனவும் மற்றையோருக்கு இன்றெனவுந் துணியப்படும்.

"கம்பநாடர்" சரிதத்தை உள்ளபடி கோர்த்து எழுதுவதற்கான அவ்வளவு ஆதரவுகள் இலதேனும், வழங்கப் பட்டு வரும் சில முக்கிய ஆதரவுகளால் ஒருவாறு தெளியப்படும். தஞ்சாவூரின் சமீபத்தில் இன்றும் உளதாய கம்பநாடு இவருக்குச் சொந்தம். அது இவர் தகப்பனார் காலத் திலேயே கைசோர்ந்து விட்டது. அது காரணம்பற்றியே இவரைக் 'கம்பர்' எனப்பட்டது. பாண்டிய நாட்டை யுடையவன் பாண்டியன் எனவும், சோழநாட்டை யுடையவன் சோழன் எனவுங் கூறப்படுவனபோல; கம்பனாட்டை யுடையவனையுங் "கம்பன்" எனப்பட்டு வந்தது. இதோடு கம்பநாடு இவருக்குச் சொந்தம் என விளக்க "கம்பநா டுடைய வள்ளல்" எனவும், "கம்பநா டாள்வார்"* எனவும் வற்புறுத்தி யிருக்கின்றன. இவற்றால் கம்பர் அரசரென விளங்கினர். நாடுரிமையால் மாத்திரம் அல்ல, குலத்தாலும் அவர் அரசரெனப்படுவர்.

"The imitation, not translation, of the Ramayana, was composed about the eleventh century A. D by Kamban, the son of a king and not of the priestly tribe. His production, consisting of 12,016 stanzas, in five books, is considered by learned Tamilians as superior to the original" Vide, Winslow's Tamil and English Dictionary, preface. P, VI.

---

* ஆள்வார் என்பது ஆழ்வார் என எதுகைநோக்கிக் கூறப்பட்டது.

"தமிழ் ராமாயணம் எழுதினவர் கம்பர். இவர் அரச குமாரர். ஓச்சகுலத்தவர் அல்லர். பதினோராம் நூற்றாண்டில் இருந்தவர். வால்மீகி ராமாயணத்தைத் தமிழில் மொழி பெயர்க்காமல் அதன்பொருளை தன்மனோரதப்படி விரித்து எழுதியிருக்கின்றார். அதை ஐந்து காண்டங்களாகப் பிரித்து, 12016-பாக்களால் அடக்கி யிருக்கின்றார்" என்பதாம். இவ்வங்கிலேயப் பகுதியும் 'கம்பரை அரசர்' எனவே கூறுகின்றது. அரசர்களுள் சூரியகுலம், சந்திர குலமென இருவகுப்பிருத்தலின், அவற்றுள் கம்பர் சூரிய குலத்தவர் ஆவர்.

இராமாயணத் தனியன்.

"தரா தலத்தி னுள்ள தமிழ்க் குற்ற மெல்லாம்
அராவு மர மாயிற்றன்றே—இராவணன்மேல்
அம்புநாட் டாழ்வா னடிபணியு மாதித்தன்
கம்ப நாட் டாழ்வான் கவி."

இதில் கம்பனை "ஆதித்தன் கம்பநாடன்" எனக்கூறி யிருக்கின்றது. 'ஆதித்தன் கம்பநாடன்' என்றால் "ஆதித்தன்=சூரிய குலத்திலுதித்த, கம்பன்=கம்பன் என்னும் பெயரையுடைய, நாடன்=இராஜன்" என்பதாம். அதாவது 'சூரிய குலத்திலுதித்த கம்பராஜன்' என்பது தேர்ந்த பொருள்.

இராமாயணத் தனியன்.

"இம்பரு மும்பர் தாமு மேற்றிடு மிராமன் காதைத்
தம்பமாய் முத்தி சேர்க்குஞ் சத்தியஞ் சத்தி யம்மே
அம்பர மதனின் மேவு மாதித்தன் புதல்வன் ஞானக்
கம்பன் சொல் கமலபாதங் கருத்துற விருத்து வாமே"

இச்செய்யுளிலும் கம்பனை "ஆதித்தன் புதல்வன் கம்பன்" எனக் கூறியிருக்கின்றது. 'ஆதித்தன் புதல்வன்

கம்பன்' என்றால் 'ஆதித்தன்=சூரியனது, புதல்வன்= குலத்தி லுதித்தவன், கம்பன்=கம்பன்' என்பதாம். 'சூரிய குலத்தி லுதித்த கம்பன்' என்பது பொருள்.

கம்பராமாயணம், தனியன்.

"வாழ்வார் திருவெண்ணெய் நல்லூர்ச்
சடையப்பன் வாழ்த்து பெறத்
தாழ்வா ருயரப் புலவோ
ரகவிருள் தானகலப்
போழ்வார் கதிரி னுதித்த தெய்வப்
புலமைக் கம்ப நாட்
டாழ்வார் பதத்தைச் சிந்திப் பவர்க்
கியாது மரிய தன்றே"

இதில் வரும் "கதிரில் உதித்த கம்பர்" என்பதற்கு "கதிரில்=சூரியகுலத்தில், உதித்த கம்பர் = உற்பவித்த கம்பர் எனப்படும். சூரியகுல க்ஷத்திரியர் ஆனமையினு லேயே நாடன் என்னும் பெயரைப் பெற்றனர். "அன்னு னிறுமொழி யாண்பாற் படர்க்கை"* என்னும் நன்னூற் சூத்திரத்தால் நாடன் என்பதும், நாடான் என்பதும் ஒரு பொருள்கொண்டு அரசரைக் குறிக்கும்.

10. சேக்கிழார் காலம்:—இவர் கிறிஸ்தாப்தம் 1070-ம் வருடத்தி லிருந்த அநபாயச் சோழன் காலத்தவர்.‡ அநபாயச் சோழன் அவையிலேயே சேக்கிழார் பெரிய புராணம் பாடி அரங்கேற்றினர். பெரிய புராணத்தில் கூறப்பட்டுள்ள அறுபத்து மூன்று நாயன்மார்களுள் நமது குலத்துதித்தார் எழுவர்களாவர். அவராவார்:—"இடங்கழி நாயனர், ஏனுதிநாத நாயனர், கோச்செங்கட்சோழ

* நன்னூல், சொல்லதிகாரம், வினையியல், 6-வது சூத்திரம்.
‡ Epigraphia Indica, P. 133; and also the footnote, P.16.

நாயனார், புகழ்ச்சோழ நாயனார், மங்கையர்க்கரசியார்" என்பவர்கள் சூரியகுலத்தவர்களும்; "சேரமான் பெருமா ணாயனார், நின்றசீர் நெடுமாற நாயனார்" என்பவர்கள் சந் திரகுலத்தவர்களு மாவர். இவ்வெழுவர்களும் நமது சாதி யார்களாக விருக்க, இவர்களில் ஏனாதிநாத நாயனார் ஒரு வரை மாத்திரம் நமது சாதியார் என உலகம்* ஒப்புவ தால், அப்படி உலகம் ஒப்பிய நாயனாரைக் கொண்டே நமது சாதியையும், தொழிலையும் இங்கு சுருக்கி விளக்கு வாம்.

உபமன்னியு பக்தவிலாசம், 29-வது அத்தியாயம்,
ஏனாதிநாதர் சரிதம், 3-வது சுலோகம்.

𑌅𑌸𑍍𑌮𑌿𑌨𑍍 𑌨𑍇𑌨𑌾𑌦𑌿 𑌨𑌾𑌥𑌾𑌖𑍍𑌯
𑌆𑌸𑍀𑌤𑍍 𑌸𑌾𑌕𑍍𑌷𑍀 𑌕𑍁𑌲𑍋𑌦𑍍𑌭𑌵𑌃
𑌨𑍃𑌪𑌶𑍍 𑌶𑌸𑍍𑌤𑍍𑌰 𑌕𑌲𑌾𑌚𑌾𑌰𑍍𑌯𑌃
𑌶𑌿𑌵 𑌭𑌕𑍍𑌤𑌾𑌙𑍍𑌘𑍍𑌰𑌿 𑌸𑌕𑍍𑌤𑌧𑍀 ॥

"அஸ்மின் னேனாதி நாதாக்ய
ஆசீத் ஸாக்ஷீ குலோத்பவ:
ந்ருபஸ் ஸஸ்த்ர கலாசார்ய:
சிவபக் தாங்க்ரி ஸக்ததி://"

(இ-ள்.) "அந்தக்கிராமத்தில் சூரியனது வம்சத்தில் பிறந்தவரும், ஆயுதவித்தைக்கு குருஸ்தானமும், சிவனடி யார்களது பாதத்தைத் துதிப்பவருமாகிய ஏனாதிநாத நாய னார் என்பவர் ஒருவர் இருந்தார்" என்பதாம். இச்சுலோ கத்தில் உபமன்னியர் ஏனாதிநாத நாயனாரை "சாக்ஷி குலத் தவர்"¶ என்றனர். இச்சாக்ஷி என்பது,

* "உலகமென்ப துயர்ந்தோர் மாட்டே" (நிகண்டு.)

¶ விருக்ஷிணிகுலமென்பர் ஸ்ரீ பாலகிருஷ்ண சாஸ்திரி அவர்கள்.

அமரசிம்மம், பிரதமகாண்டம், வ்யோமவர்க்கம்,
103-வது சுலோகம்.

𑌕𑌰𑍍𑌮𑌸𑌾𑌕𑍍𑌷𑍀 𑌜𑌗𑌚𑍍𑌚𑌕𑍍𑌷𑍁𑌃
𑌅𑌂𑌶𑍁𑌮𑌾𑌲𑍀 𑌤𑍍𑌰𑌯𑍀𑌤𑌨𑍁𑌃

**"கர்மஸாக்ஷி** ஜெகச்சக்ஷு:
ரம்சுமாலி த்ரயீதநு"

என்னும் அமர சுலோகத்தால் **சூரியனைக் குறிக்கும்.** தமிழில் **"சான்று"** எனத்திரியும். அது **"ஆன்"** என்னும் ஆண்பால் விகுதியைப் பெற்று, **"சான்றான்"** எனப்படும். இப்பெயரையே சேக்கிழார் நமதுகுல ஏனாதிநாத நாயனாருக்கு சாதிப்பெயராகச் சூட்டியுள்ளார்.

பெரிய புராணம், ஏனாதிநாத நாயனார் புராணம்,
2-வது செய்யுள்.

"வேழக் கரும்பினோடு மென்கரும்பு தண்வயலிற்
றோழக் கதிர்ச்சாலி தானோங்குந் தன்மையதாய்
வாழக் குடிதழைத்து மன்னியவப் பொற்பதியில்
**ஈழக் குலச்சான்றா ரேனாதி நாதனார்"**

என்னுஞ் செய்யுளில் விளங்கும் **சான்றார்** என்னும் பெயரும்,

"தரணிசெங் கதிரோன் சண்டன்
தபநனே யொளியே **சான்றோன்"**

என்னும் சூடாமணி நிகண்டின் சூத்திரத்தால் சூரியனைக் குறிக்கும். ஏனாதிநாத நாயனார் சூரியகுல க்ஷத்திரியராதலின், அவரை சூர்யகுல க்ஷத்திரியர் என விளக்கவே சேக்கிழார் **சான்றார்** என்னும் சாதிப்பெயரைத் தந்து விளக்கினர். அப்படி சூரியகுலத்தவரா யில்லாமல், **அவர்**

கள்விலேனரா யிருப்பின், இச்சேக்கிழாருக்கு 250-வருடத்திற்கு முன் சாதிப்பட்டோலே சேந்தனரால் படிக்கப்பட்டிருத்தலால், அப்பட்டோலேயாகிய திவாகரத்திற் கூறிய, "பழையர், துவசர், படுவர்" என்னும் கள்விலேனாது குலப் பெயர்களை, சேக்கிழார் ஏனதிநாத நாயனருக்குக் குலப் பெயராகத் தந்து, அவரை கள்விலேனரோடு சேர்த்திருப்பர். அப்படி சேர்க்காது, அவர் சான்றார் என்னுஞ் சாதிப் பெயரை யுடையவரென்றும், படைத்தொழிலைக் குலத் தொழிலாகப் பெற்றவரென்றும், சேக்கிழார் பெரியபுராணத்தில் கூறியிருத்தலால், அவர் கள்விலேனராகார். அவர் குலத்திலுதித்த நாமும் கள்தொழிலுக் குரியவராகோம்.

நமது சாதியாருக்கு பெரியபுராணகாலம் அதாவது கிறிஸ்தாப்தம் பதினோராம் நூற்றாண்டிலிருந்து, நாளது வரையும் சாதிப்பெயராக வழங்கிவரும், சான்றார் என்னும் பெயரும், கள்விலேனரைக் குறிக்கும் பெயராயிருப்பின், அப்பெரியபுராணத்திற்கு, நூறு வருடத்திற்குபின் ஏற்பட்ட பிங்கலநிகண்டு, சூடாமணி நிகண்டுகளில் வெளிப்படும் கள்விலேனர் பெயர்களோடு சான்றார் என்னும் பெயரையும் ஒன்றாக சேர்த்தெண்ணியிருக்கும். அப்படி பிங்கலம், சூடாமணி நிகண்டார்கள் சேர்த் தெண்ணாமைக்குக் காரணம் கள் என்னும் சப்தம் சான்றார்* என்னும் பெயரில் இல்லாமையாலென்க. அதனால் சான்றார் என்னும் பெயர் கள்விலேனர் ஸ்தானத்தைப் பெறாதென வறியவும்.

† நீறு+ஆன் — நீற்றான் ஆகுமேயன்றி, நீன்றான் ஆகாது; அதைப்போல், சாறு+ஆன் — சாற்றான் ஆகுமேயன்றி, சான்றான் ஆகாது. நில்+ஆன் — நின்றான் என்பதைப் போல், சால்+ஆன் — சான்றான் ஆகும். இவ்வகையால் "சான்றான்" என்பது "சால்" என்னும் பகுதியைப் பெறுமே யன்றி, "சாறு" என்னும் பகுதியைப் பெறாது.

பெரிய புராணத்தில் சேக்கிழார் தமக்கு முன்னுள திவாகரத்தில் கூறியிருக்கும் சாதிப்பெயர்களையே,தாமெடுத் தாண்ட அறுபத்துமூன்று நாயன்மார்களுக்குச் சாதிப் பெயர்களாக சூட்டியிருத்தலை, அவருக்குப்பின்கூறிய நிகண் டார்களும் தாங்கள் எடுத்தாண்ட சாதிப்பெயர்களோடு அச் சாதிப்பெயர்களை ஒன்றாகச் சேர்த்து ஒப்பியிருக்கின்றனர். அஃது வருமாறு:—

பிராமணர்.

1. அப்பூதியடிகளுயனாரை, ஷையார் புராணம். 9-வது செய்யுளில் "மறைத்தலைவர்" எனவும்;
2. உருத்திரபசுபதி நாயனாரை, ஷையார் புராணம், 3-ஞ் செய்யுளில் "வேதியர்" எனவும்;
3. கணநாத நாயனாரை, ஷையார் புராணம், முதற் செய்யுளில் "மறையவர்" எனவும்;
4. குங்கிலியக்கலய நாயனாரை, ஷையார் புராணம், 5-ஞ் செய்யுளில் "அந்தணர்" எனவும்;
5. சண்டேஸ்வர நாயனாரை, ஷையார் புராணம், 10-ஞ் செய்யுளில் "மறையவர்" எனவும்;
6. சிறப்புலி நாயனாரை, ஷையார் புராணம், 3-ஞ் செய்யுளில் "மறைக்குலம்" எனவும்;
7. சோமாசிமாற நாயனாரை, ஷையார் புராணம், முதலாவது செய்யுளில் "மறையாளர்" எனவும்;
8. திருஞானசம்பந்த சுவாமிகளை, ஷையார் புராணம், 15-ஞ் செய்யுளில் "அந்தணர்" எனவும்;
9. திருநீலநக்க நாயனாரை, ஷையார் புராணம், 4-ஞ் செய்யுளில் "மறையவர்" எனவும்;
10. நமிநந்தியடிகளுயனாரை, ஷையார் புராணம், 4-ஞ் செய்யுளில் "அந்தணர்" எனவும்;

11. பூசலார் நாயனாரை, ஷையார் புராணம், 3-ஞ் செய்யுளில் "மறைமரபு" எனவும்;
12. முருக நாயனாரை, ஷையார் புராணம், 5-ஞ் செய்யுளில் "மறையவர்" எனவும்;

### சிவ வேதியர்.

13. சுந்தரமூர்த்தி சுவாமிகளை, ஷையார் புராணம், 3-ஞ் செய்யுளில் "வேதியர்" எனவும்;

14. சடைய நாயனாரையும்
15. இசைஞானியாரையும்
} தடுத்தாட்கொண்ட புராணம், 3-ஞ் செய்யுளில் "வேதியர்" எனவும்;

16. புகழ்த்துணை நாயனாரை, ஷையார் புராணம், முதற் செய்யுளில் "மறையவர்" எனவும்;

### ஆமாத்திய பிராமணர்.

17. சிறுத்தொண்ட நாயனாரை, ஷையார் புராணம், 2-ஞ் செய்யுளில் "ஆமாத்திரர் குலம்" எனவுங் கூறியுள்ளன.

மேற்கூறிய பதினேழு நாயன்மார்களையும் சேக்கிழார் பெரிய புராணத்தில் "அந்தணர், மறையவர், வேதியர்" என்னுஞ் சாதிப்பெயர்களால் வகுத்திருக்கின்றனர். இப்பெயர்கள் திவாகர, நிகண்டார்கள் தேடித்தீட்டிய பிராமணருக்குரிய சாதிப்பெயர்களேயாம். அது:—

"ஐயர் வேதிய ரிருபிறப் பாளர்
மெய்யர் மிக்கவர் மறையோர் பூசுரர்
அந்தணர் நூலோ ரறுதொழி லாளர்"

என்பதால் விளங்கும். சிவவேதியரும், ஆமாத்தியரும் பிராமணரி லுட்பிரிவார்களாவர். சிவவேதியர் கோயில்குருக்களும், ஆமாத்திரர் அரசரோடுஆயுதம் பயிற்றுபவருமாவர்.

முடிமன்னர்.

18. இடங்கழி நாயனாரை, ஷையார் புராணம், 3-ஞ் செய்யுளில் "ஆதித்தன் குலம்" எனவும்;

19. ஏனாதிநாத நாயனாரை, ஷையார் புராணம், 2-ஞ் செய்யுளில் "சான்றார்" எனவுங் கூறியுள்ளன.

இவ்விரண்டு நாயன்மார்களையும் சேக்கிழார் பெரிய புராணத்தில் "ஆதித்தன் குலம், சான்றான் குலம்" என்னுஞ் சாதிப்பெயர்களால் வகுத்திருக்கின்றனர். இப்பெயர்கள் சூரியனைக் குறிக்கும்.

"ஆதித்தன் கனலி ஞாயிறு விரிச்சிகன்
சான்றோ னரியே தபநனென் றினையவு
மான்ற வருக்கற் கநந்தம் பெயரே"

என்னும் திவாகரத்தால் நிலைநாட்டப்படும். இச்சூரியன் பெயர்கள் அவன் குலத்திலுதித்த *சூரியகுலத்தவரை விளக்கும்.

20. கோச்செங்கட்சோழ நாயனாரை, ஷையார் புராணம், 7-ஞ் செய்யுளில் "சோழர் குலம்" எனவும்;

21. புகழ்ச்சோழ நாயனாரை, ஷையார் புராணம், 8-ஞ் செய்யுளில் "அநபாயன் திருக்குலம்" எனவும்;

22. மங்கையர்க்கரசியாரை, ஷையார் புராணம், முதற் செய்யுளில் "வளவர்குலம்" எனவுங்கூறியுள்ளன.

இம்மூன்று நாயன்மார்களையுஞ் சேக்கிழார் பெரிய புராணத்தில் "சோழர் குலம், வளவர் குலம்" என்னுஞ் சாதிப்பெயர்களால் வகுத்திருக்கின்றனர். இப்பெயர்கள் சோழனுக் குரியவை.

---

* க்ஷத்திரியகுல விளக்கம், 120-வது பக்கமிருந்து, 126-வது பக்கம் வரைக்குங் காண்க.

"சென்னி வளவன் கிள்ளி செம்பியன்
சூரியன் புனலுடன் கோச்சோழன் பெயரே"

என்னுந் திவாகரத்தால் விளங்கும். இதில் வரும் அநபாயன் சோழகுலத்தவரும், பெரியபுராணம் பாடச் சொன்னவருமாவர். அதனால் சோழரில் நீட்சியாகிய புகழினை வாய்ந்தவர் என விளக்க "சென்னிநீ டநபாயன் திருக்குலத்து வழிமுதலோர்" என்றார் சேக்கிழார்.

23. நின்றசீர்நெடுமாற நாயனாரை, ஷெயார் புராணம், 7-ஞ் செய்யுளில் பஞ்சவர் எனவும்; காரிநாயனார் புராணம், 5-ஞ் செய்யுளில் "வழுதியர் தம் மதிமரபு" எனவுங் கூறியுள்ளன. "வழுதி மீனவன் பஞ்சவன் மாறன்" என்னுந் திவாகரத்தால் பாண்டியனை விளக்கி, "இந்து சோமன் பிறைமதி சசியென" என்னுந் திவாகரத்தால் அப்பாண்டியனது குலத்தை சந்திரகுலம் என விளக்கினது.

24. சேரமான் பெருமாணாயனாரை, ஷெயார் புராணம், 5-ஞ் செய்யுளில் "சேரர் குலம்" எனவுங் கூறியுள்ளது. "சேரலன் மலயமான் கோச் சேரன் பெயரே" என்னுந் திவாகரத்தால் சேரனைக் குறிக்கும். இவர்களெழுவரும் முடிமன்னராவர்.

## குறுநில மன்னர்.

"குறுநில மன்னர்" என்பது "குறும்பு நில மன்னர்" என விரியும். "குறித்தெழு குறும்பரூரே குறும்பு பாலைக்கே கூற்றும்" *என்னும் நிகண்டால் "குறும்பு" என்

* சூடாமணி நிகண்டு, இடப்பெயர்த்தொகுதி, 39-வது செய்யுள்.

பது பாலைநிலத்தைக் குறிக்கும். குறும்பு நில மன்னர் என்பது அப்பாலைநிலத் தலைவனைக் குறிக்கும்.

25. ஐயடிகள்காடவர்கோனாயனாரை, ஷையார் புராணம், முதற் செய்யுளில் "பல்லவர் குலம்" எனக் கூறியுள்ளது.

ஐயடிகளும் பாலைநிலத்தலைவர்களுள் ஒருவர். அவரை "காடவர்கோன்" எனக் கூறியுள்ளது. காடு + அர் = காடவர் என்னும் பெயர் காட்டிலுள்ளவரைத் தெரிவிக்கும். ஐயடிகள் காட்டிலுள்ள வேடர்களுக்குத் தலைவராயினமையின் "காடவர் கோன்" எனப்பட்டனர்.

26. கழற்சிங்கநாயனாரை, ஷையார் புராணம், முதற் செய்யுளில் "பல்லவர் குலம்" எனவுங் கூறியுள்ளது.

ஐயடிகளையும், கழற்சிங்கரையும் "பல்லவர் குலத்தவர்" எனக் கூறியுள்ளது. இவர்கள் வேடர்களாயினமையின் தாழ்ந்த சாதியாராவர். அதை விளக்கவே "முறையிலார் முசுண்டர் மூர்க்கர் முசுடர் பல்லவரே கையர், மறைவிலாக் கலர் மூவாறு மன்னுபூ ரியருங் கீழோர்" என்னும் நிகண்டின் சூத்திரத்தை யனுசரித்து, "பல்லவர்" என்னுஞ் சாதிப்பெயரைப் பெற்றனர். இப்பல்லவருக்குரிய முறையிலார் என்னும் பெயரையும் இங்கு கவனிக்கற்பாலது. பல்லவர் = கீழ்மக்கள்.

ஐயடிகள் காடவர், கழற் சிங்கர் என்னும் பெயர்களின் ஈற்றிலுள்ள "காடவன், சிங்கன்" என்பன ஒரு பொருளையே குறிக்கும். காடவன் என்பது காட்டிலுள்ள குறவனைத் தெரிவித்தலைபோல, சிங்கன் என்பதும் குறவனையே தெரிவிக்கும். இவ்வகையாலும் ஐயடிகள் காடவர்கோனாயனாரும், கழற்சிங்க நாயனாரும் குறவர்களுக்குத் தலைவர்களென வறியலாம்.

27. கூற்றுவநாயனாரை, ஷை யார் புராணம், 3-ஞ் செய்யுளில் "முடியோன் றேழிய வரசர்திரு வெல்லா முடைய ராயினார்" எனவுங் கூறியுள்ளது.

முடி குறுநிலமன்னராகிய குறவருக்கு உரியதன்று. அதனாலேயே கூற்றுவ நாயனாருக்கு "முடியொன் றேழிய வரசர் திருவெல்லா முடைய ராயினார்" எனக் கூறினர்.

தொல்காப்பியம், பொருளதிகாரம், மரபியல்,

83-வது சூத்திரம்.

"வில்லும் வேலுங் கழலுங் கண்ணியுந்
தாரு மாரமுந் தேரும் வாளு
மன்பெறு மரபி னேனோர்க்கு முரிய"

இது முடியுடை வேந்தரல்லாக் குறுநிலமன்னர்க் குரியன கூறுகின்றது. (இ-ள்) இவ்வெண்ணப்பட்டன வெல்லாங் குறுநில மன்னர்க்கு உரியன. (எ-று) மன்பெறு மரபின் ஏனோரெனப்படுவார், அரசுபெறு மரபின் குறுநில மன்னர் எனக் கொள்க" என்பதால் முடி குறுநில மன்னர்க் குரிமையில்லை யென வறியலாம். கூற்றுவர் தங்கள் குலத்திற்கு உரிமையில்லாததைப் பெற முயன்று தில்லைவாழந்தணரை வேண்டினர். அவர்கள் சோழ குலத்தவர்களுக்கன்றி, மற்றையோருக்கு முடிசூட்டோ மெனக் கூறி, தில்லைவாழந்தணர் கூற்றுவ நாயனாருக்குப் பயந்து சேர நாட்டிற்கு ஓடினர். கூற்றுவர் சேரவம்ஸத்தவரா யிருந்தால், அவர்கள் சேரநாட்டிற் கோடார். இத்யாதிப் பிரமாணங்களால் கூற்றுவ நாயனார் சேர வம்ஸத்தவரும் அல்லர், சோழ வம்ஸத்தவரும் அல்லர் என முடிக்கப்படும்.

28. நரசிங்கமுனையரைய நாயனாரை, ஷையார் புராணம், முதற் செய்யுளில் "காவலர்" எனக் கூறியுள்

ளது. காவலர் என்பது காவல் புரிதலால் ஏற்பட்ட பெயராகும்.

இலக்கணவிளக்கம், பொருளதிகாரம், அகத்திணையியல், 68, 69-வது சூத்திரங்கள்.

"அறப்புறங் காவ னாடுகாவ லெனச்
சிறப்புறு காவற் றிறமிரு வகைத்தே."

அவற்றுள்,

"அறப்புறங் காவ லனைவர்க்கு முரித்தே
மற்றைக் காவல் கொற்றவர்க் குரித்தே"*

என்பதால் அறப்புறங் காவல் என்றும், நாடு காவல் என்றும் இருவகைத்து. அறப்புறங்காவல் என்பது அரசனுக்கினைக் குட்பட்டு, அறத்தின் வழிநின்று, அவனது ஊரைக் காத்தலாம். இவ்வகையில் நின்றவர்களே குறுநில மன்னர்களாவர். அவர்கள் அரசனது கட்டளைக்குட்பட்டு, காட்டையும், அதைச்சார்ந்த ஊர்களையும் காவல்புரிந்து வந்தனர்கள். அதனாலேயே அவர்கள் காவலர் எனப்பட்டனர். நரசிங்கமுனையரைய நாயனாருக்கு "காவலர்" என்னும் பெயரெய்தியதும் இவ்வகையே!

29. பெருமிழலைக்குறும்ப நாயனாரை, ஷையார் புராணம், 2-ஞ் செய்யுளில் "அதிபர் மிழலைக் குறும்பனார்" எனக் கூறியுள்ளது.

இவருங் குறுநில மன்னரே யாவர். இவரை "அலகில் குறும்ப ராடியிற் சித்திரை" என்னும் அறுபத்துமூவர் திருநட்சத்திரத்தில் "குறும்பர்" எனக் கூறியுள்ளது.

---

* முத்துவீரியம், பொருளதிகாரம், அகவொழுக்கவியல், 46-வது சூத்திரம்; தொன்னூல் விளக்கம், பொருளதிகாரம், சாதித் தொழிலுரிமை, 3-வது சூத்திரம்.

அதோடு "அதிபர் மிழலைக் குறும்பனார்" என்பதில் வெளிப் படும் "அதிபர்" என்பதையும் இங்கு கவனித்தற்பாலது.

"வேளிரும் புரோசருங் குறுநில வேந்த
ரரட்டருங் குறும்பரு மாகு மென்ப"

என்னுந் திவாகரச் சூத்திரத்தால் குறும்பர் என்பது குறுநில மன்னருக்குரிய பல பெயர்களில் ஒன்றாகும். குறும்பு என்பது பாலை நிலத்தைச் சுட்டி அதில் வசிக்கும் வேடரை குறும்பர் எனத் தெரிவிக்கும்.

30. மெய்பொருணயனாரை, சேடியார் புராணம், முதற் செய்யுளில் "மலாடர் கோமான்" எனவும், "சேதிபன்" எனவுங் கூறியுள்ளன.

இதில் வரும் "மலாடர் கோமான்" என்பதில் வெளிப் படும் "மலாடர்" என்பது "பண்ணை + ஆளர் = பண்ணாடர்" என்பதைபோல்; "மலை + ஆளர் = மலாடர்" எனப்படும். இதனால் மெய்ப்பொருணயனார் மலையை ஆளுங் குறவருக் குத் தலைவர் என விளங்கினர். இதோடு அவரை "சேதி பன்" எனவுங் கூறியுள்ளது. திருவாலவாயுடையார் திரு விளையாடல், 2-வது செய்யுளில் "தேங்குபுகழ் வன்னி யர்க டலைவனாய சேதியர்கோ னென்பானோர் கிராதர் கோமான்" எனவும்; திருவிளையாடற் புராணம், மெய்க் காட்டிட்ட படலம், 4-வது செய்யுளில் "வல்வேடர்க் கதி பதியாய் வருசேதி ராயனேனும், வில்வேட னொருவனவன் விறல் வலியான் மேலிட்டு" எனவுங் கூறிய பகுதிகளை கவனிப்பின், வேடனாகிய சேதியர் கோமான் பரம்பரை யில் இந்த மெய்ப்பொருணயனார் உதித்தமையால் சேதி நாடு இவருக் குரியதாயிற்று. அதனாலேயே இவரை "சேதி பன்" எனவுங் கூறப்பட்டது. இவற்றாலும் குறுநில மன்னர் வேடர் எனவே யறியலாம். இவ்வாறு நாயன்மார்களும்

குறுநில மன்னர் ஆவர். இவர்களின் விளக்கம் இனி வெளிப்படும் "குறுநில மன்னர் ஆராய்ச்சி" என்னும் நூலின்கண் காண்க.

## வைசியர்.

31. அமர்நீதி நாயனாரை, டியார் புராணம், 2-ஞ் செய்யுளில் "வணிகர்" எனவும்;

32. இயற்பகை நாயனாரை, டியார் புராணம், 2-ஞ் செய்யுளில் "வணிகர்" எனவும்;

33. கலிக்கம்ப நாயனாரை, டியார் புராணம், 2-ஞ் செய்யுளில் "வணிகர்" எனவும்;

34. காரைக்காலம்மையாரை, டியார் புராணம், 2-ஞ் செய்யுளில் "வணிகர்" எனவும்;

35. மூர்த்தி நாயனாரை, டியார் புராணம், 8-ஞ் செய்யுளில் "வணிகர்" எனவுங் கூறியுள்ளன.

இவ்வைவர்களுக்கும் வரும் "வணிகர்" என்பது வைசியருக்குரிய சாதிப்பெயர். அது "வளம்பெறு வணிகர் நல்லான் காவலர் உழவர் மற்றும்" என்னும் நிகண்டால் விளங்கும். வணிகம்=வர்த்தகம், அதையுடையவர் வணிகர்.

## சூத்திரர்.

36. அறிவாட்டாய நாயனாரை, டியார் புராணம், 4-ஞ் செய்யுளில் "வேளாண்டலைவர்" எனவும்;

37. இளையான்குடிமாற நாயனாரை, டியார் புராணம், முதற் செய்யுளில் "சூத்திரர்" எனவும்;

38. ஏயர்கோன்கலிக்கம்ப நாயனாரை, டியார் புராணம், 5-ஞ் செய்யுளில் "வேளாளர்" எனவும்;

39. கோட்புலி நாயனாரை, டியார் புராணம், முதற் செய்யுளில் "வேளாளர் குலம்" எனவும்;

40. சத்திய நாயனாரை, ஷையார் புராணம், 2-ஞ் செய்யுளில் "வேளாளர் குலம்" எனவும்;

41. சாக்கிய நாயனாரை, ஷையார் புராணம், 2-ஞ் செய்யுளில் "வேளாளர் குலம்" எனவும்;

42. செறுத்துணை நாயனாரை, ஷையார் புராணம், 2-ஞ் செய்யுளில் "வேளாளர் குடி" எனவும்;

43. திருநாவுக்கரசு சுவாமிகளை, ஷையார் புராணம், 15-ஞ் செய்யுளில் "வேளாளர் குலம்" எனவும்;

44. மானக்கஞ்சார நாயனாரை, ஷையார் புராணம், 7-ஞ் செய்யுளில் "வேளாளர் குடி" எனவும்;

45. முனையடுவார் நாயனாரை, ஷையார் புராணம், 2-ஞ் செய்யுளில் "வேளாளர்" எனவும்;

46. மூர்க்க நாயனாரை, ஷையார் புராணம், 2-ஞ் செய்யுளில் "வேளாளர் குலம்" எனவும்;

47. வாயிலார் நாயனாரை, ஷையார் புராணம், 6-ஞ் செய்யுளில் "சூத்திரர்" எனவும்;

48. விறன்மிண்ட நாயனாரை, ஷையார் புராணம், 4-ஞ் செய்யுளில் "வேளாளர் குலம்" எனவுங்கூறியுள்ளன.

இப்பதின் மூன்று நாயன்மார்களையும் சேக்கிழார் "வேளாளர், சூத்திரர்" என்னுஞ் சாதிப் பெயர்களால் அழைத்துள்ளார். இவைகள் சூத்திருக் குரியவை.

"வினைஞர் சூத்திரர் பின்னவர் சதுர்த்தர்
வளமையர் வேளாளர் மண்மகள் புதல்வர்."

என்னுந் திவாகரத்தால் விளங்கும். சூத்திரர்:—சூத்திரம்=யத்திரத்தைப்போல் வேலை செய்பவர். வேளாளர்:—வேளாண்மை=பயிரை யுடையவர்.

## குயவர்.

49. திருநீலகண்ட நாயனுரை, ஷையார் புராணம், முதற் செய்யுளில் "வேட்கோவர்" என்றனர். வேட்கோவர்=வேள்கு+ஓவர் எனப் பிரிந்து புணரும். வேள் என்பது ஓவர் என்னுஞ் சொல்லொடு புணருங்கால் இடையில் "கு" சாரியைப்பெற்று வேள்கு+ஓவர் என நின்று, "ளவேற் றுமையிற் றடவும்"* என்னும் நன்னூற் சூத்திரத்தால் வேட்கு+ஓவர் என நின்று, "உயிர் வரின் உக்குறண் மெய்விட் டோடும்"† என்னுஞ் சூத்திரத்தால் உகரங் கெட்டு உயிரேரி, வேட்கோவர் என நின்றது. மண்ணை சித்தரிப்பவர் எனப் பொருள் கொண்டது. மண்ணை சித்தரிப்பவர் என்னும் இரண்டாம் வேற்றுமை ஐகாரத்திற்கு பதிலாக, வேட்கு என்னுஞ் சொல்லில் நான்காம் வேற்றுமை "கு" விகுதி விளங்கலால் "தடுமா றுருபுக டாஞ்சில வுளவே"‡ என்னும் இலக்கணக் கொத்தால், தடுமாறி இரண்டாம் வேற்றுமை யுருபுக்குப் பதிலாக, நான்காம் வேற்றுமை யுருபு தோன்றினது.

"கும்பகாரர் குலாலர் வேட்கோவ ரென்
றிங்கிவை குயவர் மட்பகைஞ ரென்ப" (திவாகரம்.)

* நன்னூல், எழுத்ததிகாரம், மெய்யீற்றுப்புணரியல், 24-வது சூத்திரம்.

† நன்னூல், எழுத்ததிகாரம், உயிரீற்றுப்புணரியல், 14-வது சூத்திரம்.

‡ இலக்கணக் கொத்துரை, வேற்றுமையியல், 49-வது சூத்திரம்.

### சாலியர்.

50. நேச நாயனாரை, ஷையார் புராணம், 2-ஞ் செய்யுளில் "அறுவையர்" என்றனர். அறுவையர் என்பது 'அறுவை=உடை, சீலை, துகில்' எனப் பொருள் கொள்ளும். அதாவது சீலையைக் குறித்து, அதைநெய்பவரை விளக்கலால் "சாலியர்" எனப் படுவர். சாலிகை = கவசம் அல்லது உடை. அதை நெய்பவர் சாலியராவர்.

### இடையர்.

51. ஆய நாயனாரை, ஷையார் புராணம், 8-ஞ் செய்யுளில் "ஆயர்" எனவும்;

52. திருமூல நாயனாரை, ஷையார் புராணம், 11-வது செய்யுளில் "ஆமேய்ப்பார்குடி" எனவுங் கூறினர். ஆ=பசு, அதை மேய்ப்பவர் ஆயர்.

"அண்டர் கோபாலர் ஆயர் அமுதர்" (திவாகரம்.)

### மறவர்.

53. கண்ணப்ப நாயனாரை, ஷையார் புராணம், 7-ஞ் செய்யுளில் "மறவர்" என்றனர். மறம்=கொலை, அத்தொழிலைச் செய்பவர் மறவர்.

"மறவ ரெயினர் பாலைநில மாக்கள்" (திவாகரம்.)

### பரதவர்.

54. அதிபத்த நாயனாரை, ஷையார் புராணம், 9-ஞ் செய்யுளில் "நுளையர்" என்றனர்.

"பரதவர் நுளையர் கடலர் வலையர்" (திவாகரம்.)

### செக்கார்.

55. கலிய நாயனாரை, ஷையார் புராணம், 5-ஞ் செய்யுளில் "தயிலவினைத் தொழின் மரபார்" என்றனர்.

இது செக்கில் எள்ளையிட்டு ஆட்டுபவரைக் குறிக்கும்.

"சக்கிரி நந்திகள் செக்கா ராகும்" (திவாகரம்.)

## வண்ணார்.

56. திருக்குறிப்புத்தொண்ட நாயனாரை, அடியார் புராணம், 111-ஞ் செய்யுளில் "ஏகாலியர்" என்றனர். . ஏகாலி=சவுக்காரம், அதைப்போட்டு வெளுப்பவர்.

"ஏகாலியர் தூச ரீரங் கோலியர்" (திவாகரம்.)

## புலையர்.

57. திருநாளைப்போவார் நாயனாரை, அடியார் புராணம், 11-ஞ் செய்யுளில் "புலையர்" என்றனர்.

"இழிஞர் கொலைஞர் புலைஞ ரென்றுங்
கிசையும் பெயர்சண் டாளர்க் கெய்தும்" (திவாகரம்)

## பாணர்.

58. திருநீலகண்டத்துப்பாண நாயனாரை, அடியார் புராணம், 3-ஞ் செய்யுளில் "பாணர்" என்றனர்.

"இன்னிசைக் காரர் மதங்கர் பாணர்" (திவாகரம்.)

## சாதியறியாத நாயன்மார்கள்.

59. எறிபத்த நாயனார்.
60. கணம்புல்ல நாயனார்.
61. காரிய நாயனார்.
62. குலச்சிறை நாயனார்.
63. தண்டியடிகணாயனார்.

## கூட்டத் தடியார்கள்.

64. அப்பாலு மடிச்சார்ந்தார்

65. சித்தத்தை சிவன்பால் வைத்தார்
66. திருவாரூர்ப்பிறந்தார்
67. தில்லைவாழந்தணர்
68. பத்தராய்ப் பணிவார்
69. பரமனையே பாடுவார்
70. பொய்யடிமை யில்லாத புலவர்
71. முப்பொழுதுந் திருமேனி தீண்டுவார்
72. முழுநீறு பூசிய முனிவர்

இவ் வெழுபத்திரண்டு நாயன்மார்களும் பெரியபுராணத்திற் குட்பட்டவர். இவர்களுள் அறுபத்துமூன்று தனியடியார்களும், ஒன்பது கூட்டத்தடியார்களு மாவர். இவ்வறுபத்துமூன்று தனியடியார்களுக்கும் சேக்கிழார் திவாகரர் கூறிய சாதிப் பெயர்களையே குலப்பெயர்களாகச் சூட்டி அழைத்திருக்கின்றாரென வறிவித்தனம். ஏனாதிநாத நாயனார் கள்குலத்தவரா யிருப்பின், திவாகரர் கூறிய கள்விலைஞருக் குரிய "பழையர் துவசர் படுவர் கள்விலைஞர்" என்னும் கள்விலைஞரது சாதிப்பெயர்களி லொன்றை சூட்டி யழைத்தே யிருப்பர். அப்படி யழைக்காமல் **சான்றார்** என்னுஞ் சூரியன் பெயரால் அழைத்திருத்தலால் ஏனாதிநாத நாயனார் கள்குலத்தவர் அல்ல வென்பது சேக்கிழாரின் முடிவு.

சிலர் "**ஈழக்குலம்**" எனப் பெரியபுராணத்துட் கூறியிருத்தலின் "**கள்குலத்தவர்**" என்பர். இதுவுந்தவறு. "**ஈழக்குலச் சான்றார்**" என்பது "**ஈழ+குலம்+சான்றார்**" என்னும் மூன்று சொல்லாலாகிய ஒரு தொடர்மொழி. இவற்றுள் "**ஈழ**" என்பதை "ன"கர மெய்யைக் கொண்டு முடிப்பின், "**ஈழன்**" என நின்று, உயர்திணைப் பெயராகவும், "ம"கர மெய்யைக்கொண்டு முடிப்பின் "**ஈழம்**" என

நின்று, அஃறிணைப் பெயராகவும் விளங்கும். அவற்றுள் "ஈழன்" என்பது உயர்திணைப் பெயராயினமையின் ஒரு மனிதனது இடுகுறிப் பெயரையும், "ஈழம்" என்பது அஃறிணைப் பெயராயினமையின் "கள், பொன், தேசம்" என்னும் பொருள்களையுங் குறிக்கும். இங்கு "ஈழக்குலச் சான்றார்" என்னுந்தொடர் உயர்திணையாகிய ஏனாதிநாத நாயனாரையே குறித்து நிற்றலின், 'ஈழன் குலத்து சூரிய வம்ஸத்தவர்" அதாவது "சூரிய வம்ஸத்தில் வந்த ஈழன் குலத்தவர்" என உயர்திணைப் பொருளையே கொள்ளும்.

"பொதுப்பெய ருயர்திணைப் பெயர்க ளீற்றுமெய்
வலிவரி னியல்பா மாவி யரமுன்
வன்மை மிகாசில விகாரமா முயர்திணை"

என்னும் நன்னூற் சூத்திரத்தில் வெளிப்படும் "சில விகாரமா முயர்திணை" என்னும் விதியை அனுசரித்து "ஆசீவகன்+பள்ளி=ஆசீவகப்பள்ளி" எனவும், "குமரன் +கோட்டம்=குமரக்கோட்டம்" எனவும் உயர்திணையில் நிலைமொழியின் ஈற்று மெய்கெட்டு, வருமொழியின் வல்லினமெய் மிகுத்து தமக்கேற்றவாறு விகாரமாயின. இவற்றைப்போல் "ஈழக்குலம்" என்பதும் வல்லினமெய் மிகுத்து விகாரப்பட்டிருத்தலின், மேற்படி விதியை அனுசரித்து "ஈழன்+குலம்" எனவே பிரித்து பொருள்கொள்ள வேண்டுமென விளங்கும்.

அன்றியும் "குலம்" என்னுஞ் சொல் உயர்திணையாகவும், அஃறிணையாகவும் வழங்கும். உயர்திணையாக வழங்குமேல் "சாதி, வம்ஸம்" என்னும் பொருள்களையும், அஃறிணையாக வழங்குமேல் "தொகுதி, கூட்டம்" என்னும் பொருள்களையுந் தரும். இந்த ஏனாதிநாத நாயனாரது சாதியையே விளக்க வந்தமையின் உயர்திணையாகவே

யிருத்தல் வேண்டும். குலம் என்பது உயர்திணையா யிருப்பின் அதற்கு முன்னுள்ள "ஈழ" என்பது "ன" கர மெய்யைப்பெற்று, "ஈழன்" என்று உயர்திணையாகவே இருத்தல் வேண்டும். உயர்திணையிலேயே விகாரப்படுமென்பதையும் இங்கு கவனிக்க வேண்டும். இதுவே இலக்கண முடிவு.

ஆயின் சிலர் "ஈழம்" எனப் பிரித்து "கள்" என்னும் பொருளைக்கொள்வர். அப்பொழுது "ஈழம்" என்பது "ஈழம் பொன் கள்ளோர் தேயம்" என்னும் நிகண்டின் சூத்திரத்தால் "கள்ளையும், பொன்னையும், தேசத்தையுங்" குறித்து அஃறிணைப் பெயராக நிற்கும். இவ்வஃறிணைப் பெயரோடு "குலம்" சேரின், அதுவும் அஃறிணைப் பொருளையே கொண்டு "கள் தொகுதி" எனவே விளக்கும். நளவெண்பாவில் வெளிப்படும் "கூவினவே கோழிக்குலம்" என்னும் பகுதியில் வரும் கோழி என்பது அஃறிணையாதலின், அதனோடு வருங் குலமும் அஃறிணையாகி, அஃறிணைப் பொருளைக்கொண்டு, கோழியினது கூட்டத்தை விளக்கலைப்போல் "ஈழம் குலம்" என்னும் அஃறிணைப் பகுதியும் கள் தொகுதியையே விளக்கும். கள் குலத்தவனை விளக்காது.

கள் தொழிலை யுடையாரை ஈழம் என்னும் அஃறிணை பெயரோடு, அன் என்னும் உயர்திணை விகுதிசேர்ந்து "இஈ ஐவழி யவ்வும், ஏனை யுயிர்வழி வவ்வும்"* என்னும் நன்னூற் சூத்திரத்தால், வகர வுடன்படு மெய்யைப் பெற்று, "ஈழம்+அன்=ஈழவன்" எனப்படும். ஈழம்= கள், அன்=அதையுடையவன், கள் தொழிலையுடையவன்

* நன்னூல், எழுத்ததிகாரம், உயிரீற்றுப் புணரியல், 12-வது சூத்திரம்.

என்பது பொருள். இவ்வீழவன் கள்ளடியாகப்பிறந்த சாதிப்பெயரைப் பெற்றிருத்தலால், இவனே கள்குலத்தவனாவன். சாதிப்பெயர்களெல்லாம் பிரித்து பொருள் கொள்ளக் கூடியது. ஈழன் என்பது பிரிக்கக்கூடாத பெயர்.

ஈழன் என்பவன் மைசூர் பிரதேசத்தையும், பிறகு இலங்கையையும் ஆண்டவன். சூரியகுலத்தவன். சோழன் என்போன்ற இடுகுறிப்பெயரை யுடையவன். ஒருவனுக்கு இடப்பட்டப் பெயர். அதனால் அது சாதிப்பெயராகாது. ஈழவன் என்பதைப் பிரித்து பொருள்கொள்ள முடிவதால் அது சாதிப்பெயராகும். ஈழன் என்பது இடுகுறிப்பெயர். ஈழவன் என்பது காரணப்பெயர். இதோடு வகரவுடன்படு மெய்யைப்பெற்ற ஈழவரோடு, அவ்வுடன்படு மெய்யைப் பெறாத ஈழன்குலத்தைச் சேர்த்து, இரு குலத்தவரையும் ஏக குலத்தவராக வெண்ணுவது தவறாகும்.

பரதன்—பரதவன்
குசன்—குசவன்
கொங்கன்—கொங்கவன் அல்லது கொங்குவன் என்பனபோன்று,
ஈழன்—ஈழவன் அல்லது ஈழுவன் என்பதுமாகும்.

இவற்றில் வரும் பரதன் என்பவன் சந்திரகுலத்தரசன் அல்லது சூரியகுல ஸ்ரீராமரின் சகோதரனுமாவன். அவன் வம்ஸத்தில் உதித்தவர்களே பரத குலத்தவர் எனப்படும். அதனால் அப்பெயர் ஒருவனுக்கு இடப்பட்ட பெயராகும். அது சாதிப்பெயராகாது. பரதவன் என்பது காரணப்பெயர். பரதம்=சமுத்திரம், அன்=அதில் வசிப்பவன். சமுத்திரத்தில் வசிப்பவன். பரதம்+அன்=பரதவன். புணர்ச்சியால் வகர வுடன்படு மெய்யைப் பெற்று,

ஒரு சாதியைக்குறிக்கும். ஆகவே பரதன் என்பதும், பரதவன் என்பதும் ஒருபொருள் கொண்டு ஒருசாதியைக் குறிக்காது. அதைப்போல் ஈழன் என்பதும், ஈழவன் என்பதும் ஒரு பொருளைக் குறிக்காது.

பரதன்=ஓர் அரசன்.

குலம்=வம்சம்.

பரதன்+குலம்=பரதக்குலம் என்பது பரதன் வம்சத்தைக் குறிக்கும்.

பரதம்=சமுத்திரம், அதைக் குலத்தொழிற் பொருளாகக் கொள்பவன் பரதவன்.

பரதவன்+குலம்=பரதவக்குலம் என்பது மீன் விலைஞர் வம்ஸத்தைக் குறிக்கும்.

என்பது போல்;

ஈழன்=ஓர் அரசன். இலங்கையை ஆண்டவன்.

குலம்=வம்ஸம்.

ஈழன்+குலம்=ஈழக்குலம் என்பது ஈழன் வம்சத்தைக் குறிக்கும்.

ஈழம்=கள், அதைத் தொழிற் பொருளாகக் கொள்பவன் ஈழவன்.

ஈழவன்+குலம் = ஈழவகுலம் என்பது கள்விலைஞர் வம்ஸத்தைக் குறிக்கும்.

இவ் வகையை நோக்க ஈழக்குலத்தவராகிய சான்றூர் வேறு, *ஈழவகுலத்தவராகிய கள்விலைஞர் வேறென வறியலாம். இவ் விரண்டிற்கும் வகர வுடன்படு மெய்யே வித்தியாசம்.

* Travancore State Manual, Vol. II, Ch. IX. P. 392, 393.

குசன் என்பவன் சந்திரகுல புரூரவன் பரம்பரையில் வந்தவனும், கௌசாம்பி நாட்டை யாண்டவனு மாவன். அதனால். அப்பெயர் ஒருவனுக்கு இடப்பட்ட பெயராகும். அது சாதிப்பெயர் ஆகாது. குசவன் என்பது காரணப் பெயர், குயம்=மட்பாண்டம், அன்=அதை செய்பவன். மட்பாண்டத்தைச் செய்பவன். குயம்+அன்=குயவன். வகர வுடன்படு மெய்யைப்பெற்று, குசவன் எனத் திரிந்து, ஒரு சாதிப்பெயராக நின்றது. குசனையும், குசவனையும் ஒருசாதிக்குரிய பெயரெனக் கூற முடியாது. அதைப்போல் ஈழனையும் *ஈழவனையும் ஒரு கூட்டத்தவரெனக் கொள்ள முடியாது.

அரன் என்பது அரயன் ஆகுமா?
குடகன் என்பது குடவன் ஆகுமா?
சோழன் என்பது சோழியன் ஆகுமா?
வணிகன் என்பது வாணியன் ஆகுமா?
வளவன் என்பது வளமையன் ஆகுமா?
வில்லவன் என்பது வில்லியன் ஆகுமா?

---

* "பாநம் வடிபிழி மதுவழி தொண்டி, யானவ ரிட்டமுஞ் சாதியுங் கள்ளாம்" என்னுந் திவாகரத்தால் (16-வது தொகுதி) தொண்டி என்பது கள்ளையும், தொண்டன் என்பது ஓர் சோழனையுங் குறிக்கும். சுரா என்றால் கள்ளைக் குறிக்கும், சுரபதி என்றால் தேவேந்திரனையும், சுராலயம் என்றால் தெய்வலோகத்தையும், சுராச்சாரி என்றால் தேவகுருவையுங் குறிக்கும். இவற்றைப்போல் ஈழம் என்பது கள்ளையும், ஈழன் என்பது இலங்கையின் ஓர் அரசனையும் குறிக்கும். இவற்றோடு ஈழவர் வேறுசாதியார் சான்றார் வேறுசாதியார் என்பதையும், 23—5—1924-ல் வெளியான "சுதேசமித்திரன்" பத்திரிகையிலும், க்ஷத்திரிய மித்திரன், மலர். 5, இதழ். 10, பக்கம், 285-லுங் காணலாம்.

ஆகாததைப்போல் ஈழன் என்பதும், ஈழவன் அல்லது ஈழுவன் என்பதும் ஒரு சாதியைச் சுட்டும் பெயர்கள் ஆகாது. ஈழன் என்பது இலங்கையின் ஓர் அரசனையும், ஈழவன் என்பது கள்விலைஞரையுங் குறிக்கும்.

சாதிப்பெயர்கள் "பொருளடியாகவும், தொழிலடியாகவும், இடமடியாகவும்" வழங்கி வருமென்னுந் துணிபால் "ஈழம்" என்பதும் ஒருபொருளாயினமையின் அதையனுசரித்தும் வழங்கிவருமென்பர். அப்படி வழங்கிவர, அவ்வஃறிணைப் பெயரோடு, உயர்திணை "ஆண்பால், பெண்பால், பலர்பால்" விகுதிகள் சேர்க்கவேண்டும். அப்பொழுதே உயர்திணையாகி சாதியை விளக்கும்.

ஈழம்+அர்+குலம்=ஈழவர் குலம், ஈழவகுலம், ஈழுவகுலம் என விளங்கும். இது பொருளடியாகப் பிறந்த சாதிப்பெயர்.

பரதம்+அர்+குலம்=பரதவர் குலம், பரதவ குலம், பரவ குலம் என விளங்கும். இது இடமடியாகப் பிறந்த சாதிப்பெயர்.

காவல்+அர்+குலம்=காவலர் குலம் என விளங்கும். இது தொழிற்பெயரடியாகப் பிறந்த சாதிப்பெயர்.

என்பதாதியைக் கவனித்து "ஈழம்+குலம்" என்பது உயர்திணை விகுதி சேர்க்கையில்லாது சாதிப்பெயரை விளக்காதென வறியவும். இதன் விளக்கம் பின்வரும் "ஈழராஜன் சரித்திரம்" என்னும் நூலில் விரிவாகக் காணலாம்.

**11. பிங்கல நிகண்டார் காலம்:**—பிங்கலர் சூரியகுலவரசர். இவரால் இயற்றிய பிங்கல நிகண்டு, சேந்தன் றிவாகரத்திற்குப் பிற்பட்டது.

சூடாமணி நிகண்டு, சிறப்புப் பாயிரம்,
3-வது செய்யுள்.

"அங்கது போய பின்றை
யலகினூல் பிறந்த மற்றுஞ்
செங்கதிர் வரத்திற் றோன்றுந்
திவாகரர் சிறப்பின் மிக்க
பிங்கல ருரை நூற் பாவிற்
பேணினர் செய்தார் சேர
இங்கிவை யிரண்டுங் கற்க
வெளிதல வென்று சூழ்ந்து"

என்னுஞ் செய்யுளால் திவாகரத்திற்கு பிங்கலநிகண்டு பிற்பட்டதென வறியலாம். இனி பிங்கல நிகண்டின் காலத்தை யாராய்வாம்.

நன்னூல், உரிச்சொல்லியல், 19-வது சூத்திரம்.

"இன்ன தின்னுழி யின்னண மியலும்
என்றிசை நூலுட் குணகுணிப் பெயர்கள்
சொல்லாம் பரத்தலிற் பிங்கல முதலா
நல்லோ ருரிச்சொலி நயந்தனர் கொளலே"

என்னும் சூத்திரத்தால் பிங்கல நிகண்டு, நன்னூலாருக்கு முற்பட்டதென விளங்குகின்றது.

நன்னூல், சிறப்புப்பாயிரத்தில்,
"திருந்திய செங்கோற் சீய கங்கன்"

என்பதால் நன்னூல் சீயகங்கன் காலத்தது. இச்சீயகங்கன் (1178, A. D) பன்னிரண்டாம் நூற்றாண்டில் சிம்மாசனமேறிய மூன்றாங் குலோத்துங்கச் சோழன் காலத்தவன் என சிலாசாசன பரிசோதகரால் குறித்திடப் பட்டுள்ளது. ஆகவே, இவற்றால் பனிரெண்டாம் நூற்றாண

டிற்கு பிங்கல நிகண்டு முற்பட்டதென வறியலாம். இந் நிகண்டில் கள்விலைஞரை "பழையர்" முதலிய பெயர்களைத் தந்து அழைக்கப்பட்டு வந்தன.

பிங்கலநிகண்டு, 5-வது ஆடவர்வகை,

88-வது சூத்திரம்.

கள்விலைஞர் பெயர்.

"பழையர் துவசர் படுவர் கள்விலைஞர்"

கள்விலைஞருக்கு பழையர் என்றும், துவசர் என்றும், படுவர் என்றும் சாதிப்பெயர்கள் பிங்கலநிகண்டார் காலமாகிய கிறிஸ்தாப்தம் பனிரெண்டாம் நூற்றாண்டில் வழங்கி வந்தன. இப்பெயர்கள் நமது சாதியாருக்கு வழங்கிவாராமையால் நாம் கள்குலத்தவராகோம். ஆயின் பிங்கலநிகண்டார் நமது குலத்தவருக்கு சாதிப்பெயராக நின்று வழங்கி வரும் சான்றார் என்னும் பெயரையும், ஷை நிகண்டிலேயே எடுத்தாண்டுள்ளார்.

பிங்கலநிகண்டு, 5-வது ஆடவர்வகை,

124-வது சூத்திரம்.

அறிஞர் பெயர்.

"ஆன்றோர் சான்றோ ரறிஞர்தம் பெயரே"

என்னுஞ் சூத்திரத்திலும்;

பிங்கலநிகண்டு, 2-வது வானவர்வகை,

118-வது சூத்திரம்.

சூரியன் பெயர்.

"பகவன் சான்றோன் வேந்தன் ருபகன்
சுடரோன் மாலி சூரியன் பெயரே"

என்னுஞ் சூத்திரத்திலும்;

பிங்கலநிகண்டு, ஒருசொற் பல்பொருள் வகை,
481-வது சூத்திரம்.

சான்றேன்.

"மிருக சீரிடமு மிக்கோன் பெயரும்
பெருகிய கதிரின் பெயருஞ் சான்றேன்"

என்னுஞ் சூத்திரத்திலும் சான்றன் என்னும் பெயரை வெளிப்படுத்தி, சூரியனையும், அறிவோனையும், மிருகசீரிட நட்சத்திரத்தையுங் குறிக்குமெனத் தெரிவித்துள்ளாரே யன்றி, கள்விலைஞரையுங் குறிக்குமெனத் தெரிவித்தாரில்லை. அதனால் சான்றார் வேறுசாதியார், கள்விலைஞர் வேறுசாதி யாரென வறியலாம்.

12. கோத்தவன்குடி-உமாபதி சிவாச்சாரியார் காலம்:— இவர் (சாலி-1235) கிறிஸ்தாப்தம், 1313-ம் வருடம், அதாவது 14-ம் நூற்றாண்டின் துவக்கத்தில் இருந்தவரும், சந்தானசாரியர்களுள் ஒருவரும், சைவசித்தாந்த சாத்திரத் தலைவருமாவர். இவர் "கொடிக்கவி, கோயிற்புராணம், சித்தாந்த அட்டகம், சிவப்பிரகாசம், திருவருட்பயன், வினா வெண்பா, போற்றிப்பஃறொடை, நெஞ்சுவிடுதூது, உண்மைநெறி விளக்கம், சங்கற்பநிராகரணம், திருமுறைகண்ட புராணம், திருத்தொண்டர் புராண சாரம், திருநாமக் கோவை, திருப்பதிக்கோவை திருப்பதிகக் கோவை, திருநட்சத்திரம், சேக்கிழார் நாயனார் புராணம்" முதலிய நூற்கள் இயற்றியுள்ளார். இவற்றுள் "சேக்கிழார் நாயனார் புராணம்" என்பது பெரிய புராணம் பாடிய சேக்கிழாரது சரித்திரத்தை விளக்கும் நூலாகும். இந்நூல் பெரிய புராணத்திற்கு 250-வருடத்திற்குப் பிற்பட்டது. 103-செய்யுட்களால் நிறம்பியது. அவற்றுள் "திருமறையோர்" என்

னும் முதலையுடைய, 36-ஞ் செய்யுளிலிருந்து, "காண்டமிரண்டாகவகுத்து" என்னும் முதலையுடைய, 53-ஞ் செய்யுள் வரைக்கும், அதாவது, 18-செய்யுள்கள் நூதனமாக சாதிப்பயித்தியம் பிடித்த பாமரனால் பிற்காலத்தில் பாடி நுழைத்ததாகும். அப்படிக் கூறியதற்கு காரணம் அதிற் கூறிய சாதிவரிசைக்கு யாதொரு முதநூற் சம்பிரதாயமில்லாமையாலும், அச்செய்யுள்களில் பல ஊழல்கள் நிறம்பி யிருத்தலாலு மென்க.

வெள்ளிப்பண்டாரம் என்பவனால் சில பாக்களைப்பாடி பெரியபுராணத்தில் சேர்த்தெழுதியதைப் போலும்;* சூடாமணி நிகண்டில் "தனவைசியர், பூவைசியர், கோவைசியர்"

---

* "For it has been ascertained that the Puranas which exist now were composed in the Puranik period and have since been altered and considerably enlarged during many centuries after the Mahomedan conquest of India" Vide, Ancient India, by Romesh Chunder Dutt, B. IV, ch. III.

"The Brahmans have not only modified the Vadic religion, but have also grabled and interpolated Vedic literature for the purpose of bringing old Vadic traditions and usages into conpormity with later Brahminical ideas." Vide The "History of India" by Talboy's Wheeler. ch. I, P. 5.

"With regard to the epics themselves it will probably ever remain a hopeless task to separate the portions which are genuine and ancient from those which are later additions." Vide Preface of "The Ancient India" by Romesh Chunder Dutt. P. XVIII.

னைக் கற்பித்து சேர்த்தெழுதியதைப் போலும்; உமாபதி வாக்கென சேக்கிழார் நாயனார் புராணத்துள்ளும் சேர்த்தெழுதியதாகும்.

"திருவருட்பா" பாடிய சிதம்பரம் இராமலிங்க சுவாமிகள் என்பவர் பிரமாதீசனும், தைமீ அச்சிட்ட பெரிய புராணத்தில் ஷை பகுதியைக்குறித்து எழுதியதாவது:—

"உமாபதி சிவாச்சாரியார் பாடிய சேக்கிழார் நாயனார் புராணத்தில், 36, 38-வது செய்யுள்களில் கூறியிருக்கும் சாதிமுறை தொகைக்கும், வகைக்கும் பேதமிருப்பதால், அவை சிவானுபூதிமான்கள் வாக்காதலால், அதை திருத்தாது அச்சிட்டோம்" என்றனர். அதனால் தொகைக்கும் வகைக்கும் முரணுள்ளதென வறியலாம். முரண்பட உமாபதியார் பாடார்.

சேக்கிழார் நாயனார் புராணத்தில் வகுத்திருக்கும் சாதிவரிசையைப்போல், அப்புராணத்திற்கு முன்னுன அகஸ்திய பக்தவிலாசத்திலாவது, உபமன்னிய பக்தவிலாசத்திலாவது வகுத்திருக்கக் கண்டாம் இல்லை.

சேக்கிழார் நாயனார் புரணத்திற்கு முதனூற்களாகிய பதிகத்தில் சுந்தரமூர்த்தி சுவாமிகளாவது, அந்தாதியில் நம்பியாண்டார் நம்பிகளாவது, பெரியபுராணத்தில் சேக்கிழார் சுவாமிகளாவது சாதித்தொகுப்பின் வரிசையை வகுத்திருக்கின்றனர்களா? அதுவுமில்லையே! முதனூற்களினும் முன்னூற்களினு மில்லாதது, அவற்றிற்குப் பின்னூலிலெவ்விதம் வரும்? ஒருவித ஆதரவுமில்லாததால் உமாபதியார் பாடிய தன்றென்பாம்.

இனி சேக்கிழார் நாயனார் புராணத்தில் சாதித்தொகுப்பின் முறையை விளக்கிய செய்யுளின் ஆபாச அமைப்பை ஆராய்வாம்.

சேக்கிழார் நாயனார் புராணம், 36-வது செய்யுள்.

"திருமறையோர் புராணமவை பதின்மூன்று சிவவேதிய
ரரன்ன வழிப்பட்ட புராணமோ ரிரண்டு
குரைகழன்மா மாத்திரரொன் றறுவர்முடி மன்னர்
குறுநிலமன்ன ரைவர் வணிகர்குலத் தைவ
ரிருமைநெறி வேளாளர் பதின்மூவ ரிடைய
ரிருவர்சா லியர்குயவர் தயிலவினை யாளர்
பரதவர்சான் றூர்வண்ணூர் சிலைமறவர் நீசர்
பாணரிவரோ ரொருவராம் பகருங்காலே."

என்னுஞ் செய்யுளில்,

| | |
|---|---|
| 1. மறையவர் 13. | 9. சாலியர் 1. |
| 2, சிவவேதியர் 2. | 10. குயவர் 1. |
| 3. ஆமாத்தியர் 1. | 11. செக்கார் 1. |
| 4. முடிமன்னர் 6. | 12. பாதவர் 1. |
| 5. குறுநிலமன்னர் 5. | 13. சான்றூர் 1. |
| 6. வணிகர் 5. | 14. வண்ணூர் 1. |
| 7. வேளாளர் 13. | 15. மறவர் 1. |
| 8. இடையர் 2. | 16. நீசர் 1. |

17. பாணர் 1.

என ஐம்பத்தாறு நாயன்மார்களை விளக்கி, அடுத்த 37-ஞ் செய்யுளில் "அறுதிபெறத் திருமரபு குறித்துரையாப் புராணமவைக ளொருபதின்மூன்று" என்பதில் வெளிப்படும் பதின்மூன்று (13) நாயன்மார்களையுஞ் சேர்க்க அறுபத்தொன்பதாகும். பெரிய புராணத்திற் குட்பட்ட நாயன்மார்கள் புராணம் எழுபத்திரண்டாகும். அவற்றுள் தனியடியார்கள் மேலே கூறியவாறு அறுபத்துமூவரும், கூட்டத்தடியார்கள் ஒன்பதின்மரும் ஆக எழுபத்திரண்டாகும். அடியார்கள் எழுபத்திரண்டிற்கு அச்செய்யுள்கள் அறுபத்

தொன்பது நாயன்மார்களைத் தெரிவித்துள்ளதால், அச்செய்யுள்களை முற்றும் ஊழல் என்கின்றும். இது பஞ்சபாண்டவரைக் குறித்து, கட்டிற் கால்போல் மூவர் எனக் கூறி, இரண்டு விரலைக்காட்டி, நிலத்திலோர் கோடு கிழித்த தடிப் புலவன் கதையாக முடியும். அச்செய்யுளில் விடப்பட்ட மூவர்களும் முக்கியஸ்தர்கள். அவர்களாவார் சுந்தரமூர்த்தி நாயனார், சடையநாயனார், இசைஞானியார் என்பவர்களாம். இம்மூவர்களையுஞ் சேர்த்தால்தான் 72-புராணமாகும். தனியடியார்களும் அறுபத்துமூவர் ஆவர். இவ்வித ஊழல் கணக்கை அப்பாட்டு அடக்கியிருத்தலால், அப்பாட்டு வெள்ளிப்பண்டாரம் போன்ற அற்பன்பாடி சேர்த்ததாகும்.

> "தொண்டர்சீர் பரவு சேக்கிழார் குரிசி
> றாயதில்லை நகர் தன்னிலே
> பண்டுமூவர் பதிகத்து வந்தவறு
> பத்துமூவர்கதை தனை யுணர்ந்து"

எனச் சேக்கிழார் நாயனார் புராணம், 100-வது செய்யுளில், "அறுபத்து மூன்று நாயன்மார்கள்" எனக் கணக்கிட் டெழுதிய உமாபதியாருக்கு, ஷ மூவரையுஞ் சேர்க்காவிட்டால், அறுபத்துமூவர் எனக் கூறமுடியுமா? இதனாலும் அச்சாதித் தொகுப்பு உமாபதியார் பாடியதன்றென வறியலாம்.

சென்னை திருமயிலையில் அறுபத்துமூவர் உற்சவமென்பதும், அறுபத்து மூன்று சிவனடியார்களென்பதும், அறுபத்து மூன்று நாயன்மார் புராண மென்பதும் உலக வழக்கு. இவ்வழக்கிற்கு விரோதமாக அச்செய்யுளில் அறுபது பேரைக் குறித்து, மூவரை குறிக்காது விட்டதுந் தவறு.

"சடைய ரிசைஞானி யிவர்தம்மை
யெல்லாஞ் சேர்த்துத்
தொடையாகப் பாடியவன் றொண்ட
ரடி யிணைகள்
சிந்தனை செய்திந்தத் திருநாமக்
கோவை தனை
மந்திரமாக் கொண்டு மயிர்
சிலிர்த்து"

எனத் திருநாமக்கோவையிலும் உமாபதியார் அம் மூவர்களையுஞ் சேர்த்துப் பாடியிருக்க, அவரே அச் சாதித் தொகுப்பில் சேர்க்காது விடுவாரா?

உமாபதியார் திருத்தொண்டர் புராண சாரத்துள், சுந்தரமூர்த்தி சுவாமிகளை, 2-ஞ் செய்யுளிலும், சடைய நாயனாரையும், இசைஞானியாரையும், 75, 76-ஞ் செய்யுள் களிலுங் கூறி சேர்த்திருக்க, அச்சாதித் தொகுப்பில் மாத் திரம், அவர்களைச் சேர்த்துக் கூறுததற்குக் காரண மென்னை? அதனால் உமாபதியார் பாடியதன் றென்கின்றோம்.

"சடையனார் மார்கழி சார்ந்தவா திரையி
லிசைஞானி மேடத் திசைந்தசித் திரையில்
கருதுவன் றொண்டர் கடகச் சுவாதி"

என்னுந் திருநட்சத்திரத்திலும் உமாபதியார் அம் மூவரையுஞ் சேர்த்துப் பாடியிருப்பதால், அவரே அச் சாதித் தொகுப்பைப் பாடியிருப்பாராயின் சேர்த்தே பாடி முடிப்பர்.

நம்பியாண்டார் நம்பிகள், சடைய நாயனாரையும், இசைஞானியாரையும், சுந்தரமூர்த்திசுவாமிகளையும், தாமி யற்றிய அந்தாதி, 84, 85, 86-வது செய்யுள்களில் தெரி வித்து ஒன்றுசேர்த்து முள்ளார்.

சேக்கிழார் பெரியபுராணத்தில் சுந்தரமூர்த்திசுவாமிகள் சரிதத்தை, தடுத்தாட்கொண்ட புராணத்திலும், சடைய நாயனாருக்கும், இசைஞானியாருக்கும் தனித்தனி புராணங்களியற்றி பெரியபுராணத்துள் சேர்த்துமுள்ளார். அப்படி யெல்லா நூற்களிலும் ஒன்றுசேர்த்துப் பாடியிருக்க, அந்த சாதித்தொகுப்பில் மாத்திரம் ஒன்றுசேர்க்கா திருத்தலால், அப்பதினெட்டு பாட்டும் உமாபதியார் பாடியதன்றென முடிப்பாம்.

"திருமறையோர் புராணமவை பதின்மூன்று" எனக் கூறிய முதலடி, பனிரெண்டு (12) தனியடியார்களோடு, தில்லைவாழந்தணர் என்னும் கூட்டத் தடியார்களையுஞ் சேர்த்து பதின்மூவர் (13) என்கின்றது. கூட்டத்தடியார்கள் பலராயிருக்க ஒருவராக வெண்ணி சேர்த்தலுந் தவறு.

புகழ்த்துணை நாயனார், சுந்தரமூர்த்தி நாயனார், சடைய நாயனார், இசைஞானியார், முப்பொழுதுந் திருமேனி தீண்டுவார் ஆகிய ஐவர்களும் சிவவேதியர்களாயிருக்க, அப்பாடலில் "சிவவேதிய ரரனை வழிபட்ட புராணமோ திரண்டு" எனத் தொகையிற்கூறி "புகழ்த்துணையார் முப்போதும் வல்லபடி சிவனை யருச்சிப்பார்" என்னும் வகையில் புகழ்த்துணை நாயனாரையும், முப்பொழுதும் திருமேனி தீண்டுவார் நாயனார்ஆகிய இருவரைமாத்திரம் தெரிவித்தலுந் தவறு. சுந்தரமூர்த்தி நாயனார், சடைய நாயனார், இசைஞானியார் ஆகிய இம்மூவர்களையுஞ் சேர்க்காவிட்டால் தனியடியார்கள் அறுபது (60) பேரே யாவர். மூவர்களையுஞ் சேர்த்தால்தான் தனியடியார்கள் அறுபத்துமூவர் (63) ஆவர்.

முடிமன்னர்கள் "இடங்கழி நாயனார், ஏனாதிநாத நாய

ஞர், கோச்செங்கட்சோழ நாயஞர், புகழ்ச்சோழ நாயஞர், மங்கையர்க்கரசியார், நின்றசீர்நெடுமாற நாயஞர், சேரமான் பெருமாஞயஞர்" ஆக எழுவராயிருக்க, "அறுவர் முடிமன்னர்" எனக் கூறியதுந் தவறு.

ஐயடிகள்காடவர்கோ ஞயஞர், கழற்சிங்க நாயஞர், கூற்றுவ நாயஞர், நரசிங்கமுனையரைய நாயஞர், பெருமிழலைக்குறும்ப நாயஞர், மெய்ப்பொருஞயஞர்" எனக் குறுநிலமன்னர் அறுவராயிருக்க "குறுநில மன்ன ரைவர்" எனக் கூறியதுந் தவறே!

இத்யாதி தவறுதலையுடைய அச்செய்யுளில் சான்ருரை பரதவருக்குக் கீழ் அமைத்தல் ஒரு பெரிதா? இவ்வற்பச் செய்யுளை யோசித்து, சாதியை வகுப்பது, அறபத்தனமாகும். மணல் சோற்றில் கல்லாராய்வதைப் போலாம். அதுவே மணல்சோறு, அதில் கல்லாராய்வது எவ்விதம்? அதைப்போல், அப்பாட்டே தப்புப்பாட்டு, அதில் ஒப்பு எவ்விதம் ஏற்படும்? தமிழ் ஏற்பட்ட காலத்திலிருந்து, கிறிஸ்தாப்தம், 1313-ம் வருடம் வரைக்கும் சான்ருர் என்னும் பெயரை உயர்வாக மதிக்கப்பட்டு வந்திருக்க, உமாபதியார் காலம் அதாவது 1313-ம் வருடத்தில் ஏற்பட்ட சேக்கிழார் நாயஞர் புராணத்தில் மாத்திரம் தாழ்த்தப்பட்டதென்ருல் ஒப்புவதெவ்விதம்? உமாபதியார் சான்ருர் என்னும் பதத்தின் பொருளை யறியாதவரா? இவருக்கு முன்ஞன நூற்களிலாவது, சங்கநூற்களிலாவது சான்ருர் என்னும் பெயரை தாழ்ந்தசாதியாருக் குரியதெனக் கூறியுள்ளதா? அது மில்லையே! அவ்விதமிருக்க சேக்கிழார் நாயஞர் புராணத்துள் மாத்திரம் உமாபதியார் சான்ருர் என்னும் பெயரை தாழ்ந்தசாதிக் குரியதெனக் கூறுவரா? கூருர். அச் செய்யுளின் அமைப்பு

சுத்த ஆபாச முறையெனவும், வெள்ளிப்பண்டாரம் போன்ற அற்பனால் பாடி சேர்த்ததெனவும், பின் எம் மால் வெளிப்படும் "சேக்கிழார் நாயனார் புராணத்துள்ள சாதித் தொகுப்பின் தவறு" என்னும் நூலில் பரக்கக் காணலாம்.

13. நச்சினார்க்கினியர் காலம்:—இவர் ஏறக்குறைய பதினான்காம் நூற்றாண்டிலிருந்தவர். இற்றைக்கு 500-வருடத்திற்கு முற்பட்டவர். இவரால் "தொல்காப்பியம், சீவக சிந்தாமணி, பத்துப்பாட்டு" முதலிய சங்கநூற்களுக்கு ஆழ்ந்த கருத்துடன் பொருளெழுதப்பட்டுள்ளன. அதனால் இவரை உரையாசிரியருள் மேம்பட்டவராக எண்ணப்படுகின்றது. இந்நச்சினார்க்கினியர் தம்காலத்தில் சான்றார் என்னும் பெயரை ஒரு சாதிப்பெயராக ஒப்பியுள்ளார்.

தொல்காப்பியம், எழுத்ததிகாரம், தொகை மரபு, 11-வது சூத்திரத்தின் கீழுரையில்:—"உண்டீர் சான்றீர், பார்ப்பீர் என முன்னிலைக் கண்ணும், உண்ப, உண்டார் சான்றார், பார்ப்பார் எனப் படர்க்கைக் கண்ணும் ஒட்டுக" எனவும்;

தொல்காப்பியம், எழுத்ததிகாரம், புள்ளிமயங்கியல், 28-வது சூத்திரத்தின் கீழுரையில்:—எல்லாக் கொல்லரும், சான்றாரும், தச்சரும், பார்ப்பாரும்" எனவும்;

தொல்காப்பியம், எழுத்ததிகாரம், குற்றியலுகரப் புணரியல், 20-வது சூத்திரத்தின் கீழுரையில்:—"பண்டைச் சான்றார்" எனவும் விளக்கி சான்றார் என்னும் பெயரை நச்சினார்கினியர் ஒருசாதிப்பெயராக ஒப்புகின்றார். அவற்றில் சான்றார் என்பது பார்ப்பார், தச்சர், கொல்லர் என்போன்ற சாதிப்பெயரென்பது அவர் துணிபு.

அதனால் அவர் சான்றோர் என்னுஞ் சொல்லின் தன்மையை நன்கறிந்தவரென விளங்குகின்றது. அப்படியறிந்தவர் சான்றோர் என்னும் பெயரை கள்விலைஞருக்கும் உரிய சாதிப்பெயரெனக் கூறினாரில்லை. கள்விலைஞருக்கு **பழையர்** என்னும் பெயர் உரியதென்றும், அப்பெயர் **சான்றோர்** என்னும் பெயரின் பொருளில் நிற்காதென்றும் இறுதிகொண்டுள்ளார்.

பத்துப்பாட்டு, மலைபடுகடாம்,
459-வது வரி.

"பகன்றைக் கண்ணி **பழையர்** மகளிர்"

என்னும் அகவலில்வரும் **பழையர்** என்பதற்கு "**கள் விற்கும் வலையருடைய மகளிர்**" எனப் பொருளெழுதியுள்ளாரேயன்றி, பழையர் என்பதற்கு சான்றோர் என்னும் பொருள் உரியதென்றாவது, சான்றோர் பழையரென்றாவது கூறினாரில்லை. பழையர் என்பது கள்விலைஞருக்குரிய பல பெயர்களில் ஒன்று. அதற்குப் பொருளாக வேற்பட்ட வலையர் என்பது பரவருக்குரிய பலபெயர்களில் ஒன்று. இவற்றால் கள்தொழிலை பதினான்காம் நூற்றாண்டில் (A. D. 1400) வலையராகிய பரவர் செய்து வந்ததாக விளங்குகின்றது. ஆகவே, இத்யாதிப் பிரமாணங்களால் கள்விலைஞராகிய பழையர் வேறுசாதியார் என்பதும், சான்றோர் வேறுசாதியார் என்பதும் நச்சினார்க்கினியரின் தீர்ந்த முடிபாகும்.

**14. சூடாமணி நிகண்டார் காலம்.**—இந்நிகண்டு மண்டலப் புருடரால் பாடியது. இவர் சமண சமயத்தவர். இவரது காலம் பதினைந்தாம் நூற்றாண்டிலிருந்தவர் எனக் கணிக்கப் படுகின்றது. கிருஷ்ணதேவராயர் காலமெனவுங்கூறுவர். இவர் காலத்தில் கள்விலைஞரை "சௌண்

டிகர்" முதலிய பெயர்களைத் தந்து அழைத்து வந்ததாகத் தெரிகிறது.

சூடாமணி நிகண்டு, மக்கட்பெயர்த் தொகுதி,
35-வது செய்யுள்.

"தொக்ககள் விற்போர் நாமஞ்
சௌண்டிகர் துவச ரோடு
தக்கதோர் பிழியர் மற்றும்
படுவருஞ் சாற்று மன்றே"

என்னுஞ் செய்யுளில் கள்விலைஞருக்கு "சொண்டிகர்" என்றும், "துவசர்" என்றும், "பிழியர்" என்றும், "படுவர்" என்றும் சாதிப்பெயர்கள் சூடாமணி நிகண்டார் காலமாகிய கிறிஸ்தாப்தம் பதினைந்தாம் நூற்றாண்டில் வழங்கி வந்தன. இப்பெயர்கள் நாளதும் நமது சாதியாருக்கு வழங்கி வாராமையால் நாம் கள் குலத்தவ ராகோம். இவற்றோடு நமது குலத்தவருக் குரிய சாதிப்பெயராகிய **சான்றார்** என்னும் பெயரையும் சூடாமணி நிகண்டார், மேற்படி நிகண்டிலேயே பாடிச் சேர்த்துள்ளார்.

சூடாமணி நிகண்டு, தெய்வப்பெயர்த் தொகுதி,
55-வது செய்யுள்.

"தரணிசெங் கதிரோன் சண்டன்
றபனனே யொளியே **சான்றோன்**"

என்னுஞ் செய்யுளிலும்;

சூடாமணி நிகண்டு, மக்கட்பெயர்த் தொகுதி,
7-வது செய்யுள்.

"**சான்றவர்** மிக்கோர் நல்லோர்
தகுதியோர் மேலோ ராய்ந்தோர்

ஆன்றவ ருலக மேதாவி
யறிஞர் கள்பேரே"

என்னுஞ் செய்யுளிலும்;

சூடாமணி நிகண்டு, ஒருசொற் பலபொருட் டொகுதி,
41-வது செய்யுள்.

"சான்றேன் மான் றலைநாள் பானு"
சூடாமணி நிகண்டு, மக்கட் பெயர்த் தொகுதி,
45-வது செய்யுள்.

"அடைவுள கிராம முற்றேன்
கிராமணி* யாகு மன்றே"

என்னுஞ் செய்யுளிலும் சான்றோர் என்னும் பெயரை வெளிப்படுத்தி, சூரியனையும், அறிவோனையும், மிருகசீரிட நட்சத்திரத்தையுங் குறிக்குமெனத் தெரிவித் துள்ளாரே யன்றி, கள் விலைஞரையுங் குறிக்குமெனத் தெரிவித்தாரில்லை. அதனால் சான்றோர் வேறு சாதியார், கள்விலைஞர் வேறுசாதியாரென வறியலாம்.

இச்சூடாமணி நிகண்டிற்குப் பிறகு ரேவணதரால் ரேவண சூத்திரமும்‡, காங்கேயரால் உரிச்சொல் நிகண்டும், ஆண்டிப்புலவரால் ஆசிரிய நிகண்டும் ஒன்றன்பின் ஒன்றாக வெளிப்பட்டன. அவைகளிலும் மேற்கூறிய வாறே விளக்குகின்றனவே யன்றி, சான்றோரே கள்விலைஞரெனக் கூறியெழு வில்லை.

திவாகரம், பிங்கலம், சூடாமணி முதலிய நிகண்டுகளில் பார்ப்பார் முதலிய சாதியார்களுக்குக் கூறியிருக்கும்

* கிராமியன் என்றாலும், கிராமணி என்றாலும் ஒருபொருளிலேயே நிற்கும்.

‡ ரேவண சூத்திரம் இற்றைக்கு 250-வருடத்திற்கு முன் இயற்றியதாகக் கணிக்கப்படுகின்றது.

"அந்தணர், ஐயர், பார்ப்பார், செட்டி, வணிகர், வைசியர், காராளர், சூத்திரர், வேளாளர், கைக்கோளர், குயவர், தச்சர், தட்டார், கன்னர், கொல்லர், செக்கார், வண்ணர், ஏகாலியர், நாவிதர், குறவர், மறவர், வேடர், இடையர், பரதவர்" முதலிய சாதிப்பெயர்களையே, அததற்குரிய சாதியார்கள், தங்களுக்குரிய சாதிப்பெயர்களாக நாளதும் வகித்து வருகிறார்கள். அதைப்போல் நாமும் கள்விலைஞரா யிருப்பின், அத்திவாகர நிகண்டார் கூறிய கள்விலைஞர் பெயர்களில் ஏதாவதொன்றைச் சாதிப்பெயராக அடைந்தே வருவோம். அப்படி நாம் கள்விலைஞ ரல்லாமையால், அப் பெயர்களில் ஒன்றையாவது நாம் சாதிப்பெயராகப் பெற வேதுவில்லாமல் போயினதென வறியலாம்.

அன்றியும், திவாகரம், பிங்கலநிகண்டு, சூடாமணி நிகண்டு, முதலிய நிகண்டுகளில் கூறிய கள்விலைஞரது சாதிப் பெயர்களாகிய "படுவர், பழையர், பிழியர், துவசர், சௌண்டிகர்" முதலிய பெயர்க ளெல்லாம் கள்சம்பந்த மானவைகளேயாம். அஃது வருமாறு:—

க. படுவர்:—இப்பெயர் தமிழ்ப்பெயர். இது திவா கரர் காலத்தி லிருந்து கள்விலைஞருக்குக் குலப் பெயராக நின்று வழங்கி வருகின்றது. படு என்னுஞ் சொல்லடி யாகப் பிறந்தது. படு என்பது கள்ளைக் குறித்து, அக் கள்தொழில் உடையவரை படுவர் எனப்படும். படு+அர் =படுவர் என்பது "இ ஈ ஐ வழி யவ்வும், ஏனையுயிர் வழி வவ்வும்" என்னும் நன்னூல் சூத்திரத்தை யேற்று, வகர வுடன்படு மெய்யைப் பெற்று புணர்ந்து நின்றது.

"Badagas are lived in Nilgiris and other places." Vide, Thurston's Castes and Tribes of Southern India, Vol. I, P. 63 to 123.

என்பதில் "படுவர் நீலகிரியிலும், இன்னும் மற்ற விடங்களிலும் வசிக்கிறார்கள்" எனக் கூறியிருக்கின்றது.

உ. **பழையர்**:—இப்பெயர் தமிழ்ப்பெயர். சங்ககாலத்தி லிருந்து கள்விலைஞருக்கு வழங்கி வருகின்றது. பழை என்னுஞ் சொல்லடியாகப் பிறந்தது. பழை என்பது கள்ளைக் குறித்து, அக்கள்தொழில் உடையவரை பழையர்* எனப்படும். "பழை+அர்=பழையர்" என்பது, "இ ஈ ஐ வழி யவ்வும்" என்னும் நன்னூற் சூத்திரத்தை ஏற்று, யகர வுடன்படு மெய்யைப்பெற்று புணர்ந்து நின்றது.

"The Paliyans are described, in the Gazetteer of the Madura district, as a very backward caste, who reside in small scattered partes amid the jungles of the Upper Palnis and the Varushanad valley. They speak Tamil, with a peculiar intonation. They are much less civilised than the Pulaiyans, but do not eat beef." Vide, Thurston's Castes and Tribes of Southern India, Vol. V, P. 464. "The Paliyans, whom I investigated in North Tinnevelly, were living in the jungles near the base of the mountains, in small isolated Communities separated from each other by a

* "பழையன் காக்குங் குழைபயி னெடுங் கோட்டு" என சிலப்பதிகாரம், நீர்ப்படைக்காதை, 124-வது வரியிலும்; "பழையன் காக்குங் கருஞ்சினை வேம்பின்" என பதிற்றுப்பத்து, 5-ஆம் பத்து பதிகத்திலும்; "பழையன் மோகூர்" என மதுரைக் காஞ்சி, 508-வது வரியிலும், குறுநில மன்னருள் ஒருவனும் "பழையன்" என்னும் பெயரால் வெளிப்பட் டிருத்தலையுங் காண்க.

distance of several miles. They speak Tamil with a peculiar intonation, which recalls to mind the Irulas." Vide, Thurston's Castes and Tribes of Southern India, Vol. V, P. 469.

என்பனவற்றில் "பழையர் பிற்போக்கான சாதியார்க ளென்றும், அவர்கள் பழனி, விருஷநாடு, வடதிருநெல்வேலி முதலிய ஊர்களில் உள்ள மலைக் காடுகளில் பரவியிருக் கிறார்க ளென்றும், அவர்கள் ஒருவித தொனியோடு தமி ழ்ப் பேசுபவர்க ளென்றும், இருளருக்கு ஒப்பானவர் களு மாவரென்றும், ஆனால் அவர்கள் மாட்டிரச்சி புசி யார்க ளென்றும்" கூறியுள்ளது.

௩. பிழியர்:—இப்பெயர் சூடாமணி நிகண்டார் கால த்தில் கள்விலைஞருக்கு ஏற்பட்டது. பிழி என்னுஞ் சொல் லடியாகப் பிறந்தது. பிழி என்பது கள்ளைக் குறித்து, அக் கள்தொழில் உடையவரை பிழியர் எனப்படும். "பிழி+ அர்=பிழியர்" என்பது "இ ஈ ஐ வழி யவ்வும்" என்னும் நன்னூற் சூத்திரத்தை யேற்று, யகர வுடன்படு மெய்யைப் பெற்று புணர்ந்தது.

௪. துவசர்:—இப்பெயர் திவாகரர் காலத்தில் கள்விலை ஞருக்கு ஏற்பட்டது. துவசம் என்னுஞ் சொல்லடியாகப் பிறந்தது. துவசம் என்பது கொடியைக் குறித்து, அக்கொ டியை நாட்டி கள்விற்பவரை துவசர் எனப்படும். "பைங் கொடி நுடங்கும், பலர்புகு வாயில்" என்பதற்கு "பசிய கொடிக ளசையும் கள்ளுண்பார் பலரும் புகுகின்ற வாயி லிடத்து" எனப் பெரும்பாணாற்றுப்படை, 337-வது வரி யிலும்; "நறவு நொடைக் கொடியோடு" என்பதற்கு "கள் ளின் விலைக்குக் கட்டின கொடியோடு" எனப் பட்டினப் பாலை, 180-வது வரியிலும் "கள்ளின் களிநவில் கொடி

யொடு" என்பதற்கு "கள்ளினது களிப்பு மிகுதியைச் சாற்றுகின்ற கொடியும்" என மதுரைக்காஞ்சி, 372-வது வரியிலும்; "கட்கொடி நுடங்கு மாவணம் புக்கு" என்பதற்கு, "கள்ளுக்குக் கட்டினகொடி துவளும்படியான கடைவீதிகளில் புகுந்து" எனப் பதிற்றுப் பத்து, ஏழாம் பத்து, 8-ஞ் செய்யுளிலும்; "தண்கமழ் நறைக் கொடி" என்பதற்கு, "குளிர்ச்சி மிகுந்த கள்ளுக்குக் கட்டினகொடி" என ஐங்குறு நூறு, குரக்குப் பத்து, 6-வது செய்யுளிலும்; "தூவற் கலித்த விவர்நனை வளர்கொடி" என்பதற்கு "மழையாற் செருக்கின பரக்கின்ற அரும்புகளை யுடைய மணம் வளருகின்ற நறைக்கொடி" என மலைபடுகடாம், 514-வது வரியிலும் வருவன வற்றால் கள்விலைஞர் கொடியை நாட்டி கள்விற்றல் வழக்காதலின் துவசர்* எனப்பட்டனர். "துவசம்+அர்= துவசர்" என்பது நிலைமொழியின் யீற்று அம்முச் சாரியையைக் கெட்டு, உயிரேறிப் புணர்ந்து நின்றது.

---

* "ஞாயிலுஞ் சிறந்து நாட்கொடி நுடங்கும்" என்பதற்கு "அரசாது கோட்டையில் நல்ல நாளிலே கட்டின கொடிகள் ஆட" என சிலப்பதிகாரம், அடைக்கலக்காதை, 217-வது வரியில் கூறியவாறு அரசர்கள் கொடிகட்டி ஆளினும்; "கூல மறுகிற்கொடியெடுத்து நுவலும்" என்பதற்கு "பல பண்ட கடைகளில் கொடிகட்டி விலைசொல்லும்" என சிலப்பதிகாரம், கடலாடு காதை, 132-வது வரியில் கூறியவாறு பல பண்டக்கடைகளில் கொடி கட்டி விற்பினும் அவர்களுக் கெல்லாம் துவசர் என்னும் பெயர் அமையாது, கள்விலைஞருக்கு மாத்திரம் துவசர் என்னும் பெயர் அமைந்து வழங்கி வந்தது. அது தட்டுந் தொழிலினரை யெல்லாந் தட்டார் எனக் கூறாது, அத்தட்டுந் தொழிலினரில் ஓர் வகுப்பினராகிய கம்மாளரை மாத்திரந் தட்டார் எனக் கூறுவதுபோ லென்க. இது உலக வழக்கு.

ரு. சௌண்டிகர்:—இப்பெயர் சமஸ்கிருதப் பெயர். வான்மீகி ராமாயண காலத்திலிருந்து இப்பெயர் கள்விலைஞருக்கு வழங்கி வருகின்றது. இது சுண்டி என்னுஞ் சொல்லடியாகப் பிறந்தது. சுந்தரம் சௌந்தரம் என்பதைப் போலும், குண்டர் கௌண்டர் என்பதைப் போலும், சுண்டிகர் சௌண்டிகர் எனப்படும். சுண்டி என்பது கள்ளைக் குறித்து, அக்கள் தொழில் உடையாரை சுண்டிகர் அல்லது சௌண்டிகர் எனப்படும்.*

"The Sondis (Soundikas) or Sundis are summed up in the Madras Census Report, 1901, as Oriya toddy-selling caste." Vide, Thurston's Castes and Tribes of Southern India, Vol. Vl, P. 394.

"The dead are burned, and death pollution lasts for ten days. On the eleventh day, those under pollution bathe, and the sacred fire (homam) is raised by a Brahman. As at a wedding, twelve Brahmans receive food and money." Vide, Thurston's Castes and Tribes of Southern India, Vol. Vl, P. 397.

என்பன வற்றில் "1901-ம் வருடத்து சென்னை குடி மதிப்பு கணக்கில் ஒரியாதேசத்து கள்விற்கும் சாதியாரை சௌண்டிகர் என்று அழைக்கப்படும். அவர்கள் பிணத்தைச் சுடுதலோடு, சாவுத்தீட்டு பத்து நாள்கள் வரைக்கும்

* இக் கள்விலைஞருக் குரிய படுவர் முதலிய பெயர்கள் கள்ளை விளக்குவதைப்போல், நமக்குரிய சாதிப் பெயர்களாகிய "சான்றார், நாடார், கிராமணி" என்னும் பெயர்களும் கள்ளடியாகப் பிறவாததால் நாம் கள்விலைஞரோடு சம்பந்தப்பட்ட சாதியாரல்லவென அறியலாம்.

அனுசரிப்பார்கள். பதினோராம் நாள் தீட்டுடையவர்கள் ஸ்நானஞ்செய்து, பிராமணர்களைக் கொண்டு ஓமம் வளர்த்துவார்கள். கலியாணத்தில் நடத்து வதைப்போல் பன்னிரெண்டு பிராமணர்களுக்கு சாப்பாடிட்டு, தட்சணை கொடுத் தனுப்புவார்கள்" எனவுங் கூறியுள்ளன. இப்பகுதிகளால் சௌண்டிகர் வீட்டில் பிராமணர்கள் அன்ன சிரார்த்தஞ் செய்கிறார்களென விளங்குகின்றன. இச்சிரார்த்தஞ்* செய்யும் வழக்கத்தை எட்கார் தர்ஸ்டன் துரை அவர்களும், K. இரங்காச்சாரியார் அவர்களும் நேரிற்சென்று கண்டும், விசாரித்தும் எழுதியதாதலால், கள்விலைஞர் தாழ்ந்த சாதியார் அல்லவென வறியலாம். இதோடு, இச்சௌண்டிகரை புராணங்களில் ஊரின் உட்குடியாரெனவும் வரைந்துள்ளது.

சைவபுராணம், 71-வது அத்தியாயம்,
8-வது சுலோகம்.

శ్లో॥ క్షత్రియాణాం సముత్పన్నో
శూద్రాత్ శుణ్డిక ఉచ్యతే।
సురాపైష్టిక మైరేయ
గౌడీమాధ్వీక జీవనః॥

---

* சிரார்த்தம் என்றால் இறந்தோர்க்கு அதாவது பிதிர்களை நோக்கி வருடமுடிவில் செய்யுமோர் சடங்கு. யாகம் இருபத்தொன்றி லொன்று. அது "அன்ன சிரார்த்தம், ஆம சிரார்த்தம்" என இருவகைப்படும். அன்ன சிரார்த்தம் என்றால் சமைத்த பலவித பதார்த்தத்தோடு கூடிய அன்னத்தை பிராமணர்களுக்கு படைத்து, அவர்களையே புசிக்கச் செய்வதாம். ஆமசிரார்த்தம் என்றால் பாகம்பண்ணாது பச்சையாக அரிசி, காய், கீரை, பருப்பு, முதலியவைகளை பிராமணருக்குப் படைத்து, அவர்கள் வீட்டிற்கு எடுத்தும் போகச் செய்வதாம். (ஆம—பச்சை.)

"க்ஷத்ரி யாயாம் ஸமுத் பந்நோ
ஶூத்ராத் குசல உச்யதே
ஸுரா பைஷ்டிக மைரேய
கௌடி மாத்விக ஜீவந:"

(இ-ள்) "குசலன் சூத்திரனுக்கும், க்ஷத்திரிய ஸ்திரீக்கும் பிறந்தவன். இவனது தொழில் அரிசிமாவினால் செய்த கள்ளும், கரும்பு வெல்லத்தினால் செய்த கள்ளும், இலுப்பைப் பூவினால் செய்தகள்ளும்விற்பது" என்பதாம். "குஞ்சலம்"* என்பது கள்ளைக்குறிக்கும். அது இடைக்குறைந்து, குசலம் என நின்று, அம்முச்சாரியைக் கெட்டு, அர் விகுதியை யேற்று, குசலர் என வெளிப்பட்டது.

சூடாமணி நிகண்டு,மக்கட்பெயர்த் தொகுதி,
60-வது சூத்திரம்.

"நயந் தவப் பெண்ணு மாணு
நண்ணிய வுயர்வு தாழ்வில்
வியந்திடும் பிள்ளைப் பேரே
விறற் பிரதி லோம னாமே"

என்னும் நிகண்டின் சூத்திரப் பிரகாரம், குசலர் உயர்ந்த சாதிப்பெண்ணும், தாழ்ந்த சாதி ஆணுங் கூடிப் பிறந்தவர்களாதலால், பிரதிலோம சாதியாராவர். இப்பிரதி லோமக் குசலர், சைவ புராணத்தின் சாதி வரிசைப்படி இடையருக்கு† மேற்பட்ட சாதியாரும், சாலியருக்கு¶ கீழ்ப்பட்ட சாதியாருமாவர்.

* அமரம், இரண்டாங்காண்டம், வைசிய வர்க்கம், 18-வது சுலோகம்.

† சைவபுராணம், 71-வது அத்தியாயம், 9-வது சுலோகம்.

¶ சைவபுராணம், 71-வது அத்தியாயம், 7-வது சுலோகம்.

சைவபுராணம்,* 71-வது அத்தியாயம்,

11-வது சுலோகம்.

శ్లో॥ ఏతేషట్ ప్రతిలోమాస్వ్య
ర్జాతయశ్శృణుతః పరం।
జాతి సంకర జాతీనాం
గ్రామాంతే వసతి ర్మునే॥.

"எதேஷட் ப்ரதிலோ மாஸ்யு
ர்ஜாதயஸ் ஸ்ருணுத: பரம்!
ஜாதிஸங்கர ஜாதீநாம்
க்ராமாந்தே வஸதிர் முநே!!"

(இ - ள்) "மேற்சொல்லிய அறுவரும் §பிரதிலோமசாதிகளாவர். இனி கிராம அந்தியத்தில் வசிக்கும் சங்கர சாதிகளைக் குறித்துச் சொல்லுகிறேன்" என்பதாம். இச்சுலோகத்தால் பிரதிலோம சாதிகள் ஊரின் உட்குடிகளெனவும், இவர்களுக்குக் கீழ்ப்பட்ட அந்தராளர், விராத்தியர் சாதியார்களாகிய சங்கர சாதியார்களே ஊரின் புறக்குடிகள் எனவும் விளங்குகின்றனர்.

---

* சைவபுராணம், பதினெண் புராணங்களில் ஒன்று. வியாசரால் இயற்றியது.

§ பிராமண ஸ்திரீக்கும் க்ஷத்திரியனுக்கும் பிறந்தவனும், பிராமணஸ்திரீக்கும் வைசியனுக்கும் பிறந்தவனும், பிராமண ஸ்திரீக்கும் சூத்திரனுக்கும் பிறந்தவனும், க்ஷத்திரிய ஸ்திரீக்கும் வைசியனுக்கும் பிறந்தவனும், க்ஷத்திரிய ஸ்திரீக்கும் சூத்திரனுக்கும் பிறந்தவனும், வைசிய ஸ்திரீக்கும் சூத்திரனுக்கும் பிறந்தவனும் ஆகிய அறுவரும் பிரதிலோம சாதிகளாவர்.

மநுஸ்மிருதி, 10-வது அத்தியாயம்,
13-வது சுலோகம்.

𑌏𑌕𑌾𑌨𑍍𑌤𑌰𑍇 𑌤𑍍𑌵𑌾𑌨𑍁𑌲𑍋𑌮𑍍𑌯𑌾
𑌦𑌮𑍍𑌬𑌷𑍍𑌠𑍋𑌗𑍍𑌰𑍌 𑌯𑌥𑌾 𑌸𑍍𑌮𑍃𑌤𑍌 ।
𑌕𑍍𑌷𑌤𑍍𑌤𑍃𑌵𑍈𑌦𑍇𑌹𑌕𑍌 𑌤𑌦𑍍𑌵𑌤𑍍
𑌪𑍍𑌰𑌾𑌤𑌿𑌲𑍋𑌮𑍍𑌯𑍇𑌽𑌪𑌿 𑌜𑌨𑍍𑌮𑌨𑌿 ॥

"ஏகாந்த ரேத்வாநு லோம்யா
தம்பஷ்டோ க்ரௌயதா ஸ்ம்ருதௌ
க்ஷத்த்ரு வைதேஹ கௌதத்வத்
ப்ராதி லோம்யே பிஜந்மநி!!"

(இ - ள்) "அநுலோம ஜாதியிற் பிறந்த அம்பஷ்டன், உக்கிரன் இவர்களைப்போல், பிரதிலோம ஜாதியிற் பிறந்த க்ஷத்தாவும்†, வைதேகனும் தொடுகிறதற்கு யோக்கியர்களென்று சொல்லப்படுகிறார்கள்" என்பதாம். இம்மநு சுலோகத்தால் பிரதிலோம சாதியார் ஊரின் உட்குடிகள் என்பது மாத்திரமல்ல, தொடக் கூடியவர்கள் என்பதும் விளக்கம்.

ஆகவே, இத்யாதிப் பிரமாணங்களை நோக்க கள்விலைஞராகிய சௌண்டிகர் ஊரின் உட்குடியார்களெனவும், தொடக் கூடியவர்களெனவும், பிராமணர்களைக் கொண்டு ஓமம் வளர்த்துபவர்களெனவும், பிராமணர்களுக்கு அன்ன

† க்ஷத்தா என்பவன் சௌண்டிகனே யாவன். அமரம், சூத்ர வர்க்கம், 694-வது சுலோகத்தில் வரும் "க்ஷத்தார்யாஸ் ஸூத்ரயோ ஸ்ஸுத:" என்பதற்கு "க்ஷத்தா" இது "அர்யா ஸூத்ரயோ:—க்ஷத்ரிய ஸ்திரீக்கும் சூத்திரனுக்கும் பிறந்தவனுக்குப் பெயர். இவ்வகையிற்பிறந்தவன் சௌண்டிகனேயாவன். இவ்விடத்தில் "அர்யா" சப்தம் க்ஷத்ரிய ஸ்திரீ வாசகம்.

சிரார்த்தம் செய்து வைப்பவர்க ளெனவும் விளங்குவ தால், கள்விலைஞராகிய சௌண்டிகர் தாழ்ந்த சாதியாரல்ல வென வறியலாம்.

15. **குமரகுருபர சுவாமிகள் காலம்:—** இவர் இற்றைக்கு இருநூற்றெழுபது வருடங்களுக்கு முன் இருந்தவர். பாண்டியநாட்டை, A. D. 1623-ம் வருடத்திலிருந்து, A. D. 1659-ம் வருடம் வரைக்கும் ஆட்சிபுரிந்த வடுகரசராகிய திருமலை நாய்க்கர் காலத்தவரும், அவரது ஆஸ்தானப் பண்டிதருமாவர். இவரால் "காசிக்கலம்பகம், சரசுவதி தோத்திரம், சிதம்பரச் செய்யுட்கோவை, சிதம்பரம் சிவகாமியம்மை இரட்டைமணிமாலை, சிதம்பர மும்மணிக் கோவை, திருச்செந்தூர்க் கந்தர் கலிவெண்பா, திருவாரூர் நான்மணிமாலை, நீதிநெறி விளக்கம், பண்டார மும்மணிக்கோவை, மதுரை மீனாட்சியம்மை பிள்ளைத் தமிழ், மதுரை மீனாட்சியம்மை குறம், மதுரை மீனாட்சியம்மை இரட்டைமணிமாலை, மதுரைக் கலம்பகம், முத்துக்குமார சுவாமி பிள்ளைத் தமிழ்" முதலிய பல நூற்கள் இயற்றப் பெற்றுள்ளன. அவற்றுள் மதுரைக் கலம்பகத்தில் பின் வருமாறு கூறியுள்ளது.

மதுரைக் கலம்பகம், 24-வது செய்யுள்.

கள்ளுண்டு களித்தவன் கூறுவதாகக் கவிகூறல்.

அழுகுற்றதோர் மதுரேசனை யமரேச னெனக்கொண்
டாடுங்களி யானின்றிசை பாடுங்களி யேம்யாம்
பொழுதைக்கிரு கலமூறுபைந் தேறற்பனை யிணைநாம்
போற்றிக்குரு மூர்த்திக்கிணை சாற்றத்தகு மப்பா
பழுதற்றதோர் சான்றாண்மை பயின்றாரிதின் முயன்றார்
பலமுண்டதி னலமுண்டெவ ரரிவார்பல கலைநூ

லெழுதப்படு மேடுண்டது வீடுந்தர வற்று
லெழுதாததோர் திருமந்திர மிளம்பாளையு ளுண்டே.

(இ-ள்.) அழகு உற்றது ஓர் மதுரேசனை=அழகு வாய்ந்த ஒப்பில்லாத மதுரைநகரி லெழுந்தருளிய இறைவனை, அமரேசன் என்ன=பூசித்து வாழ்த்தும் இந்திரன் போல, கொண்டாடும் களியால்=கொண்டாடுங் களிப்பால், நின்று இசைபாடும் களியேம் யாம்=நின்று இசைபாடுங் களிப்பினை யுடையேம் யாம், பொழுதைக்கு இரு கலம் ஊறும்=ஒருநாளைக் கிரண்டுகல மூறறெடுக்கும், பைந்தேறல் பனையினை=பசிய கள்ளையுடைய பனைமரத்தினை, நாம் போற்றி=நாம் துதித்து, குருமூர்த்திக்கு இணை சாற்றத்தகும்=குருமூர்த்திக் கொப்பாக நாம் சொல்லக்கூடும், (அதெப்படியெனில்,) அப்பா=அப்பா நான் சொல்லக் கேள், இதில் முயன்றார்=இப்பனைமரத்தின்கண் முயன்றோர்கள், பழுது அற்றது ஓர் சான்றாண்மை பயின்றார்=குற்றமற்ற ஒப்பில்லாத சான்றோர், (குருமூர்த்திக்கண் பயில்வோர் குற்றமற்ற ஒப்பில்லாத அறிவால் நிறைந்தோர்,) பலம் உண்டு=கனி யுண்டு, (குருமூர்த்தியாற் பெரும்பலனுண்டு) அதில் நலம் உண்டு=அப்பலத்தினு மேம்பட்ட நலனுமுண்டு, அறிவார் எவர்=இதனை நம்மையன்றி யறிவாரெவர், பலகலை=அறுபத்துநான்கு கலைகளும், நூல் எழுதப்படும் ஏடு உண்டு=ஆகம முதலிய நூல்களும் எழுதப்படும் பல ஏடுகள் பனையிலுண்டு, (குருமூர்த்தியிடத்து முண்டு), அது வீடும் தரவற்று=அவ்வேடு வீடுமேயவும் வல்லது (குருமூர்த்தியி னிடத்துள்ள ஏடுகள் மோட்சத்தையுந் தரவல்லது), எழுதாத ஓர் திருமந்திரம் இளம்பாளையில் உண்டு=அப்பனையிடத்துள்ள இளம்பாளையில் எழுதுதற் கியலாத ஓர் திருமந்திரம் உள்ளது (எழுதற் கியலாத ஓர் திருமந்திரம் குருமூர்த்தி யிடத்துள்ளது) என்பதாம்.

இந்தச் செய்யுளில் வரும் "சான்றாண்மை பயின்றார்" என்பதற்கு சிலேடையாக "அறிவால் நிறைந்தோர், கள்தொழில் புரிவோர்" என்னும் இருபொருள் விளங்க வைத்துள்ளார். இவற்றுள் சான்றாண்மை என்பது அறிவு என்னும் பொருளைத் தருமெனக் காட்ட அநேக நிகண்டகராதி நூற்களுமுண்டு. ஆனால் கள் என்னும் பொருளை யுந் தருமெனக் காட்ட அம்மதுரைக் கலம்பகம் அன்றி, அக்கலம்பகத்திற்கு முற்பட்ட நூற்களிலாவது, அதற்குப் பிற்பட்ட நூற்களிலாவது காட்ட முடியாது. அக்குமர குருபர சுவாமிகள் பாண்டிய நாட்டிலே, தாமிரபர்ணிநதி தீரத்திலே, ஸ்ரீ வைகுண்டமென்று வழங்கும் கைலாசபுரத்திலே பிறந்து வளர்ந்தவர். அவரது காலம் பாண்டியர் அரசொழிந்து, ஒரு நூறு வருடத்திற்குப் பிந்திய காலமாகும். அக்காலத்தில் அப்பக்கத்தில் அத்தமிழரசுக்கு உரிமையாளராகிய சந்திரகுலத்திலுதித்த பாண்டியகுல நாடார்கள் தங்களது அரசு பிறரிடஞ் சென்றதும் ஒதுக்கப்பட்டு, வறுமையுற்று சீவனார்த்தத்தின் பொருட்டு, பல தொழில்களோடு, கள்தொழிலையும் சிலர் கையாண்டு வந்தனர். அதைப்பார்த்த சுவாமிகள் சான்றாரை கள தொழிலராக வைத்து சிலேடையாகப் பாடினர். இவ்வளவேயன்றி, சான்றாண்மை என்பது கள் என்னும் பொருளைத் தருமென வெண்ணி பாடியதல்லவென வறியலாம். அதைப் பிரமாணமாகக் கொள்ளுவதா யிருந்தால், அவர் கூறிய அவ்வொரு நூலன்றி, வேறுநூற் பிரமாணம் வேண்டும். அப்படியில்லாமையால், அது ஒரு பிரமாணமாகாதென வறியலாம். இவ்வளவும் பதினேழாம் நூற்றாண்டிற்குப் பிறகே சான்றார்கள் கள்தொழிலில் பிரவேசிக்க நேர்ந்தது. அதைப்பார்த்த பிற்காலத்தவர்கள் கள் விலைஞர் சான்றாரா யிருக்கலாமென்று அனுமானிக்கலாயினர்.

மதுரை, தமிழ்ச்சங்க கலாசாலைத் தலைமை உபாத்தியாயரும், "செந்தமிழ்" பத்திராதிபருமாகிய ஸ்ரீமான், திரு. நாராயணையங்கார் அவர்கள் 20-8-1925-ல் எமக்கு எழுதிய கடிதத்தில் "தாங்கள் எழுதியபடி மதுரைக்கலம் பகத்துள்ள "சான்றாண்மை" என்பது "கள்ளுக்குப் பெயரில்லை" எனவுங் கூறியிருத்தலின், சான்றாண்மை என்பது கள்ளைக் குறிக்காதெனவறியவும்.

"சான்றாண்மை சாயலொழுக்க மிவைமூன்றும்
வான்றோய் குடிப்பிறந்தார்க் கல்லது-வான்றோயும்
மைதவழ் வெற்ப படாஅ பெருஞ் செல்வம்
எய்தியக் கண்ணும் பிறர்க்கு"
என நாலடியாரிலும்,

"சான்றவர் சான்றாண்மை குன்றி னிருநிலந்தான்
றாங்காது மன்னோ பொறை"
எனத் திருக்குறளிலும், சான்றாண்மையை உயர்குலத்தவரின் பேரிலேற்றி கூறியிருத்தலோடு, அகராதிகளிலும் "ஊக்கம், ஞானம்" என்னும் இருபொருள்களைத் தந்தே எழுதி யிருக்கின்றன.

நெல்லூரில் கள்தொழில் செய்யும் பள்ளிகளை பள்ளி ஈடிகர்* என்று அழைக்கப்பட்டு வருகின்றது. ஈடிகர் என்பது கள்தொழில் செய்யும் தெலுகு சாதியாருக்குரிய சாதிப்பெயர். ஈடிகரைப்போல் பள்ளிகளும் தெலுகுதேசத்தில் கள்தொழில் புரிவதால்; அதைப்பார்த்த தெலுகர்கள் பள்ளிகளுக்கு பள்ளி ஈடிகர் என்னுஞ் சாதிப்பெயரை வைத்துவிட்டார்கள். அப்பெயர் நாளதும் பள்ளிகளுக்கு சாதிப்பெயராக தெலுகு தேசத்தில் வழங்கி வருகின்றது. அப்படி வழங்கிவரினும் பள்ளிகள் கள்விலைஞராகார். அவர்

* Thurston's Castes and Tribes, Vol. VI, P. 28.

களைப்போல், சான்றார்களில் சிலரும் சிலகாலமாக கள் தொழில் புரிந்து வருவதால் கள்தொழிலாக குமாரகுரு பர சுவாமிகள் அனுமானித்தனர். ஆனால், கள்தொழில் சான்றாருக்குரியதல்ல. நூற்பிரமாணங் கிடையாது. அதனு லேயே நூலாராய்ச்சி யுடையவர்களும் கள்தொழிலை சான் றாருக்குரியதெனக் கூறவும்முற்படவில்லை எனவறியவும்.

16. சதுரகராதி காலம்:—இவ்வகராதி வீரமா முனிவர் என்பவரால் 215-வருடத்திற்குமுன் அதாவது ஏறக்குறைய A. D. 1710-ம் வருடத்தில் இயற்றியது. இதுவே தமிழில் முதன் முதலாக ஏற்பட்ட அகராதியாகும். இதன் முதற் பதிப்பு, சென்னப்பட்டணம், கல்விச் சங்கத் தலைவராகிய பிராஞ்சிஸ், உவைத்து எல்லிஸ் துரையவர்க ளனுமதிப்படி, அச்சங்கத் தமிழ்ப் புலவர் திருச்சிற்றம்பலையரால் திருத்த முற ஆராய்ச்சி செய்து, A. D. 1819-ம் வருடம் அச்சிற் பதிப்பிக்கப் பட்டது.

## இரண்டாம் பதிப்பு.

சென்னை இராஜதானி வித்தியாசாலை சங்கத்தலைவர், ரிச்சார்டு கிளார்க்கு துரையவர்க ளனுமதிப்படி, ஷை சங் கத் தமிழ்ப் புலவர்களாகிய தாண்டவராய முதலியாராலும், இராமச்சந்திர கவிராயராலும் திருத்தி, A. D. 1824-ம் வருடம் அச்சியற்றப் பட்டது.

## மூன்றாம் பதிப்பு.

மேற்படி வித்தியாசாலைத் தமிழ்ப் புலவர்களாகிய திருத்தணிகை-விசாகப்பெருமா ளையராலும், புரசைபாக் கம்-பொன்னம்பல முதலியாராலும் திருத்தி, A. D 1860-ம் வருடம் அச்சிற் பதிப்பிக்கப்பட்டது. இம் முப்பதிப்பு களிலும் கள்ளிலைனரையும், சான்றாரையும் வெவ்வேறு சாதியார்களெனவே விளக்கியுள்ளன.

(1) கள் விற்போர்=சௌண்டிகர், துவசர், படுவர், பழையர், பிழியர்.
(2) சௌண்டிகர்=கள்விற்போர்
(3) துவசர்=கள்விற்போர்
(4) படுவர்=கள்விற்போர்
(5) பழையர்=கள்விற்போர்
(6) பிழியர்=கள்விற்போர்

என சதுரகராதியில் நூறு வருடத்திற்குமுன் கள்தொழிலுக் குரியவர்களுக்கு வழங்கிவந்த சாதிப்பெயர்களை விளக்கி யுள்ளன.

(1) சால்=மிகுதி
(2) சால்பு=ஊக்கம், கல்வி, மாட்சிமை, மேன்மை, நிறைவு
(3) சான்று=சாக்ஷி
(4) சான்றாண்மை=ஊக்கம்
(5) சான்றவர்=அறிஞர்
(6) சான்றோர்=அறிஞர்
(7) சான்றோன்=சூரியன்
(8) நாடன்=கார்த்திகை நாள்
(9) கிராமணி=கிராமமுற்றோன், கிராமியன்
(10) கிராமியன்=கிராமணி
(11) கிராமமுற்றோன்=கிராமணி

என அச்சதுரகராதியிலேயே சான்றாரையும் விளக்கி, கள்தொழிலுக் குரியவர்க ளல்லவெனத் தெரிவித்துள்ளது. இவற்றாலும் நாம் கள்விலைஞ ராகோம்.

17. இராட்லர் தமிழ் இங்லீஷ் அகராதி காலம்:— இராட்லர் (Reverend, J. P. Rottler, D. PH.) என்பவர்

அங்கிலேய மிஷினெரி. இவர் 1834-ம் வருடத்தில் மேற்படி தமிழ் இங்கிலீஷ் அகராதியை நான்கு பாகமாக வெளிப்படுத்தினர். அதில் கள்விலைஞரைக் குறித்து பின் வருமாறு எழுதியுள்ளார்.

(1) கள்விற்போர்=Those who sell toddy.

(2) சௌண்டிகர்=The same as கள்விற்போர், people who sell palm-tree. juice.

(3) துவசர்=The same as கள்விற்போர், Those who sell fermented palm-tree sap.

(4) படுவர்=The same as கள்விற்போர், Those who sell the fermented sap of the palm - tree.

(5) பழையர்=The same as கள்விற்போர், Those who sell fermented palm-tree sap.

(6) பிழியர்=Those who sell it கள்விற்போர், fermented palm-tree sap.

என இராட்லர் தமது அகராதியில் கள்விலைஞரை தெரிவித்திருத்தலோடு, அதற்குமுன் எந்நூலிலும் வழங்கப்பெறுத சாணர் என்னும் பெயரையும் வருவித்து, அவர்களுக்கும் கள்தொழில் உடையதென விளக்கியுள்ளார்.

(7) சாணன்=One of the Sannar tribe, whose occupation is to extract the sap of the palm - tree, for various uses.

என இவரே முதன முதலில் சாணர் என்னும் பெயரை நூலில் எடுத்தாண்டவர். அப்படி எடுத்தாண்டது, A. D. 1834-ம் வருடமாகும். அதாவது இற்றைக்கு தொண்ணூறு வருடத்திற்கு முன் னென்க. இவர் காலத்தில் சான்றூர் என்னும் நமது சாதிப்பெயர் வைசாக

சாணூர் என மரூஉவி வழங்கிவந்தது. அதைக்கொண்டும், அக்காலத்தில் நமது குலத்தவர்களுள் சிலர் கள்தொழிலைச் செய்து வந்தமையை நோக்கியும் இராட்லர் துரை அவர்கள் சாணூருக்கும் கள்தொழில் உரியதெனக் கூறினர். ஆனால் அவர் அச்சாணூர் என்னும் பெயரில் கள் சப்தம் உண்டாவென ஆராய்ந்து பார்த்தவர் அல்லவென விளங்குகின்றது. அவரே அச்சாணூருடன் ஒருபொருட் கொண்ட மற்றப் பெயர்களையும் விளக்கியுள்ளார்.

1. சால்=The same as மிக, abundant.
2. சால்பு=The same as ஊக்கம், abundance, மிகுதி. The same as மேன்மை, superiority.
3. சான்றாண்மை=The same as ஊக்கம், dignified.
4. சான்று=The same as சாட்சி, an evidence.
5. சான்றவர்=The same as அறிஞர், sages.
6. சான்றோர்=The same as அறிஞர், sages, grave and honest men.
7. சான்றோன்=The same as சூரியன், the sun.
8. சாணன்=The same as கெட்டிக்காரன், A capable man. One who is sharp witted. இது "அன்" விகுதியைப் பெற்றது. சாணான் என்பது "ஆன்" விகுதியைப் பெற்ற பெயர். இரண்டும் கெட்டிக்காரன் என்னும் ஒரு பொருளையே கொள்ளும்.
9. கிராமணி=Owner, head man of a village, a title among the toddy-men.

10. கிராமியன்=The same as கிராமணி.

11. நாடன்=The same as கார்த்திகைநாள், Critica the third lunar mansion of the Hindus. An epithet of the Chola kings.

12. நாடான்=A polite epithet in the south, applied to the Shanars.

என வெழுதி விளக்கியுள்ளார். அப்படி விளக்கியவர், நமது பட்டப்பெயராகிய "கிராமணி" என்னும் பெயரையும் கள்விலைஞருக்குரிய சாதிப் பெயரென வெழுதியுள்ளார். இவற்றால் அவரது ஆராய்ச்சி அவ்வளவு சிறந்த தன்று.

18. தமிழ் பாஷை அகராதி காலம்§:—இது யாழ்ப்பாணம் புக்சொஸைடியாரால், யாழ்ப்பாணத்திலுள்ள அமரிக்கன் மிஷின் பிரசில், A. D. 1842-ம் வருடத்தில் வெளிப்படுத்தியது. இதுவே தமிழ்ப்பாஷையில் ஏற்பட்ட அகராதியில், சதுரகராதிக்கடுத்து, இரண்டாவதாகும். இதில் கள்விலைஞரையும், சான்றாரையும் வெவ்வேறு சாதியாரெனவே விளக்கி யுள்ளது. அவை வருமாறு:—

(1) சௌண்டிகர்=கள்விற்போர்
(2) துவசர்=கள்விற்போர்
(3) படுவர்=கள்விற்போர்
(4) பழையர்=கள்விற்போர்
(5) பிழியர்=கள்விற்போர்

என கள்விலைஞருக்கு வழங்கி வந்த சாதிப் பெயர்களை விளக்கி யுள்ளது.

---

§ A Manual Dictionary of the Tamil Language. Published by The Jaffna Book Society; In the American Mission Press, Jaffna. 1842.

(1) சால்=மிகுதி
(2) சால்பு=ஊக்கம், மாட்சிமை, மேன்மை
(3) சான்று=சாட்சி
(4) சான்றாண்மை=ஊக்கம், ஞானம்
(5) சான்றவர்=அறிஞர்
(6) சான்றார்=ஓர் சாதியார்
(7) சான்றோர்=அறிஞர்
(8) சான்றோன்=சூரியன், அறிஞன்
(9) சாணன்=செட்டிக்காரன்
(10) சாணான்=சான்றான்
(11) கிராமணி=கிராமமுற்றோன்
(12) கிராமியன்=கிராமமுற்றோன்
(13) நாடன்=கார்த்திகைநாள், சோழன்
(14) நாடான்=சாணாருக்குரிய பட்டப்பெயர்

என சான்றாரையும் விளக்கியுள்ளது. இதற்கு எட்டு வருடத்திற்கு முன் அச்சிட்ட இராட்லரைப்போல், சாணாரையும், கிராமணியையும் கள்விலைஞரோடு சேர்த்தெழுதியில்லை. இவ்வகராதியும் அவரைப்போன்ற மிஷினெரிகளால் தொகுத்தெழுதியதேயாம்.

19. **உவின்ஸ்லோ தமிழ் இங்லீஷ் அகராதி காலம்:—** உவின்ஸ்லோ (Rev. Miron Winslow, D. D.) என்பவர் அமரிக்கன் மிஷினெரி. இவர் 1862-ம் வருடத்தில் மேற்படி தமிழ் இங்லீஷ் அகராதியை வெளிப்படுத்தினர். அதில் கள்விலைஞரைக் குறித்து பின்வருமாறு எழுதியுள்ளார்.

(1) சௌண்டிகர்=Toddy - sellers, dealers in spirituous liquors, கள்விற்போர்.

(2) துவசர்=Toddy-sellers, dealers in spirituous liquors, கள்விற்போர்.
(3) படிவர்=Toddy-sellers, கள்விற்போர்.
(4) பழையர்=Toddy-sellers, கள்விற்போர்.
(5) பிழியர்=Toddy-sellers, கள்விற்போர்.

என உவின்ஸ்லோ தமது அகராதியில் கள்விலைஞரைத் தெரிவித்திருத்தலோடு, இவருக்கு இருபத்தெட்டு வருடத்திற்குமுன் இராட்லர் என்பவர் கள்விலைஞரோடு சேர்த்தெழுதிய சாணார் என்னும் பெயரையும், அதனோடு சான்றார் என்னும் பெயரையுஞ் சேர்த்து கள்விலைஞரைக் குறிக்குமெனக் குறித்திட்டுள்ளார். அவருக்கு இவர் ஆராய்ச்சியில் கெட்டிக்காரரே!

1. சால்=Greatness, Abundance, மிகுதி.
2. சால்பு=Excellence, Nobleness, Dignity=மேன்மை, Quality=பண்பு, Energy=ஊக்கம், Good conduct=மாட்சிமை, Learning=கல்வி.
3. சான்றாண்மை=Wisdom, ஞானம், Energy=ஊக்கம்.
4. சான்று=Witness, Evidence, சாட்சி; Proof, Testimony=உதாரணம்.
5. சான்றவர்=சான்றோர், The learned, The great, அறிஞர்.
6. சான்றார்=Toddy-drawers as a caste. see சாணார்; The great, The learned, as சான்றோர்.
7. சான்றோன்=The sun, சூரியன், A learned man, கற்றோன்.

8. சாணன்=A capable, Sharp witted man, நிபுணன். இது "அன்" விகுதியைப் பெற்றது.
9. சாணுன்=A man of a particular class of toddy-drawers, ஓர் சாதியான், sometimes சான்றான். இது ஆன் விகுதியைப் பெற்றது.
10. கிராமணி=A headman of a village, கிராமத் தலைவன். A chief or headman among the சாணர் toddy - drawers.
11. கிராமியன்=கிராமமுற்றோன்.
12. நாடன்=The third lunar asterism, கார்த்திகை நாள். An epithet of the Chola kings, சோழ ராஜர்களுடைய பட்டப்பெயர்.
13. நாடான்=A term applied to the caste of toddy - drawers, சாணருக்குரிய பட்டப் பெயர்.

என்பதால் இராட்லர் சாணர் மாத்திரம் கள்விலைஞர் என்றார். இவரோ சான்றார் என்னும் பெயரும் கள்விலைஞரைக் குறிக்கு மென்கின்றார். இவரும் கள் சப்தம் அவைகளில் உண்டாவென ஆராய்ச்சி செய்தவர் அல்லவென வறியலாம். இவர்கள் அதாவது இராட்லர் துரையும், உவின்ஸ்லோ துரையும் தமிழ்ப்பாஷையில் பாண்டித்யமுள்ளவர்கள் அல்லவென்பது உலகப்பிரசித்தி. கும்பகோணம், மஹா மஹோ பாத்தியாய, வே. சாமிநாத ஐயர் அவர்கள் ("I have heard of Winslow and of his Dictionary. He himself was not a learned person" Vide, Kamudi Case, Court Record, Page. 242.) உவின்ஸ்லோ துரையை தமிழில் வல்லவர் அல்லவென முடித்துள்ளார். இத்தகையவர் எவ்விதமுங் கூறுவர். இவர்

களுக்கு இலக்கிய இலக்கண நியதி வேண்டியதில்லை. அகக் கண்ணோடு புறக்கண்களையும் மூடிக்கொண்டு கழுதையையும் குதிரை யென்பர். அதனால் அவர்கள் வாக்கு அவ்வளவு சிரேஷ்டமுடைய தல்லவென ஒதுக்கி, தமிழ்க் கல்வியில் பாண்டித்ய முடையவரால் எழுதிய அகராதி யொன்றைக் கவனிப்பாம்.

20. தமிழ்ப் பேரகராதி காலம்:—இவ்வகராதி யாழ்ப்பாணத்து மேலைப்புலோலி, சைவப்பிரசாரனர், நா. கதிரைவேற் பிள்ளை அவர்களால், யாழ்ப்பாணத்து விரிவகராதி முதலியவற்றிலுள்ள சொற்களுடன், அநேக நூதன சொற்களையுந் தொகுத்து எழுதியதாகும். இக் கதிரைவேற்பிள்ளையவர்கள், யாழ்ப்பாணம் - ஆறுமுகநாவலரின் சீடராவர். தமிழ்ப் படித்த ஒவ்வொருவரும் ஆறுமுக நாவலரின் பாண்டித்யத்தை நன்கறிவர். கல்வியின் கரையைக் கண்டவர். இவர்பெயர் விளங்க இன்னும் "நாவலர் அச்சுக்கூடம்" என சென்னையிலும், "நாவலர் சங்கம்" என சிதம்பரத்திலும், "நாவலர் கோட்டம்" என யாழ்ப்பாணத்திலும், "நாவலர் பதிப்பு" என புத்தகங்களின் பேரிலும் நின்று நிலவுகின்றது. அத்தகைய பெரியாரது சீடரே கதிரைவேற் பிள்ளையாவர். இக்கதிரைவேற் பிள்ளையவர்கள் இச் சென்னையிலுங் க்யாதிபெற்றவர். "அருட்பாமருட்பா" என்னும் வாதத்தில் நின்றவர். இவரின் புலமையையும் இவரது பிரசங்கத்தையும் நேரில் கண்டு கேட்டவர்களே யறிவர். இவரால் எழுதிய அகராதி, 1899-ம் வருடத்தில் வெளியிடப்பட்டது. அதாவது இருபத்தாறு வருடத்திற்கு முன் அச்சிடப்பட்டது. அதில் கள்விலைஞரையும், சான்றாரையுங் குறித்து விளக்கியவை வருமாறு:—

(1) சௌண்டிகர்=கள்விற்போர்,

(2) துவசர்=கள்விற்போர்,
(3) படுவர்=கள்விற்போர்,
(4) பழையர்=கள்விற்போர்,
(5) பிழியர்=கள்விற்போர்,
(6) கள்விற்போர்=சௌண்டிகர், துவசர், படுவர், பழையர், பிழியர் என கள்தொழிலாளரை விளக்கியதோடு;

(1) சால்=மிகுதி,
(2) சால்பு=ஊக்கம், கல்வி, மாட்சிமை, மேன்மை,
(3) சான்று=சாட்சி,
(4) சான்றாண்மை=ஊக்கம், ஞானம்,
(5) சான்றவர்=அறிஞர்,
(6) சான்றார்=சாணார், சான்றோர்,
(7) சான்றோர்=அறிஞர்,
(8) சான்றோன்=சூரியன், அறிஞன்,
(9) கிராமணி=கிராமமுற்றோன், சாணாருட் பெரியவன், சான்றோன்,
(10) கிராமியன்=கிராமமுற்றோன்,
(11) நாடன்=கார்த்திகை நாள், சோழன்,
(12) நாடான்=சாணாருக்குரிய பட்டப்பெயர்,
(13) சாணன்=கெட்டிக்காரன்,
(14) சாணான்=ஓர் சாதியான், சான்றான்,

என சான்றாரையும் விளக்கி யுள்ளார். அப்படி விளக்கியவர் "சான்றார், சாணார்" என்னுஞ் சொற்களை கள்விலைஞருக்குரிய பெயர்களில் ஒன்றெனக் கூறினாரில்லை. இவர் சங்கா திநூற்களில் மிகத்தேர்ந்தவராதலால், அவ்விதம் கூற முன்வரவில்லை. இதுதான் படித்தவருக்கும், படியாத வருக்கும் உள்ள தாரதம்மியம்.

21. (Castes and Tribes of Southern India.) "தென்னிந்தியாவின் சாதிகளும் குலங்களும்" என்னும் நூலின் காலம்:—*இந்நூல் சென்னை ராஜாங்கத்தார் பணவுத வியைக் கொண்டு,* (Edgar Thurston C. I. E) *எட்கார் தர்ஸ்டன்துரை அவர்களாலும்,* K. *ரங்காச்சாரியார்* M. A. *அவர்களாலும், ஊர்கள்தோறுஞ் சென்று விசாரித்தும், நேரில் கண்டும், கேட்டும் எழுதி, ஏழு வால்யமாகப்பிரித்து, கவர்ண்மெண்டு பிரவில்,* 1909-*ம் வருடம் அச்சடிக்கப் பட்டது. அந்நூலில் கள்தொழில் செய்பவர் பலசாதியார்க ளாவர் எனக் கூறியுள்ளது.*

"Toddy-drawing is the special occupation of the several primitive tribes spread over the south-west of India, and bearing different names in various parts." Vide, Thurston's Castes and Tribes of Southern India, Vol. VI, P. 369.

*"கள் இறக்குந்தொழிலை தென்மேல் இந்தியாவில் பரவி யிருக்கும் பல பூர்வீக சாதியார்கள், பல சாதிப்பெயர் களைப் பெற்று, அவர்களுக்குரிய சாதாரணத் தொழிலாகச் செய்து வருகிறார்கள்." என்பதால் அத்தொழிலை பல சாதியார்கள் செய்து வருகிறார்களென வறியலாம். அச் சாதியார்களாவன:—*

(1) "Asili:—The name for Telugu toddy-drawers in the Cuddapah district." Vide, Edgar Thurston's Castes and Tribes of Southern India, Vol. I, P. 62.

*"அசிலர் என்பவர் கடப்பை ஜில்லாவிலுள்ள தெலுகு கள்உற்பத்தி செய்யும் சாதியாராவர்."*

(2) "Billava:—The Billavas are the Tulu-speaking toddy-drawers of the South Canara district." Vide, Thurston's Castes and Tribes of Southern India, Vol. I, P. 243.

"பில்லவர் என்பவர் தென்கன்னட தேசத்திலுள்ள துளுவபாஷை பேசும் கள்விலைஞராவர்."

(3) "Gamalla:—The Gamallas are a class of toddy-drawers, and distillers and vendors of arrack in the Telugu country and are supposed to be Idigas who have bettered themselves, and separated from that caste. ,, ,, ,, In the social scale, the toddy-drawers appear to occupy a higher position in the Telugu than in the Tamil Country. ,, ,, ,, ,, The Gamallas are mostly Saivites, and their priests are Aradhya Brahmans, i. e., Telugu Brahmans." Vide, Thurston's Castes and Tribes of Southern India, Vol. II, P. 253, 256.

"கமளர் என்பவர் தெலுகு தேசத்தில் கள் உற்பத்தியும், சாராய உற்பத்தியும் செய்து விற்பவராவர். கள் உற்பத்தி செய்யுஞ் சாதியார் தமிழ்தேசத்தைப் பார்க்கிலும் தெலுகு தேசத்தில் உயர்வாக மதிக்கப்படுகிறார்கள். கமளர் சைவசமயத்தவர். அவர்களுடைய புரோகிதர் தெலுகு பிராமணராவர்."

(4) Halepaik:—The Halepaiks are Canarese toddy-drawers, who are found in the northern taluks of the South Canara district." Vide, Thurston's Castes and Tribes of Southern India, Vol. II, P. 320.

"ஆலிபிக்கர் என்பவர்கள் கன்னடதேசக் கள்விலைஞராவர். அவர்கள் தென்கன்னட ஜில்லாவின் வடபாகத்திலுள்ள தாலுக்காக்களில் வசிக்கிறார்கள்."

(5) Idiga:—The Telugu toddy-drawers, whose hereditary occupation is the extraction of the juice of the date and palmyra palms, go by different names in different localities. Those, for example, who live in the Salem, North-Arcot and Chingleput districts, are called Idigas. ,, ,, ,, They employ Brahmans as purohits for their ceremonies, and these Brahmans are received on terms of equality by other Brahmans. ,, ,, ,, The Idigas claim to be descended from Vyasa. ,, ,, ,, In this district they are commonly called Chetti." Vide, Thurston's Castes and Tribes of Southern India, Vol. II, P. 366, 367, 368.

"ஈடிகர் என்பவர்கள் தெலுகுதேசக் கள்விலைஞராவர். அவர்களுடைய பரம்பரைத் தொழில் ஈச்சமரத்திலும், பனைமரத்திலும் கள் உற்பத்தி செய்தலாகும். அவர்கள் சேலம், வட ஆர்க்காடு, செங்கல்பட்டு ஜில்லாக்களில் ஈடிகர் என்று அழைக்கப்படுகிறார்கள். பிராமண புரோகிதரை உடைத்தாயிருக்கிறார்கள். இப்பிராமணர் மற்ற பிராமணர்களோடு சமுத்துவமாக மதிக்கப்படுகிறார்கள். ஈடிகர் வியாசருஷிமூல மென்கிறார்கள். இந்த ஜில்லாக்களில் அவர்கள் சாதாரணமாக செட்டி யென்று அழைக்கப்படுகிறார்கள்."

(6) "Izhava:—The Izhavans or Ilavans, are the Malayalam toddy-drawing castes of Malabar, Cochin, and Travancore. ,, ,, ,, Some Izhavas

in South Travancore appear to be honoured with the title of Mudaliyar. „ „ „ Over several temples the Travancore Izhavas have a joint right with the Nayars." Vide, Thurston's Castes and Tribes of Southern India, Vol. II, P. 392, 396,400.

"ஈழவர் * அல்லது ஈளவர் என்பவர்கள் மலையாளம், கொச்சி, திருவாங்கூரிலுள்ள கள்விலைஞராவர். தென் திருவாங்கூரிலுள்ள சில ஈழவர் முதலி என்னும் பட்டம் பெற்றிருக்கிறார்கள். ஈழவர் திருவாங்கூரிலுள்ள அநேக கோயில்களை நாயர்களோடு சமுத்துவமாக அனுபவிக்கிறார்கள்."

(7) "Palli Idiga:—A name given by Telugu people to Tamil Shanans, whose occupation is, like that of Idigas, toddy-drawing." Vide, Thurston's Castes and Tribes of Southern India. Vol. VI, P. 28.

"பள்ளி ஈடிகர் என கள் உற்பத்தி செய்யும் பள்ளிகளை தெலுகு சாதியாரால் அழைக்கப்படுகிறது."

(8) "Pasi:—A few members of this Bengal caste of toddy-drawers were returned at the Madras Census 1901." Vide, Thurston's Castes and Tribes of Southern India, Vol. VI, P. 158.

"பாசியர்† என 1901-ம் வருஷத்தில் சென்னை ராஜதானியில் ஏற்பட்ட குடிமதிப்பு திட்டத்தில் கள் உற்பத்தி செய்யும் வங்கதேச சாதியாரில் சிலரை அழைக்கப்படுகிறது."

---

* யாழ்ப்பாணக் கள்தொழிலாளரை நளர் என்றழைப்பர்.

† "Kalkatti and Pasi. The women, contrary to the usual Tamil custom, have black beads in the tali-string. The practice is apparently due to the

(9) Segidi:—The Segidis are a Telugu caste of toddy-sellers and distillers of arrack, who are found mainly in Ganjam and Vizagapatam." Vide Thurston's Castes and Tribes of Southern India, Vol. VI, P. 348.

*"சிகடியர் என்பவர்கள் தெலுகு ஜாதியாரில் கள் விற்பவரும், சாராயம் காச்சுபவருமாவர். அவர்கள் கஞ்சம், விசாகப் பட்டணம் ஜில்லாக்களில் வசிக்கிறார்கள்."*

(10) "Siolo:—A small class of Oriya toddy-drawers." Vide, Thurston's Castes and Tribes of Southern India, Vol. VI, P. 389.

*"சையோலர் என்பவர் ஒரியா தேசத்திலுள்ள கள்உற்பத்தி செய்பவராவர்."*

(11) "Sondi:—The Sondis or Sundis are summed up in the Madras Census Report, 1901, as Oriya toddy - selling caste." Vide, Thurston's Castes and Tribes of Southern India, Vol. VI, P. 394.

*"சௌண்டிகர் அல்லது சுண்டிகர் என்பவர், 1901-ம் வருஷத்து சென்னை ராஜதானியின் குடி மதிப்புக் கணக்கால் ஒரியாதேசக் கள்விலைஞராவர்."*

---

influence of Telugu Brahman purohits, as various Telugu castes have glass beads along with the bottu (marriage badge). In like manner, the married Pandamutti Palli women wear a necklace of black beads." Vide, Thurston's Castes and Tribes of Southern India, Vol. II, P. 354.

(12) "Tiyan:—The Tiyans are the Malayalam taddy - drawing castes of Malabar, Cochin, and Travancore." Vide, Thurston's Castes and Tribes of Southern India, Vol. VII, P. 36.

*"தீயர் என்பவர்கள் மலையாளம், கொச்சி, திருவாங் கூரிலுள்ள கள்உற்பத்திசெய்யும் மலையாள சாதியாராவர்."*

(13) "Yata:—The Yatas are the toddy - drawers of Ganjam and Vizagapatam." Vide, Thurston's Castes and Tribes of Southern India, Vol. VII, P. 435.

*"யாத்தர் என்பவர்கள் கஞ்சம், விசாகப்பட்டணம் ஜில்லாக்களிலுள்ள கள்உற்பத்தி செய்பவராவர்."*

(14) "Shanan:—The toddy - drawing caste of the Tamil country." Vide, Thurston's Castes and Tribes of Southern India, Vol. VI, P. 363.

*"சாணன் தமிழ்தேசத்தில் கள்உற்பத்தி செய்யுஞ் சாதியானவன்" எனக் கூறியுள்ளார். தற்காலம் இத்தமிழ் தேசத்தில் கள்தொழிலே சான்றோர்களில் சிலரும், "வடுகர், ஈழுவர், பறையர்" முதலானவர்களும்†; தமிழ்நிகண்டு,*

† (Neelamaga Mudali says) "I am climber of cocoanut and palmyra trees and extract toddy. We cut cocoanuts and olies and sell them. My father and my grand-father have been following this profession. I have been climbing ever since I attained years of discretion. (Witness shows marks on his feet and hands indicating that he is a climber by profession) By caste I am a Kaikala Mudali." Vide Kamudi Case, Original Suit No 33 of 1898, Court Record, P. 380.

அகராதிகளில் தெரிவித்துள்ள "படுவர், பழையர்" முதலிய வர்களும் செய்துவர, அவர்களை யெல்லாம் விட்டு, சாணார் கள் மாத்திரம் செய்துவருவதாக அவர் எழுதியது முற் றுந் தவறாகும். நிற்க,

மேலேகூறிய பதினான்கு சாதியார்களும், இச்சென்னை ராஜதானியில் கள்தொழில் செய்து வருவதாகத் தர்ஸ்டன் துரையவர்கள் கூறியுள்ளார்களே யன்றி, சான்றார்கள் மாத் திரம், அக்கள்தொழிலை செய்துவருவதாகத் தெரிவித்தா ரில்லை. அதோடு கள்சப்தம் சான்றார் (சாணார்) என்னுஞ் சொல்லில் இல்லாமையாலும், சான்றார் அல்லது சாணார் களை கள்தொழிலாளரெனக் கூறமுடியாது.

"Those of the invading force who escaped slaughter were carried away into captivity, and being in turns unsuccessfully employed first as cultivators, then as wood-cutters and again as grass-cutters to the royal elephants, the ultimately elected to be braziers, and braziers they are still." Vide, W. W. Hunter's Imperial Gazetteer of India, Vol. I, P. 358.

"சண்டையில் வெல்லப்பட்டு கொலைக்குத் தப்பித்துக் கொண்ட அரசர்களை சிறையாக்கப்பட்டு, அவர்களை பயி ரிடும் படியாகவும், கட்டை வெட்டும்படியாகவும், யானைக் குப் புல்லறுக்கும் படியாகவும் வற்புறுத்தினார்கள். கடைசி யாக அவர்கள் கன்னாரத்தொழிலைக் கையாண்டுவந்தார்கள். அவர்கள் இப்பொழுதும் கன்னாராக விருக்கின்றார்கள்" என அண்டர்துரை அவர்கள் கூறியிருக்கின்றார். இப்பகுதியிற் கூறிய யுத்தத்தொழிலர் கன்னாரத்தொழிலைச் செய்யினும் கன்னார சாதிக்குரிய சாதிப்பெயர்களாகிய,

"கலத்தைச் செய் கஞ்சகாரர்
கன்னுவர் கன்னு ராகும்"

என்னும் நிகண்டில் வெளிப்படும் கஞ்சகாரர்,* கன்னார்,† கன்னுவர்¶ என்னுஞ் சாதிப்பெயர்களைப் பெருமல் தங்களுக்குரிய அரசசாதிப்பெயரையே வைத்து நாளதும் விளங்கலைப்போலவும்;

"The Brahmans, in (Karauli.) next in number, are chiefly petty traders, who carry their merchandise or small pack-cattle, Which are their own property." Vide, The Native States of India and Their Princes, P. 24.

"குடிமதிப்புத் தொகையில் பார்ப்பார்கள் அடுத்தவர்கள், அவர்கள் முக்கியமாக சிறியவர்த்தகர்கள். அவர்கள் வர்த்தகச்சாமான்களை பொதிமாட்டின்பேரில் கொண்டு போவார்கள். அப்பொதிமாடே அவர்களுக்குரிய ஆஸ்தி" எனக் கூறி யிருக்கின்றது. இதில் கூறிய பார்ப்பார் பொதிமாட்டுத்தொழிலைப் புரிந்து, அதுவே ஆஸ்தியாகப் பெறினும், அத்தொழிலுக்குரிய சாதிப்பெயர்களைப் பெருமல் பார்ப்பார் எனவே விளங்கலைப்போலவும்; நம்குலத்தவர்களாகிய சான்ருர்கள் கள்விலைஞர் தொழிலைப்புரியினும் அக்கள்விலைஞருக்குரிய சாதிப்பெயர்களைப் பெருமல் கிராமணி, நாடார், சான்ருர் என்னும் அரசர்பெயர்களையே பெற்று நாளதும் விளங்கி வருகின்றமையின், நாம் கள்தொழிலராகோம்.

* கஞ்சம்—வெண்கலம், காரர்—செய்பவர். வெண்கலம் வேலை செய்பவர்.

† கன்—வெண்கல வேலை. ஆர்—செய்பவர்.

¶ கன்—வெண்கலவேலை, உவர்—உடையவர். வெண்கல வேலை செய்பவர். உவர் என்பது உயர்திணைப் பலர்பால் படர்க்கைச் சுட்டுப்பெயர்

"Shanan is not found in the earlier Tamil literature at all. In the inscriptions of Rajaraja Chola (A. D. 984-1013) toddy-drawers are referred to as Iluvans. According to Pingalandai, a dictionary of the 10th or 11th century, the names of the toddy-drawer castes are Palaiyar, Tuvasar, and Paduvar. To these the Chudamani Nikandu, a Tamil dictionary of the 16th century, adds Saundigar. Apparently, therefore, the Sanskrit word Saundigar must have been introduced (probably by the Brahmans) between the 11th and 16th centuries, and is a Sanskrit rendering of the word Iluvan. From Saundigar to Shanan is not a long step in the corruption of words. The Shanans say that Shanan is derived from the Tamil word Sanrar or Sanror, which means the learned or the noble. But it does not appear that the Shanans were ever called Sanrar or Sanror in any of the Tamil works." Vide, Thurston's Castes and Tribes of Southern India, Vol. VI, P. 368.

*"சாணுன் என்னும் வார்த்தை பூர்வதமிழ் நூற்களில் காணப்படவில்லை*. இராஜராஜ சோழனுடைய சாசனத்தில் (A. D. 984-1013.) கள்விலைஞரை ஈழுவர் எனக் கண்*

* Shanar is current only in colloquial use; but this word is not to be found in standard works." Vide, Kamudi Case, Original Suit No 33 of 1898. Court Record, P. 242. Witness by V. Saminatha Iyer, Tamil Pandit.

டிருக்கிறது. 10-அல்லது 11-வது நூற்றாண்டி லேற்பட்ட பிங்கல நிகண்டு என்னும் அகராதியில், கள்விலைஞர் சாதி யின் பெயர்களை பழையர், துவசர், படுவர் எனக் கண்டிருக் கிறது. இப்பெயர்களோடு 16-ம் நூற்றாண்டி லேற்பட்ட சூடாமணி நிகண்டு என்னும் தமிழ் அகராதியில் சௌண்டி கர் என்னும் பெயரையுஞ் சேர்த்துள்ளது. 11-ம் நூற்றாண் டிற்கும், 16-ம் நூற்றாண்டிற்கும் மத்தியில் சமஸ்கிருத வார் த்தையாகிய சௌண்டிகர் என்னும் பெயர் வெளிப்பட்டிருக்க லாம். சமஸ்கிருத வார்த்தையாகிய சௌண்டிகர் என்பது இழுவன் என்னுஞ் சொல்லோடு ஒப்பானது. சௌண்டிகரி லிருந்து சாணான் என்னும் வார்த்தை சிதைந்து வழங்குவ தற்கு அதிகதூரமில்லை. சாணார்கள், சாணான் என்னும வார்த்தை அறிவுடையோன் (learned) அல்லது அரசன் (noble) என்னும் பொருளைத்தரும் சான்றார் அல்லது சான் றோர் என்னுந் தமிழ் வார்த்தையி லிருந்து பிறந்ததாகச் சொல்லுகிறார்கள். ஆனால் அப்படி எவ்வித தமிழ்நூற்களி லும் சாணார்களை, சான்றார்* அல்லது சான்றோர் என அழைக்கப்பட் டிருக்கக் காணப்படவில்லை" என தர்ஸ்டன் துரையவர்கள் கூறியுள்ளார்.

இப்பகுதியில் தர்ஸ்டன்துரை அவர்கள் சாணான் என் னும் வார்த்தை, பூர்வ தமிழ்நூற்களில், காணப்படவில்லை என்கின்றார்.

சாணான் என்னும் பெயர் சான்றான் என்னும் பெய ரின் மரூஉ மொழியாதலின், மரூஉ மொழிகள் நூற்களில் வழங்கிவர விதியின்மையின், பெரியோர்கள் எடுத்தாள வில்லையென வறியவும்.

* 1070-ம் வருடம் ஏற்பட்ட பெரியபுராணத்தில சாணார் களையே சான்றார் என்று அழைக்கப்பட் டிருத்தலை காணலாம்.

கள்விலைஞருக்கு ஈழுவர், பழையர், துவசர், படுவர், சௌண்டிகர் என்னும் பெயர்கள் சாதிப்பெயர்களாகுமெனவும், அவற்றுள் சௌண்டிகர் என்பது 11-ம் நூற்றாண்டிற்கும், 16-ம் நூற்றாண்டிற்கும் மத்தியில் ஏற்பட்ட பெயரெனவுங் கூறுகின்றார்.

ஈழுவர் முதலிய பெயர்கள் கள்ளைக்குறித்த ஒரு பொருட் கிளவிகளாதலின் கள்விலைஞரையே குறிக்கும். ஆயின் சௌண்டிகர் என்னும் பெயர், 11-ம் நூற்றாண்டிற்குப் பிறபட்ட பெயரெனக் கூறமுடியாது. அப்பெயர்* கள்விலைஞருக்கு ஸ்ரீராமர் காலத்திலேயே ஏற்பட்டுள்ளது.

"Channan, a corruption of the Tamil word, Chanror or chiefmen." Vide, Thurston's Castes and Tribes of Southern India, Vol, II. P, 395.

"சாணான், சான்றோன் என்பதின் மரூஉ மொழியாகும்"† என இத்தர்ஸ்டன் துரை யவர்களே கூறி, மாறி சௌண்டிகரி லிருந்து சாணார் பிறந்ததெனவும், சான்றாரிலிருந்து சாணார் பிறந்ததல்லவெனவும், அப்படிக்கூற எவ்விதத் தமிழ்நூற் பிரமாணமுங் கிடையாதெனவுங் கூறுகின்றார்.

இஃதறியாமையே ! சாணார் என்பது சான்றார் என்பதின் மரூஉ§ எனவும், இவைகள் இரண்டும் ஒரு சாதிப்பெய

---

* வால்மீகி ராமாயணம், அயோத்தியாகாண்டம், 83-வது சர்க்கம், 14-வது சுலோகம் பார்க்க.

† பன்றி-பண்ணி, கன்று-கண்ணு, குன்று-குண்ணு, குன்றத்தூர்-குண்ணத்தூர் என்பனபோல் சான்றார் சாணார் ஆகும்.

§ Vide, Thurston's Castes and Tribes of Southern India. Vol, VI, P. 294.

ரெனவும், பின்வரும் நூற்களில் கூறியுள்ளதோடு; சௌண்டிகன் என்னும் வார்த்தையிலிருந்து, சாணன் என்னும் வார்த்தை பிறந்ததல்லவெனவுங் கூறப்பட்டுள்ளன. அஃது வருமாறு:—

A. D. 1842-ம் வருஷம், யாழ்ப்பாணம், புக்சௌஸைடியாரால் இயற்றி, யாழ்ப்பாணம் அமரிக்கன் மிஷின் பிரஸில் அச்சிட்ட தமிழ் பாஷை யகராதியிலும்;

A. D. 1862-ம் வருஷம், (The Rev. Miron Winslow, D. D.) ரெவரெண்டு, வின்ஸ்லோ துரை அவர்களால் இயற்றி, அமரிக்கன் மிஷின் பிரஸில் அச்சிட்ட, தமிழ் இங்லீஷ் அகராதி, 429, 443-வது பக்கங்களிலும்;

A. D. 1880-ம் வருஷம், இலக்கணசிம்மம், இராயபுரம், ச. ஜெகராவு முதலியார் அவர்களால் இயற்றி, இந்தியன் பிரஸில் அச்சிட்ட இலக்கண சிந்தாமணி, 58-வது பக்கத்திலும்;

A. D. 1899-ம் வருஷம், யாழ்ப்பாணம், ஆறுமுக நாவலரின் மாணுக்கர், நா. கதிரைவேற்பிள்ளை யவர்களால் இயற்றி, வித்தியாரத்நாகரம் அச்சுயந்திர சாலையில் அச்சிட்ட தமிழ்ப் பேரகராதி, 407,416-வது பக்கங்களிலும்;

A. D. 1912-ம் வருஷம், அச்சிட்ட மதுரைத் தமிழ்ச்சங்கத்து, 8-வது பிரசுரம், தமிழ்ச் சொல் லகராதி, இரண்டாம் பாகம், 1041,1062-வது பக்கங்களிலும் பார்க்கலாம்.

"A grammatical and intelligent form of the name (Shanar is) Shandrar, of which Shanar is etymologically a corruption." Vide, Bishop Caldwell's Tinnevelly Shanars, P. 4.

"Sanron, a synonymn for Shanan." Vide, Census of India, 1891, Vol. XV, Caste Index, P. 87.

"Shanar is current only in colloquial use; but this word is not to be found in standard works. Shanar is the corrupted form of Shandrar." Vide, Kamudi Case, Original Suit No 33 of 1898, Court Record, P. 242. மஹா மஹோ பாத்தியாய, வே. சாமிநாத ஐயர் வாக்கு மூலம்.

"The correct form of the name of this race (Shanar) *is Shandrar which is derived from a Tamil word sal.** The expressions Shanror and Shandravar are also derived from the same root and are but different forms of Shandrar." Vide, The Travancore State Manual, Vol. II, Ch. IX, P. 392. (A. D. 1906)

என்பதாதிப் பிரமாணங்களை நோக்க, சான்றார் என்பதிலிருந்தே சாணார் பிறந்ததெனவும், சௌண்டிகரிலிருந்து சாணார் பிறந்ததல்லவெனவும் அறியலாம். சௌண்டிகர், படுவர், பழையர், பிழியர், துவசர் என்னும் பெயர்கள் ஓர்வித வகுப்பினர்களுக்குரிய சாதிப்பெயர்களென தாஸ்டன்துரையவர்கள் கூறியிருக்கின்றாரே யன்றி, நமது சாதியாருக்கு அப்பெயர்களும் உரியதெனக் கூறினாரில்லை. அதுவும் 1909-ம் வருடம் வரைக்கும் அப்பெயர்கள நமது சாதி

* நன்னூல், பதவியல், 10-வது சூத்திரத்திற்கு, யாழ்ப்பாணத்து நல்லூர்-ஆறுமுக நாவலரவர்கள் காண்டிகையுரையின் கீழ், சான்றான், மாண்டான் என்பவற்றிற்கு முறையே சால், மாண், என்னு முரிச்சொற்கள் பகுதியாயின.

யாரை யடுத்து நிற்கவில்லை எனவும் உறுதி கூறுகின்றார். இவ்வகையில் அப்பெயர்களும் நமக்குரியவை யல்ல வெனவு மறியலாம்.

"Nadan:—Nadan, meaning ruler of a country or Village, is a title of the Shanans, who further call themselves Nadans in preference to Shanans." Vide, Thurston's Castes and Tribes of Southern India, Vol. V, P. 134.

"நாடான் * என்பது நாட்டுக்கரசன் அல்லது கிராமத்துக்கரசன் எனப் பொருள் கொள்ளும். சாணருடைய பட்டப் பெயராயிருக்கிறது. அவர்கள் நாடான் என்று அழைத்துக் கொள்ளுகிறார்கள்."

"The two words Nadan and Gramoni mean the same thing, namely ruler of a country or of a village, the former being a Tamil, and the latter a Sanskrit word." Vide, Thurston's Castes and Tribes of Southern India, Vol. VI, P. 368.

நாடான், கிராமணி என்னும் இரண்டு வார்த்தைகளுக்கும் பொருள் ஒன்றே. அதாவது நாட்டுக்கு அரசன், கிராமத்துக்கரசன் எனப்படும். முன்னது தமிழ்வார்த்தையும், பின்னது சமஸ்கிருத வார்த்தையுமாகும்.

"Gramoni:—The title of some Shanans, and of the headman of the Khatris." Vide, Thurston's Castes and Tribes of ·Southern India, Vol. II, P. 300.

* "Nattan also occurs as a title of the Tamil Sembadavan and Pattanavan fishing Castes, and of the Vallambans." Vide Thurston's Castes and Tribes of Southern India, Vol. V, P. 249.

"கிராமணி§:—சாணார்களுக் குரிய பட்டப் பெயர." எனத் தர்ஸ்டன் துரையவர்கள் சான்றாருக்குரிய பட்டப் பெயர்களாகிய கிராமணி, நாடான் என்னும் பெயர்களை யும் வெளிப்படுத்தி, அவைகள் நாட்டையுடைய அரசர்க ளையே விளக்குமெனத் தெரிவித்துள்ளார். அப்படி விளக் கிய அவர் கிராமணி, நாடான் என்னும் பெயர்களோடு ஒருபொருட் கொண்ட சான்றார் என்பது மாத்திரம் கள் விலைஞரை விளக்குமெனக் கூறியது அறியாமையே யாம். அச்சான்றார் அல்லது சாணார் என்னும் வார்த்தை அவர் தெரிவித்த (Noble) நோபில் என்னும் பொருளில் உட் பட்டு, அரசரையே விளக்குமென வறியவும்.

22. அபிதான சிந்தாமணியின் காலம்:— இந்நூல், ஆ. சிங்காரவேலு முதலியாரால் இயற்றி, மதுரைத் தமிழ்ச்சங்க பிரசுரம், ஒன்பதாவதாகக் கணிக்கப்பட்டு, சென்னை வைஜயந்தி அச்சுயந்திர சாலையில், 1910-ம் வரு டத்தில் பதிப்பிக்கப் பட்டது. அதில் 392-வது பக்கத்தில் பின்வருமாறு எழுதி யுள்ளது.

"சான்றான்—சூத்திரன் அரசகன்னிகையைப் புணரப் பிறந்தவன். இவன் கள் விற்று ஊர்ப்புறத்து வாழ்பவன். (அருணகிரி புராணம்.)" என அருணகிரி புராணத்தை மேற்கோள் தந்து வரைந்துள்ளது.

அருணகிரி புராணம், சிதம்பரம்-மறைஞான தேசிகர் என்பவரால் இயற்றியது. அவர் காலம் இற்றைக்கு ஏறக் குறைய நூற்றைம்பது வருடத்திற்கு முற்பட்டிருக்கலாம். அவரால் இயற்றிய அருணகிரி புராணம் விக்கிரமஞூ ஐப்பசிமீ (A. D. 1879) அதாவது 47-வருடங்களுக்கு

§ Thurston's Castes and Tribes of Southern India Vol. V. P. 164. 166. Vol. III, P. 287.

முன், சிதம்பரம்—வாமதேவ முருக பட்டாரகரால், பல பிரதிரூபங்களைக் கொண்டு பரிசோதித்து, சென்னபட்டணம், வித்தியாநு பாலன யந்திரசாலையில் அச்சிற் பதிப்பிக்கப்பட்டது. இதுவே முதற்பதிப்பு.† இப்பதிப்பில் அபிதான சிந்தாமணி நூலார் தெரிவித்த பகுதியிலுள்ள கருத்து, வலம்புரி சருக்கத்திலுள்ளது. அஃது வருமாறு:-

அருணகிரி புராணம்,
வலம்புரிச் சருக்கம், பிரதிலோம குற்பத்தி,
110-வது செய்யுள்.

"சூத்திரன் வசியர் கன்னி
தோண்மணம் புணர்ந்த போது
வாய்த்தவ னுயன் மேய்ப்பன்
வனத்திறு னினங்க டம்மைப்
பார்த்திவர் கன்னி தோளின்
படிதலு மவ னப்போது
வாய்த்தவன் கள்ளு விற்கும்
வணிகனூர்ப் புரத்து வாழ்வான்."

என இதில் அவர் கூறியவாறு பிறந்த கள்விலைஞரை "கள்ளு விற்கும் வணிகர்" ‡ என்றார். சான்றார் என்னும் பிரஸ்தாபமே கிடையாது. அச்சான்றார் ஒன்று தவற

† இது வரை இரண்டாம் பதிப்பு அச்சிட வில்லை.

‡ அதிவீரராமபாண்டியரும், தாமியற்றிய காசிகாண்டத்தில் கள்விலைஞரை "வணிகர்" என்றார். காசிகாண்டம், சிவசன்மாவை யமன் எதிர்கொண்ட அத்தியாயம், 43-வது செய்யுள்:—"மருள் கொடுக்கு நறை விற்கும் வணிகக் கபடனை, விரிவாத் தசைக ளென்பு பொடியாக விரவின், உரலி லிட்டுய ருலக்கையி னிடித்தொழிகலா, நரகிடைப் பதை பதைக்க நனி நண்ணி வீடுவாய்" என்பதால் விளங்கும்.

மற்று அவர் கூறிய கருத்துகளெல்லாம் அடங்கியுள்ளது. அருணகிரி புராணத்திலுள்ள மொத்தச் செய்யுள்கள், 613-ல், அவர் தெரிவித்த கருத்தை விளக்கக்கூடிய செய்யுள் இதுவொன்றேயாம்.

இச்செய்யுளில் இல்லாத சான்றார் என்பதை வருவித்து எழுதியது அயோக்கியத்தனமல்லவா? தாம் செய்யும் குறும்புத்தனத்தை பிறர்தலையிலேற்றி, தாமொன்றும் அறியாதவரைப்போ லிருக்கப் பார்த்தல் அறிவாளிக் கழகாமோ. இத்தகைய அற்பர்களால் இயற்றிய நூற்களை மதுரைத் தமிழ்ச் சங்கத்தார் ஆமோதிப்பதும் கலிகாலக் கூற்றேயாம்.† இந்த ஆ. சிங்காரவேலு முதலியைப் போன்ற அயோக்கியர்கள் உலகில் அநேகர் உண்டு. அவர்களில் செல்லையா பிள்ளை என்பவரும், நா. சிவசுப்பிரமணிய சிவாச்சாரியார் என்பவரும் உட்படுவர். இவர்களும் நூற் புரட்டர்களே.

சாதிநூல் என்பது திருவாரூர் ஞானப்பிரகாச சுவாமிகள் இயற்றி, சென்னை கலாநிதி அச்சுக்கூடத்தில் 1875-ம் வருடத்தில் அச்சிட்டு ரிஜிஸ்டர் செய்தது. அதில் கள் விலைஞரைச் சுட்டி:

சாதிநூல்,
பிரதிலோமபுருற்பத்தி, 6-வது செய்யுள்.

"அதுலமா மரசர் சாதி
யரிவையைப் பெருவே ளாளன்
புதுமணம் புரிய வந்த
புத்திரர் பழைய ராகி
முதுபனை யீந்திற் றாக்கு
முட்டியில் முட்டா தூறும்

† க்ஷத்திரிய மித்திரன், மலர் 7, இதழ் 7, பக்கம் 155, பார்க்க.

மதுவினைக் காச்சி விற்று
வரும்பொருள் விரும்பி வாழ்வார்"

என கள்விலைஞரை பழையர் எனக் கூறியுள்ளது. பழையர் என்பது கள்விலைஞருக்குரிய சாதிப்பெயர்களில் ஒன்றென நிகண்டார் கூறியுள்ளார்.

இச் சாதிநூலையே யாழ்ப்பாணம், சி. செல்லையாபிள்ளை யும், நா. சிவசுப்பிரமணிய சிவாச்சாரியாரும் ஒன்று சேர்ந்து, அதிலுள்ள செய்யுட்களை தங்கள் மனதிற்கியைய பேதப்படுத்தி, அதற்கியைய "சாதிபேத விளக்கம்" என்னும் மறுபெயர்தந்து, மதராஸ் ரிப்பன் அச்சுயந்திர சாலையில், 1909-ம் வருடத்தில் பதிப்பித்து, களவாடி ரிஜிஸ்டர் செய்துக்கொண்டனர். இது முதற்பதிப்பிற்கு, 34-வருடம் பிந்தியதாகும். இந்த இரண்டாம் பதிப்பில், முதற்பதிப்பில் வெளிப்பட்ட பழையர் என்பதை நீக்கி, சான்றார் என்பதைப் புதுக்கி அச்சிடப் பட்டது.

சாதிபேத விளக்கம், 58-வது செய்யுள்.

"அதுலமா மரசர் சாதி
யரிவையைப் பெருவெள் ளாளன்
புதுமணம் புணர வந்த
புத்திரர் சான்று ராகி
முதுபனை யீஞ்சிற் றாக்கு
முட்டியில் முட்டி யூறு
மதுவினைக் காய்ச்சி விற்று
வரும்பொருள் விரும்பி வாழ்வார்"

எனப்புரட்டி யுள்ளார். இவ்வயோக்கியர்களைப் போன்றே, ஆ, சிங்காரவேலு முதலி என்னும் அயோக்கியரும் அருணகிரி புராணத்தில் "கள்விற்கும் வணிகன்" என விருக்க, சான்றுன் என விருப்பதாக மருட்டினரென வறியவும்.

23. தமிழ்ச்சொல் லகராதி காலம்:—இவ்வகராதி இலங்கை நீதிபதியாயிருந்த, கு. கதிரைவேற்பிள்ளை யவர்களால் இயற்றப்பெற்று, மதுரை தமிழ்ச்சங்கத்துப் பிரசுரம், 8-வதாக எண்ணப்பட்டு, மதுரைத் தமிழ்ச்சங்க முத்திராசாலையில், 1912-ம் வருஷம் பதிப்பிக்கப்பட்டு, மூன்றுவால்யமாகக் கட்டப்பட்டுள்ளது. அவ்வகராதியில் கள்விலைஞரைச் சுட்டி:—

(1) சௌண்டிகர்=கள்விற்போர்
(2) துவசர்=கள்விற்போர்
(3) படுவர்=கள்விற்போர்
(4) பழையர்=கள்விற்போர்
(5) பிழியர்=கள்விற்போர்
எனக் கள்தொழிலாளரை விளக்கியதோடு;

(1) சால்=மிகுதி, அமைதி
(2) சால்பு=ஊக்கம், கல்வி, மேன்மை
(3) சான்று=சாட்சி
(4) சான்றாண்மை=சால்புடைமை
(5) சான்றவர்=அறிஞர்
(6) சான்றார்=சாணார், சான்றோர்
(7) சான்றான்=கள்விற்போன் (பராசர-160)
(8) சான்றோர்=அறிஞர், பெரியவர்
(9) சான்றோன்=சூரியன்
(10) சாணன்=கெட்டிக்காரன்
(11) சாணான்=ஓர்சாதியான்
(12) கிராமணி=கிராமத்தலைவன், கிராம முதற்றோன், சான்றோன், தலைமையானவன்
(13) கிராமியன்=கிராமமுதற்றோன்
(14) நாடன்=நாடுடையவன்

(15) நாடான்=சான்றருக்குரிய ஓர்பட்டப்பெயர், எனச் சான்றுரையும் விளக்கியுள்ளது.

அப்படி விளக்கிய **சான்றார்** என்னும் பெயரிலாவது, அச்சான்றார் என்னும் பெயரின் உட்பிரிவுகளாகிய "சால்" முதலிய பெயர்களிலாவது, கள்சப்தம் உண்டென விளக்கப் பட்டில்லை. அப்படி விளக்காதிருக்க, **சான்றான்** என்னும் பெயர் **கள்விற்போன்** என்னும் பொருளைக் கொள்ளுமென பராசரஸ்மிருதியில் கூறியிருப்பதாகக் குறிக்கப்பட்டுள்ளது. இது நகைப்புக் கிடமேயாம்.

சான்றான் என்பது சுத்தத் தமிழ்மொழியே யன்றி, கிரந்தமொழியாகாது. அதனால் சுலோகத்தில் உட்பட யிட மில்லை. ஆயின் உரையாசிரியர்களாவது கள்விலைஞரை சான்றார் எனக் கூறியுள்ளார்களாவெனின், அதுவு மின்று. மொத்தத்தில் பராசரஸ்மிருதி, 576-சுலோகங்கள் கொண் டது. இப்பராசர ஸ்மிருதியின் சுலோகங்களுக்கு ஏறக் குறைய, 650-வருஷங்களுக்கு முன் கிரந்தத்தில் வியாக்யா னஞ் செய்த பாரத்வாஜகுல திலகராகிய மாதவாசாரியா ரும்; 37-வருஷங்களுக்கு முன், அக்கிரந்த வியாக்யானத் தை, தமிழில் மொழிபெயர்த்த, ஈகை-வரதாசாரியார், கள க்காட்டூர்.வரதாசாரியார் அவர்களும் சான்றாரே கள்விலை ஞரெனக் கூறினார்களில்லை. ஆகவே, பராசர ஸ்மிருதியைச் சுட்டிக் காட்டல் அசம்பா விதமேயாம்.

இது விஷயமாக "**மதுரை தமிழ்ச் சங்கம்**" மானேஜர் **லெக்ஷ்மி நாராயண ஐயர்** அவர்களுக்கும் ஷை தமிழ்ச் சங்க கலாசாலைத் தலைமை உபாத்தியாயரும், "**சேந்தமிழ்**" பத் திராதிபருமாகிய ம-ா-ா-ஸ்ரீ, **திரு. நாராயண ஐயங்கார்** அவர்களுக்கும், கடிதங்கள் எழுதலானேன். அவைவரு மாறு:—

எமது முதல் கடிதம்.

க்ஷத்திரிய மித்திரன் ஆபீஸ்,
சென்னை, (17-7-25.)

ம-ா-ா-ஸ்ரீ, கனம் மதுரைத் தமிழ்ச்சங்க மானேஜர் அவர்கள் திவ்விய சமுகத்திற்கு மிகுந்த விநயத்துடன் தெரிவிக்கும் நிரூபம். தங்களது சங்கப் பிரசுரம், 8-வது இலக்கமுடைய "தமிழ்ச் சொல் லகராதி" என்னும் அகராதி, இரண்டாவது வால்யம், 1062-வது பக்கம், 13-வது வரியில் "சான்றான்=கள்விற்போன். பராசர-160" என வெழுதப் பட்டுள்ளது. அவ்விதம் எந்த பராசர ஸ்மிருதியில் சொல்லப்பட்டுள்ளது. அதைப்பார்க்க ஆவலுள்ளவனாகவிருக்கின்றேன். அதை தயவு செய்து இன்னபதிப்பில், இத்தனையாவது பக்கத்தில், இன்ன இலக்கமுடைய சுலோகத்தில் என விபரப்பட வெழுதி யனுப்பக் கோருகின்றேன்.

இங்ஙனம்,
த. விஜயதுரைசாமி கிராமணி.
க்ஷத்திரிய மித்திரன் பத்திராதிபன், சென்னை.

முதல் பதில் கார்டு.

மதுரைத் தமிழ்ச்சங்கம்,
மதுரை 22-7-1925.

ம-ா-ா-ஸ்ரீ, த. விஜயதுரைசாமி கிராமணி அவர்கட்கு.

ஐயா! தங்கள் கடிதம் கிடைத்தது. தமிழ்ச்சொல்லகராதிப் பதிப்பிற்கு மேற்கோளாக எடுத்துக் கொள்ளப்பட்ட புத்தகங்கள் சங்கத்தில் நேர்ந்த தீவிபத்தில் இழந்துவிடப் பட்டமையால் தங்கள் கடிதத்தில் குறித்த விஷயமாகத் தகவல் குறித்து அனுப்ப முடியவில்லை. "பராசர ஸ்மிருதி" தமிழ் மொழிபெயர்ப்புப் புத்தகத்தைப் பார்வையிடவேண்

டும். 160-என்பது பெரும்பாலும் பக்கத்தையே குறிப்ப தாக இருக்கலாம். அல்லது சுலோகத்தின் எண்ணாகவு மிரு க்கலாமென்று நினைக்கின்றேன்.

இங்ஙனம்,
லெக்ஷ்மீ நாராயணையர்,
மானேஜர்.

எமது 2-வது கடிதம்.

க்ஷத்திரிய மித்திரன் ஆபீஸ்.
சென்னை. 25-7-25.

ம-ா-ா-ஸ்ரீ, கனம், திரு. நாராயணையங்கார் அவர்கட்கு வந்தனத்துடன் தெரிவிப்பு. தாங்கள் (22-7-1925) தேதியில் அனுப்பிய கார்டு கிடைக்கப் பெற்றனம். தாங்கள் தெரிவித்த படி பராசர ஸ்மிருதி தமிழ்மொழி பெயர்ப்பைப் பார்த் தனம்.

எம்மிடமிருக்கும் பராசரஸ்மிருதி மொழிபெயர்ப்பு மாதவிய வியாக்கியானத்துடன், ஈகை வித்துவான், ஸ்ரீமத்-வரதாசாரியாருடைய உதவியைக்கொண்டு, களக்காட்டூர், கருணை-வரதாசாரியரால் மொழிபெயர்க்கப்பட்டு, சென்னை, ஆல்பீனியன் அச்சுக்கூடத்தில், விரோதிஇல பதிப்பிக்கப் பட்டது. அதாவது, 37-வருடத்திற்கு முற்பட்டது.

"பராசர ஸ்மிருதி" என்பது "ஆசாரகாண்டம், பிரா யச்சித்த காண்டம்" என விருகாண்டங்களால் அடங்கி, ஆசாரகாண்டம், மூன்று அத்தியாயங்களாகவும், பிராயச் சித்தகாண்டம், ஒன்பது அத்தியாயங்களாகவும் வகுக்கப் பட்டுள்ளது.

இந்த பனிரெண்டு அத்தியாயங்களிலும் ஒரு அத்தி யாயமாவது, 160-சுலோகங்களைப் பெற்றில்லை. அதனல்

160-எனத் "தமிழ்ச் சொல் லகராதியில்" குறிப்பிட்டது சுலோக நெம்பராகாது. அதோடு, 160-வது பக்கத்திலுங் காணப்படவில்லை,

"சான்றார்" எனபது சுத்தத்தமிழ் மொழியே யன்றி, கிரந்தமொழியாகாது. அதனால் சுலோகத்தில் உட்படாது. சான்றார்=கள்விலைஞரென உரைசெய்தற்குப், அதற்கு முன்னன எந்த நூற்களிலும் அவ்விதம் காணுதிருக்க, இவர்கள் மாத்திரம் எவ்விதஞ் செய்வர்?

கள்விலைஞரை பராசரஸ்மிருதி, ஆசாரகாண்டம், இரண்டாவது அத்தியாயம், 15-வது சுலோகத்தின் கீழ் விசேஷவுரையில், அதாவது (37-வருஷங்களுக்கு முன் அச்சிட்ட தமிழ் மொழிபெயர்ப்பு) புத்தகம், 110-வது பக்கத்தில் "ஸௌரேயன்" எனப்பட்டுள்ளதே யன்றி, "சான்றார்" எனப்பட்டில்லை. (சுண்டியிலிருந்து சௌண்டிகன் பிறந்ததைப்போல், சுராவிலிருந்து சௌரேயன் பிறந்தது.)

ஆகவே 160-வது எண், பக்க எண்ணு மல்ல, சுலோக எண்ணு மல்லவென வறியலாம். அது விஷமத்தால் வேணுமென்று நுழைத்ததெனத் தெரியவருகின்றது.

தாங்கள் வாசித்தறிந்த வரைக்கும், "சான்றார்" என்னுஞ் சொல்லில் கள்சப்தமுண்டா? அல்லது எந்தத் தமிழ் கிரந்த நூற்களிலாவது கள்விலைஞரைக் குறிக்குமெனப் பெரியோர்கள் எடுத்தாண்டிருக்கின்றனர்களா? என்பதை எம்மீது கருணைகூர்ந்து தெரிவிப்பீர்களென்று ஆவலுடன் எதிர்பார்க்கின்றனன்.

இங்ஙனம்,
த. விஜயதுரைசாமி கிராமணி,
க்ஷத்திரிய மித்திரன் பத்திராதிபன்,
சென்னை.

## 2-வது பதில் கடிதம்.

28-7-25. மதுரை.

ம-௱-௱-ஸ்ரீ, விஜயதுரைசாமி கிராமணி யவர்களுக்கு.

ஐயா! தாங்கள் 25-7-25-ல் எழுதிய கடிதம் கிடைத்தது. அதில் நான் தங்களுக்கு 22-7-25-ல் ஒரு கார்டு எழுதியிருப்பதாகக் கண்டிருக்கிறது. அப்படி நான் ஒன்றும் இதுவரை எழுதியிருப்பதில்லையே. ஆனால் என்னை தமிழ்ச் சங்கம் மானேஜரென்று எண்ணியிருக்கலாமென்று தோன்றுகிறது. நான் மானேஜரில்லை. தமிழ்ச்சங்க கலாசாலைத் தலைமையுபாத்தியாயர். "செந்தமிழ்" பத்திராதிபர் வேலையும் உபகாரமாகப் பார்த்து வருகிறேன். மானேஜர் லக்ஷிமி நாராயண ஐயர். அவருக்கு எழுதி யிருக்கலாமென்று ஷை கடிதத்தை மானேஜர் ஆபீஸில் சேர்ப்பித்திருக்கிறேன். அதில் கண்ட விஷயங்களை நான் இன்னும் நன்றாய் ஆராய்ச்சி செய்யவில்லை. அவசியம் தெரியவேண்டுமானால் என் அபிப்பிராயத்தை காலவிளம்பத்தில் நேரில் சந்தித்தபோது தெரிவிக்க விரும்புகிறேன். மதுரைக் கலம்பகம், 24-ம் பாட்டு, "அழகுற்றதோர்" பார்க்க.

தங்கள் அன்புள்ள
திரு. நாராயணையங்கார்.

## எமது 3. வது கடிதம்.

க்ஷத்திரிய மித்திரன் ஆபீஸ்,
(12-8-25)

ம-௱-௱-ஸ்ரீ கனம், மானேஜர் லக்ஷிமி நாராயண ஐயர் அவர்களுக்கு வந்தனம். நான் 25-7-25 தேதியில் ஒரு கடிதம் எழுதினேன். அது பெயர் மாற்றத்தால் செந்தமிழ் பத்திராதிபரிடஞ் சென்றதாகத் தெரிகிறது. பிறகு

அவரும் தங்களிடம் அனுப்பியதாகத் தெரிவித்துள்ளார்கள். அப்படியிருக்க எமது சந்தேகத்தைப் போக்காதிருப்பதற்காக யாம் விசனிக்கின்றனன். தயவுசெய்து பதிலெழுதக் கோருகின்றேன்.

இங்ஙனம்,
த-விஜய துரைசாமி கிராமணி
க்ஷத்திரிய மித்திரன் பத்திராதிபன்
சென்னை.

3-வது பதில் கார்டு.

மதுரைத் தமிழ்ச் சங்கம்,
மதுரை 23-8-1925

ம-ா-ா-ஸ்ரீ த. விஜய துரைசாமி கிராமணி அவர்கட்கு.

ஐயா தங்கள் கடிதம் கிடைத்தது. வித்யா விஷய சம்பந்தமான தகவல்கட்கு செந்தமிழ் பத்திராதிபர் அவர்கட்கு நேரில் எழுதித் தெரிந்து கொள்ளக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

இங்ஙனம்.
லெக்ஷ்மி நாராயணையர்
மானேஜர்.

எமது 4-வது கடிதம்.

க்ஷத்திரிய மித்திரன் ஆபீஸ்
தண்டையார்பேட்டை, சென்னை. (12-8-25)

ம-ா-ா-ஸ்ரீ, கனம். திரு. நாராயணையங்கார் அவர்களுக்கு வந்தனம். தாங்கள் 28-7-25 தேதியில் அனுப்பிய கடிதம் கிடைக்கப்பெற்றனம். அதில் காட்டிய "மதுரைக் கலம்பகம், 24-ம் பாட்டு, அழகுற்றதோர்" எனனுஞ்

செய்யுளை யாமறிவோம். அச்செய்யுளில் குமரகுருபர சுவாமிகள் "சான்றாண்மை" என்பதற்கு சிலேடையாக "அறிவால் நிறைந்தோர், கள்தொழில் புரிவோர்" என்னும் இரு பொருள் விளங்க வைத்துள்ளார். இவற்றுள் "சான்றாண்மை" என்பது "அறிவு" என்னும் பொருளைத் தருமெனக் காட்ட அநேக நூற்களுண்டு. ஆனால் "கள்" என்னும் பொருளைத் தருமெனக் காட்ட, அம்மதுரைக் கலம்பக மன்றி, அதற்கு முற்பட்ட நூற்களிலாவது, அதற்குப் பிற்பட்ட நூற்களிலாவது காட்ட முடியாது.

அக்குமரகுருபர சுவாமிகள் பாண்டிய நாட்டிலே, தாமிர பரணி நதிக்கரையிலே, ஸ்ரீவைகுண்டம் என்று வழங்கும் கைலாச புரத்திலே பிறந்து வளர்ந்தவர். அவரது காலம் பாண்டிய அரசொழிந்து ஒரு நூறு வருடத்திற்குப் பிந்திய காலமாகும். மதுரையை யாண்ட திருமலை நாய்க்கர் ஆஸ்தான பண்டிதராவர். அக்காலத்தில் அப்பக்கத்தில் அரசிழந்து ஒதுக்கப்பட்ட நாடார்கள் பல மாறுதலடைந்து ஜீவனார்த்தத்தின் பொருட்டு, பல தொழில்களோடு கள் தொழிலையும் சிலர் கையாண்டு வந்திருக்கலாம். அதைப்பார்த்த சுவாமிகள் சான்றாரை கள்தொழிலாக வெண்ணிப் பாடினர். இவ்வளவேயன்றி, "சான்றாண்மை" என்பது "கள்" என்னும் பொருளைத் தருமென வெண்ணி பாடியதல்ல. ஆகவே, அது பிரமாணமாகாது. நிற்க,

யாம் அவருக்குத் தெரிவித்துக் கொண்டது குமரகுருபர சுவாமிகள் வாக்கையல்ல, பராசர ஸ்மிருதியையேயாம். அந்த ஸ்மிருதிக்கு வியாக்யானம் எழுதிய, ஸ்ரீமாதவாசாரியார் காலம் 600-க்கு மேற்பட்டிருக்கும். அவ்வியாக்கியானத்திலாவது, மூல சுலோகத்திலாவது, அல்லது விரோதி வருடத்தில் (A. D. 1888) அச்சிட்ட பராசரஸ்மிருதி

யிலாவது "சான்றான்=கள் விற்போன்" எனக் கண்டாம் இல்லை. அப்படி யிருக்க அகராதியில் நுழைந்த பராசர ஸ்மிருதி எத்தகையது? இவ்வளவும் சந்தேக நிவர்த்திக்காக கேட்பதேயாம். தங்களைப் போன்றோரிடம் தெரிந்துக் கொள்ள வேண்டுமென்பதே எம் முழுநோக்கம்.

நான் பெயர்மாறி எழுதினதற்காக மன்னிக்கக் கோருகின்றேன். ஆயின் தாங்களும் அந்த விஷயமாக மதுரைக் கலம்பகத்தைக் காட்டியதால், அவருக்கெழுதுவதோடு, தங்களுக்கும் எழுதலாயினேன்.

அன்பன்,

த-விஜய துரைசாமி கிராமணி,

க்ஷத்திரிய மித்திரன் பத்திராதிபன்,

சென்னை.

4-வது பதில் கடிதம்.

20-8-25, மதுரை.

ம-ா-ா-ஸ்ரீ விஜய துரைசாமி கிராமணி அவர்களுக்கு தாங்கள் எழுதிய 12-8-25உ லெட்டர் இன்றுவந்து சங்கத்திலிருந்தப் பராசரஸ்மிருதி பதிப்புக்களெல்லாம் தீக்கு இரையாய் விட்டமையால், அவற்றை ஆராய்ந்து பார்க்க முடியாமைக்கு வருந்துகிறேன். இவ்விஷயத்தைப்பற்றி இது வரை நான் ஒன்றும் ஆராய்ந்து தீர்மானிக்கவு மில்லை. இனி எங்கேனுங் கண்டறிந்தால் தெரிவித்துக் கொள்வேன். தாங்கள் எழுதியபடி மதுரைக் கலம்பகத்துள்ள "சான்றாண்மை" என்பது கள்ளுக்குப் பெயரில்லை. அதிலுள்ள சான்று என்பதே கள்ளின் பெயரா யிருக்க வேண்டுமென் றெண்ணுகிறேன். உலக வழக்கிலும் சான்று என்ற பெயர் கள்ளுக்கு வழங்கப்பட்ட தென்று தோன்றுகின்றது. உண்மையாக என் மனதிற்றோன்றிய விஷயங்களைத்

தெரிவித்துக் கொண்டமையால், தவறுத விருந்தால் மன்னிப் பீர்களென் றெண்ணுகிறேன்.

இங்ஙனம்,
தங்களன்பன்,
திரு-நாராயணையங்கார்.

## எமது 5-வது கடிதம்.

க்ஷத்திரிய மித்திரன் ஆபீஸ்,
சென்னை, 4-12-25.

ம-ா-ா-ஸ்ரீ, கனம் திரு. நாராயணையங்கார் மதுரைத் தமிழ்ச்சங்கம்,செந்தமிழ்ப் பத்திராதிபர் அவர்களுக்கு மிக்க வந்தனத்துடன் தெரிவிக்கும் க்ஷேமம்.

தாங்கள் 20-8-25-ல் தெரிவித்த கடிதத்தில் "சான்று என்பதே கள்ளின் பெயராயிருக்கவேண்டு மென்றெண்ணுகிறேன். உலகவழக்கிலும் சான்று என்றபெயர் கள்ளுக்கு வழங்கப் பட்டதென்று தோன்றுகிறது" என வெழுதி யுள்ளீர்கள்.

அப்படி அப்பொருள்தர எந்நூலிலாவது எடுத்தாளப் பட்டுள்ளதா? நூற்பிரமாணம் வேண்டுகின்றேன். உலக வழக்கமென்கிறீர்கள். உலகவழக்கம் அகராதிகளில்காணப்படும். அப்படியுங் காணவில்லையே. 1912-ம் வருடத்தில் பதிப்பித்த, தங்கள் சங்கம், 8-வது பிரசுரமாகிய தமிழ்ச்சொல் லகராதி, இரண்டாம் பாகம், 1062-வது பக்கத்தில் "சான்று=சாட்சி. (உ-ம்) 'சான்று நின்குலத் தருவர் யாவரும்' கந்தபு, இந்திராணி,8" எனக் கூறப்பட்டுள்ளதே யன்றி, கள்ளையுங் குறிக்கு மெனக் காட்டப்பட்டில்லையே!

தாங்கள் நிற்கும் ஸ்தானம் தெய்வப் புலவர்களாகிய நற்கீரர், கபிலர் முதலியோர் நின்ற ஸ்தானமென வறிய வேண்டும். அந்த ஸ்தானமாகப் பாவித்தே தங்களைக் கேட்

கின்றேன். நூல் சம்பிரதாயத்திற்கு மாறுபடக் கூறுவது தாங்கள் நிற்கும் இடத்திற் குரியதன்று. உண்மையைத் தெரிவிக்கக் கோருகின்றேன்.

தங்களன்பன்,
த. விஜய துரைசாமி கிராமணி,
க்ஷத்திரிய மித்திரன் பத்திராதிபன், சென்னை.

எமது 6-வது கடிதம்.

இரங்கூன்.
காந்தம், (8-3-26.)

மகா-ா-ா-ஸ்ரீ, திரு. நாராயண அய்யங்கார் அவர்களுக்கு எழுதுவது, தங்களுக்கு 4-12-25 தேதியில் அடியிற் காணும் நிருபம் அனுப்பி யிருந்தோம். அந்நிருபத்திற்கு இதுகாறும் பதில் கிடைக்கவில்லை. ஆகவே அனுப்பி யிருக்கும் நகல் நிருபம் பார்த்தேனும் பதில் நிருபம் அனுப்பும்படி அன்புடன் ஆசிக்கின்றனம். வேணும் சுபம்.

குறிப்பு:—இதன்கீழ் 5-வது கடிதத்தையே மீண்டும் வரைந்து அனுப்பப்பட்டது.

தங்கள் அன்பன்,
த-விஜய துரைசாமி கிராமணி,
க்ஷத்திரிய மித்திரன் பத்திராதிபன், சென்னை.

என யாம் சான்று என்னும் பதத்தின் விஷயமாக சென்னையிலிருந்து 4-12-25 தேதியில் எழுதிய 5-வது கடிதத்திற்கும், இரங்கூனிலிருந்து 8-3-26 தேதியில் எழுதிய 6-வது கடிதத்திற்கும், மதுரை தமிழ்ச்சங்க கலாசாலைத் தலைமை உபாத்தியாயரும், செந்தமிழ் பத்திராதிபருமாகிய, திரு. நாராயணையங்கார் அவர்கள் பதில் அனுப்பாது மௌனஞ் சாதித்து விட்டமையால், சான்று என்பதற்கும் கள்ளைக்குறிக்க பிரமாணங் கிடையா

தெனவும், சாட்சி என்னும் ஒரு பொருளையே தருமெனவும்† அறியலாம்.

ஆகிய இத்தியாதிப் பிரமாணங்களை நோக்க தமிழ்ச் சங்கத்துப் பிரசுரம் 8-வதாக எண்ணப்பட்ட தமிழ்ச்சொல் லகராதியில் "சான்றான்=கள் விற்போன் (பராசர—160)" என வெழுதியது ஆபாச முறையென வறியலாம்.

24. தற்கால தமிழ்ச்சொல் லகராதி:—இவ்வகராதி¶ எப். ஆர். எச். எஸ். (லண்டன்); எம். ஆர். ஏ. எஸ். (லண்டன்) என்னும் லண்டன் சங்கங்களின் மெம்பரும்; சென்னை நகர் ஷெரீப்பும்; சென்னை, சர்வகலாசங்கத்தின் தமிழ்க்கல் விச்சபை அக்கிராசனாதிபதியும்; பேராசிரியர், நச்சினார்க் கினியர் முதலியோர் உரையுடன் டினகூ தொல்காப்பியம்; நக்கீரனார் உரையுடன் கூடிய இறையனார் அகப்பொருள்;

---

† சான்று என்பதற்கு சாட்சி எனவும், சான்றாண்மை என்பதற்கு ஞானம் எனவும் பொருள் தருமென சன்னாகம். அ. குமாரசுவாமிப் பிள்ளையால் இயற்றிய இலக்கியச் சொல்லகராதியிலும்; V. விஸ்வநாதபிள்ளையால் இயற்றிய (A Dictionary Tamil and English) தமிழ் இங்கிலீஷ் அகராதியிலும் விளக்கப்பட்டுள்ளதே யன்றி, கள்ளையுங் குறிக்குமெனக் காட்டப்பட்டில்லை.

¶ The Modern Tamil Tamil Dictionary by Diwan Bahadur S. Bavanandam Pillai I. S. O,. F. R. H. S. (Lond.) M. R. A. S. (Lond.) Sherife of Madras, Chairman, Board of Studies in Tamil, University of Madras, founder of Bavanandam Academy, and Author and Editor of Several Tamil Classies, in 1925. Printed Macmillan & Co; Limited Madras, Bombay Calcutta and London.

அமிர்த சாகரனார் இயற்றியதும் விருத்தியுரையுடன் கூடியதுமாகிய யாப்பருங்கலம்; விளக்கவுரை முதலியவற்றுடன் கூடிய பேரகத்தியத்திரட்டு முதலிய நூற்களின் பதிப்பாசிரியருமாகிய திவான்பஹதூர், ச. பவானந்தம் பிள்ளை ஐ. எஸ். ஒ. அவர்களால் இயற்றி, மாக்மில்லன் அண்டு கம்பனியாரால் 1925. A. D. வருஷம் பதிப்பிக்கப் பட்டது. இவ்வகராதியில் கள்விலைஞரைச் சுட்டி:—

(1) சௌண்டிகர்=கள்விற்போர்
(2) துவசர்=கள்விற்போர்
(3) படுவர்=கள்விற்போர்
(4) பழையர்=கள்விற்போர்
(5) பிழியர்=கள்விற்போர்

எனக் கள்தொழிலாளரை விளக்கியதோடு;

(1) சால்=மிகுதி
(2) சால்பு=ஊக்கம், கல்வி, மேன்மை
(3) சான்று=சாட்சி, உதாரணம்
(4) சான்றாண்மை=ஞானம், ஊக்கம்
(5) சான்றவர், சான்றோர்=அறிஞர்
(6) சான்றார்=சாணார், சான்றோர்
(7) சான்றோன்=சூரியன், சுற்றோன்
(8) சாணன்=நிபுணன்
(9) சாணான்=ஓர் சாதியான்
(10) கிராமணி=கிராமமுற்றோன், கிராமியன், சாணாருட் பெரியவன்
(11) கிராமியன்=கிராமமுற்றோன்
(12) நாடன்=சோழராஜர்களுடைய பட்டப்பெயர்
(13) நாடான்=சாணாருக்குரிய பட்டப்பெயர்,*

* P. இராமநாதன் என்பவரால், 1909-ம் வருடம் இயற்றிய, தமிழ்ப் பெயரகராதியும் இதே கருத்துடையது.

எனச் சான்ருரையும் விளக்கியுள்ளார். அப்படி விள க்கியதில் "சான்றார், சாணூர்" என்னும் சொற்களும் கள்விலை ஞரைக் குறிக்குமெனக் கூறிஞரில்லை. இவர் சங்காதி நூற் களில் மிகத்தேர்ந்தவரா யிருத்தலோடு, "தொல்காப்பியம், இறையஞரகப்பொருள்" முதலிய சங்காதிநூற்களை பதிப் பித்தும், அவைகளுக்குக் குறிப்புரையும் எழுதியுள்ளார். அன்றியும் இச்சென்னை ராஜதானியின் கவர்ண்மெண்டு சர்வ கலாசங்கத்தின் தமிழ்க்கல்விச் சபையின் தலைவராகவு மிருத்தலின் தமிழின் பெருமையையும் நன்குணர்ந்தவ ராவர். அத்தகைய இவர் "சான்றார், சாணூர்" என்னுஞ் சொற்களின் விஷயத்திலும், தமது அந்தஸ்திற்குத்தக, முறை திறம்பாது, தமக்கு முன்னுன பெரியோர்களது நூற் களின் போக்கையும் அனுசரித்து எழுதிள்ளார். இதுதான் படித்தவருக்கும் படியாதவருக்கும் உள்ள தாரதம்மியம். ஆகவே,

கள்குலத்தவர்கள்.

வால்மீகிராமாயண காலத்தில் "சௌண்டிகர்"என்றும்,
புராணகாலத்தில் "குசலர்" என்றும்,
சங்ககாலத்தில் "பழையர்" என்றும்,
கல்லாடர் காலத்தில் "பரதவர்" என்றும்,
அமரசிம்மர் காலத்தில் "சௌண்டிகர், மண்டகாரகர் என்றும்,
பராசரஸ்மிருதி,மாதவியவியாக்யானத்தில் சௌரேயன் என்றும்,
திவாகரர் காலத்தில் பழையர், துவசர், படுவர், என்றும்,
கம்பர் காலத்தில் "பழையர், துவசர்" என்றும்,
பிங்கலர் காலத்தில் "பழையர், துவசர், படுவர்" எ-ம்

சூடாமணி நிகண்டார் காலத்தில் "சௌண்டிகர், துவசர், பிழியர், படுவர்" என்றும்,

(1824-A. D.) சதுரகராதியார் காலத்தில் "சௌண்டிகர், பழையர், பிழியர், படுவர், துவசர்" என்றும்,

(1925. A. D.) தற்கால அகராதி காலத்தில் "சௌண்டிகர், பழையர், பிழியர், படுவர், துவசர்" என்றுஞ் சாதிப்பெயர்கள் பெற்று வந்தனர்.

இச்சாதிப் பெயர்களை, அல்லது இவைகளில் ஏதாவதொன்றை நம்குலத்தவர்கள் தங்குலப் பெயரென வழங்கி வாராமையால், இப்பெயர்கள் நம் குலத்தவருக்குரியவை யல்லவென வறியவும். அப்படியிருக்க நம் குலத்தவர்கள் நீண்டகாலமாகக் கள்தொழிலைச்செய்து வருகிறவர்களெனச் சிலபோலிகள் கூறிவருவது அறியாமை யென்க.

ஆகவே, சான்றான் என்பது இரண்டாயிரம் வருடத்திற்கு முற்பட்ட சங்ககாலத்திலேற்பட்டு, அரசனையும், அறிஞனையுங் குறித்து நின்றது. அதற்குப் பிற்காலத்தில் சூரியனையுங் குறிக்குமெனச் சொல்லப் பட்டது. அப்பெயரே இற்றைக்கு (900) தொள்ளாயிரம் வருடத்திற்கு முற்பட்ட பெரிய புராணத்தில் நமக்குச் சாதிப்பெயராக விளங்கி, அரசர் என்னும் பொருளில் நின்றது. அதற்குப் பிற்காலத்திலிருந்து நாளது வரைக்கும், சான்றார் என்பது நமக்கு சாதிப்பெயரெனவே நிலைநாட்டப்பட்டது. அப்பெரிய புராணத்திற்குப் பிற்பட்ட "பிங்கல நிகண்டு, சூடாமணி நிகண்டு, ரேவணசூத்திரம், ஆசிரிய நிகண்டு, உரிச்சொல் நிகண்டு" முதலிய நிகண்டுகளிலும்; அகராதிகளிலும், மற்ற நூற்களிலும், இப்பெரிய புராணத்திற் கூறிய "சான்

ரூன்" என்பதை கள்விலைஞர் பெயர்களில் ஒன்றெனச் சேர்த்தெழுதப் படவில்லை. அப்படி எழுதப்படாமலிருந்து, பத்தொன்பதாம் நூற்ருண்டின் மத்தியிலேற்பட்ட "இராட்லர், உவின்ஸ்லோ, தர்ஸ்டன்" முதலிய அங்கிலேயர்கள் சான்ருர்களை கள்தொழிலரெனவே எழுதியுள்ளார்கள். தற்காலம் நம்மில் சிலர்செய்து வருவதால் அவ்விதங் கூறினர்கள் போலும். இவர்களுக்குப்பின், அதாவது (1909-A. D. ஆயிரத்துத் தொள்ளாயிரத்து ஒன்பதாம் வருடத்திற்குப் பிறகு, சில அற்ப அயோக்கியப் போலிகள் பொருமைகொண்டு, "பொருளல்ல வற்றைப் பொருளென் றுணரு மருளானு மாணுப் பிறப்பு" என்னும் குறளடிக் கிணங்க இல்லாததை யுண்டெனக் கூறியும், பழையர் என்பதற்குப் பதிலாக சான்ருர் என வச்சிட்டும், சான்ருர் என்பதற்குக் கள்விலைஞர் எனப் பொருள்கொண்டும் எழுதியுள்ளார்கள்.

இக்கலியுகக் கடைப் புலவர்களின் ஏகதேச செய்கையை யொழித்து, சங்காதி நூற்களை யோசிக்க நாம் அரச வம்ஸத்தவர் எனவும், நமது சாதித்தொழில் வர்த்தகமும், கள் தொழிலும் அல்ல வெனவும்,அவைகள் நமக்கு ஆபத்துத் தருமம் எனவும், அவற்றுள் கள்தொழில் நமது சுயவரசொழிந்து வடுகரசு காலத்திற்குப் பிறகே ஏற்பட்ட தென்றும் நூன்முகத்தால் விளக்கினம். அப்படியாயின் நமக்குரிய குலத்தொழில் தான் என்ன வெனவும், நம்குலத்தவர் அரசரா யினமையின் பூர்வம் அரசத் தொழிலைச் செய்து வந்தனரா? அல்லது வேறு என்ன தொழில் புரிந்து வந்தனர் எனவும் இனிது ஆராய்வாம்.

III. ஆயுதத்தொழில்:—பெரிய புராணத்தில் கூறப்படும் அறுபத்துமூன்று நாயன்மார்களில் ஒருவரும், நம்சாதியார் என நம்மாலும், பிறசாதியாராலும் அங்கீகரிக்கப் பட்ட

வரும், நமக்கு வழங்கி வரும் சான்றார் என்னும் பெயரையே சாதிப்பெயராகப் புனைந்து வந்தவரும் ஆகிய ஸ்ரீமத்-ஏனாதி நாதநாயனார் அவர்கள் செய்த தொழிலைக் கொண்டே நம் சாதித்தொழில் இன்னதென வறிவிப்பாம்.

பெரிய புராணம், ஏனாதிநாத நாயனார் புராணம், 3-வது செய்யுள்.

"தொன்மைத் திருநீற்றுத் தொண்டின் வழிபாட்டி
னன்மைக்க ணின்ற நலமென்றுங் குன்றாதார்
மன்னர்க்கு வென்றி வடிவாட் படைபயிற்றுந்
தன்மைத் தொழில்விஞ்சையிற் றலைமைசார்ந் துள்ளார்"

இச்செய்யுளில் சேக்கிழார் ஏனாதிநாத நாயனாருக்கு வாட்படைப் பயிற்றலே சாதித்தொழில் என விளக்க "வடி வாட் படைபயிற்றுந் தன்மைத் தொழில்" என்றார். அதனால் அவர் ஆயுதத்தொழிலைப் பயின்றவர் என விளங்கினது. அத்தொழிலே அவருக்குச் சாதித்தொழில் என விளக்க சேக்கிழார் "தன்மைத் தொழில்" என்னும் பிரயோகத்தை இடையில் வைத்துள்ளார் "தன்மை இயல்புந் தன்மை யுடைப் பொருளும்" என்னும் நிகண்டின் சூத்திரத்தால் தன்மைத்தொழில் என்றால் இயல்புத்தொழில் அதாவது சாதித்தொழில் எனப் பொருள்கொள்ளும். இப்படைப்பயிற்றுந்தொழில் அரசருக்குரியது.

சூடாமணி நிகண்டு, 12-வது தொகுதி, 52-வது செய்யுள்.

"ஓதலே வேட்டல் ஈதல்
உலகோம்பல் படை பயிற்றல்
மேதகு போர்செய் திட்டல்
வேந்தர்செய் தொழிற்க ளாராம்"

என்னும் நிகண்டின் சூத்திரத்தால் விளங்கும். இதனால் ஏனாதிநாதநாயனார் அரசத்தொழிலை யுரியாரென விளங்குவர்

உபமன்னியு பக்தவிலாசம், 29-வது அத்தியாயம்,
ஏனாதிநாதர் சரிதம், 3-வது சுலோகம்.

𑌅𑌸𑍍𑌮𑌿𑌨𑍍 𑌨𑍇𑌨𑌾𑌦𑌿 𑌨𑌾𑌥𑌾𑌖𑍍𑌯
𑌆𑌸𑍀𑌚𑍍 𑌚𑌾𑌕𑍍𑌷𑍀 𑌕𑍁𑌲𑍋𑌦𑍍𑌭𑌵𑌃
𑌨𑍃𑌪𑌃 𑌶𑌸𑍍𑌤𑍍𑌰𑌕𑌲𑌾𑌚𑌾𑌰𑍍𑌯𑌃
𑌶𑌿𑌵𑌭𑌕𑍍𑌤𑌾𑌙𑍍𑌘𑍍𑌰𑌿 𑌸𑌕𑍍𑌤𑌧𑍀𑌃 ॥

"அஸ்மின் னேனாதி நாதாக்ய·
ஆசீத் சாக்ஷி குலோத்பவ
நிருபஸ் ஸஸ்த்ர கலாசார்யா.
சிவபக்தாங் கிரீ ஸக்ததி: ॥"

இச்சுலோகத்தில் உபமன்னியரும் ஏனாதிநாத நாயனாருக்கு ஆயுதத் தொழிலே சாதித்தொழிலென விளக்க "ஸஸ்த்ர கலாசாரியர்" என்றனர். இதனால் அவர் ஆயுதத் தொழிலைப் பயின்றவர் எனவிளங்கினர். ஸஸ்த்ரம் என்றால் ஆயுதம் எனப் பொருள்கொள்ளும். சஸ்த்ரத் தொழிலைச் சாதித் தொழிலாகப் பெற்றவர்கள் அரசரே!

அப்படியாயின், "வேளாண் குலம்பெருக வந்துதித்தார் கோட்புலியா ரெனும் பெயரார்" * என்னும் பெரிய புராணப் பகுதியால் கோட்புலி நாயனார் வேளாளராவர். அவரும் "வளவர் தந்திரியராய் வேற்றுப் புலம்பெருகத் துயர்விளையப் போர்விளைத்துப் புகழ் விளைப்பார்" * எனும் பகுதியால் சோழ ராஜாவிடத்து சேனாதிபதித் தொழில் பூண்டு போர்த்தொழில் புரிந்தனர். அதைப்போல், ஏனாதி நாத நாயனாரும் போர்த்தொழில் புரிந்திருக்கலாம்.

* பெரியபுராணம், கோட்புலிநாயனார் புராணம், 1-வது கவி.

அதனுல் அத்தொழிலை எனுதிநாத நாயனுருக்கு மாத்திரம் குலத்தொழில் என்பது எவ்விதம்? என்பர். அதையும் விளக்குவாம்.

தொல்காப்பியம், பொருளதிகாரம், மரபியல்,
84-வது சூத்திரம்

"அன்ன ராயினு மிழிந்தோர்க் கில்லை"

என்னும் தொல்கரப்பியம், மரபியல் சூத்திரத்தால் வேளாளருக்கு "வில்,வேல,வாள்" முதலிய ஆயுதத்தொழில் கிடையாதெனக் கூறியிருக்கிறது.

தொல்காப்பியம், பொருளதிகாரம், அகத்திணையியல்,
31-வது சூத்திரம்

"உயர்ந்தோர்க் குரிய வோத்தி னுன"

என்னும் தொல்காப்பிய பகுதியும், வேளாளரை யொழித்து ஒழிந்தோரை நோக்குவதால், அத்தொழில் வேளாளருக்கில்லை என வறிவர். ஆயின்,

தொல்காப்பியம், பொருளதிகாரம், மரபியல்,
81-வது சூத்திரம்

"வேந்துவிடு தொழிிற் படையுங் கண்ணியும்
வாய்ந்தன ரென்ப வவர்பெறும் பொருளே"

(இ-ள்.) "வேந்தர் கொடுப்பின் வேளாண் மாந்தர்க்குப் படைக்கலமுங் கண்ணியும் பெறும் பொருளாகச் சொல்லப் படும்" எனப் பொருளெழுதி யுள்ளார் நச்சினுர்க்கினியார். அப்படி எழுதியதால் வேளாளர் வில் வேல் வாள் முதலாயின பெறுதற் குரிய ரல்லர் என்றும், அவர் வேந்தனுற் கொடுக்கப்படும் தண்டத்தலைமையாகிய சிறப்பைப் பெறுவரேல் அவர்பாற் படையும் பொருளாகப் பெறுவர் என்றும் விளங்குகின்றது. இது பிற்காலத்துணிபு. இவ்வகையால் வேளாளராகிய கோட்புலி நாயனுரும் தண்டத்தலைமையைப் பெற்றிருக்கலாம். அதனுல் அத்தொழில் அவருக்குக் குலத்

தொழிலாகாது. பாரதகாலத்தில் அரசர்கள் அரசர்களிடம் சண்டைசெய்வதேயன்றி, தமக்குயர்ந்த பிரமணனிடத்திலாவது, தமக்குத் தாழ்ந்த வைசியர், சூத்திரர்* இடத்திலாவது சண்டை செய்யார்கள். கிருஷ்ணன், பீமன், அர்ச்சுனன் ஆகிய மூவர்களும் பிராமண வேடந்தரித்து ஜராசந்தனைக் கொல்ல, அவன் இல்லத்திற்கேகி சண்டைக்கழைக்க, அவன் அரசர்களன்றி, மற்றையோர்பால் சண்டைசெய்யேனெனக்கூறியதாகவும், தங்கள் சுயரூபத்தைக் காண்பித்து சண்டை செய்ததாகவும் வியாச பாரதங்§ கூறுகின்றது.

தொல்காப்பியம், பொருளதிகாரம், மரபியல்,
82-வது சூத்திரம்.

"அந்த ணாளர்க் கரசுவரை வின்றே"

என்னுந்தொல்காப்பியப் பகுதியும், "அந்தணாளர்க்கு= பார்ப்பாருக்கு, அரசு=இராச்சிய பாரம், வரைவு=எல்லை, இன்றே=இல்லையே" என்பதாம். அன்றியும் பார்ப்பான் ராஜ்யத்திற்குத் தகாதவனென்று சதபத ப்ராமஹ்மணத்திற் சொல்லப்படுகிறது.

புறநானூறு, 9-வது அகவல்.

"ஆவு மானியற் பார்ப்பன மாக்களும்,
பெண்டிரும் பிணியுடை யீரும் பேணித்,
தென்புல வாழ்நர்க் கருங்கட னிறுக்கும்,
பொன்போற் புதல்வர்ப் பெறாஅ தீரு,
மெம்மம்பு கடிவிடுது நும்மரண் சேர்மின்."

---

* தர்மராஜர் யாகசாலையில் வைசியரையும் சூத்திரரையும் அழைக்கப்பட வில்லை. (வியாசபாரதம், சபாபர்வம், முப்பத்தாருவது அத்தியாயம், ராஜஸூய பர்வம்.)

§ வியாசபாரதம், ஸபாபர்வம், இருபத்தோராவது அத்தியாயம், ஜராஸந்தவத பர்வம்.

(இ-ள்) "பசுவும், அந்தணரும், மகளிரும், நோய்புடையீரும் பிள்ளைப் பெறுதீரும். எம்முடைய அம்பை செலுத்தக் கடவேம், நும்மரண் சேன்" என்பதாம்.

"ருத்விக்குகளென்னும் அந்தணர்களனைவரும், இவ்வாறு பாவந்தொலைத்த மன்னவனைநோக்கி, மன்னவரே! பாரெல்லாம் பாதுகாக்க யாங்கள் வல்லமை யில்லாதிருப்பதனுல் எங்களுக்குப் பூமிவேண்டாம் *" எனக் கூறியதாக வால்மீகரே கூறியுள்ளார். அப்படியாயின் துரோணர் கிருபர் முதலியோர் தண்டத்தலைமையை யேற்றுரே எனின், அவர்கள் ஆமாத்திய பிராமணர்களாவர். அதனுல் அவர்கள் யேற்றனர்:—

ஆமாத்திய பிராமணர்.

சைவபுராணம், 69-வது அத்தியாயம்,
17, 18-வது சுலோகங்கள்.

శ్లో॥ దైవాద్వివాహా త్సంజాతో
విట్శూద్ర క్షత్రియ స్త్రియాం ।
తేనోప నీతో వైద్యస్యా
దాయుర్వేద మధీత్యచ ।
శూద్రాణాం చానులోమానాం
సకుర్యా ద్భిషజక్రియాం॥

"தைவாத் விவாஹாத் ஸம்ஜாதோ
விட்சூத்ர க்ஷத்ரியஸ் ஸ்த்ரியாம்.
தேநோப நீதோ வைத்யஸ்ஸ்யா
தாயுர் வேத மதீத்யச

* வால்மீகிராமாயணம், பாலகாண்டம், 14-வது ஸர்க்கம், 44, 45-வது சுலோகங்கள்.

ஶூத்ராணும் சாநுலோ மாநாம்
ஸ்ருர்யாத் பேஷ ஜக்ரியாம்"

(இ-ள்.) "பிராமணனுக்கும் க்ஷத்திரிய ஸ்திரீக்கும் தெய்வ விவாகத்தாற் பிறந்தவன் ஆமாத்திய பிராமணன். இவன் ஆயுர்வேதத்தை வாசித்து வைத்தியஞ் செய்தல்" என்பதாம்.

ஞானப்பிரகாச சுவாமிகள்,
சாதிநூல்,
அநுலோமருற்பத்தி, முதலாவது செய்யுள்.

"பதுமைசேர் மறையோர் வேந்தர்
பாவையை வேட்க வந்தோர்
விதமுடனய ராமாத்ய
வேதிய ராகி மிக்க
வதர்வணத் தனுர் வேதத்தோ
டாயுத மறை பயின்று
மதகரி பரிதே ரூர்ந்து
மன்னவர் சேனை காப்பார்."

(இ-ள்) "மறையவர் மன்னர் பாவையை மணந்து பிறந்தவர் ஆமாத்திய பிராமணர் என்னுஞ் சாதிப்பெயரைப் பெற்று, ஆயுர்வேதத்தோடு, தனுர்வேதத்தையும் பயின்று, அரசர்களது சேனையைக் காப்பார்" என்பதாம். இவைகளை நோக்க ஆமாத்திய பிராமணர் அரசரோடு கலந்து நின்று சண்டை செய்யலாமென விதியிருத்தலின், ஆமாத்திய ராகிய துரோணர், கிருபர் முதலியோர் ஆயுதங்கொண்டு சண்டை செய்தார்கள். பெரியபுராணத்திற் கூறப்படும் ஆமாத்தியராகிய சிறுத்தொண்ட நாயனாரும் தண்டத் தலைமையை யேற்று, வடபுலத்து வாதாபி நகரின்பேரில் சண்டைக்கேகியதும் இவ்வகையே!

பெரிய புராணம், சிறுத்தொண்டநாயனார் புராணம்,
3-வது செய்யுள்.

“ஆயுள் வேதக் கலையு மலகில் வடநூற் கலையுந்
தூயபடைக் கலத்தொழிலுந் துறைநிரம்பப் பயின்றுள்ளார்
பாயுமதகுஞ் சரமும் பரியு முகைக்கும் பண்பு
மேய தொழில் விஞ்சையினு மேதினியின் மேலானார்”

என்னுஞ் செய்யுளால் விளங்கும். இவைகளைநோக்க அரசர்களுக்கே ஆயுதத்தொழில் உரியதென விளங்கும். அவர்கள் இளமையிலேயே நாட்டிற்காக உயிரை விடுவதே பெருங் கீர்த்தியென்றும், மாற்றலரைப் பொருது, போரில் பெற்ற பெருங்காயங்களே தமக்குரிய அணிகலன்களென்றும், அவற்றைப் புண்ணெனக் கருதாது புகழின் கண்ணென வெண்ணியும், பயில்விக்கப்பட்ட வொரு சமூகத்தினராவர். அத்தகையோருக்கு கத்தி முதலியஆயுதங்கள் சத்துருக்களை அடக்குவதற்கு ஏற்பட்டவை.

“There exists a tradition to the effect that the Kshatriyas followed the profession of arms up to the time of Emperor Alamgir, when a large number of them having been slain in the Dakhin wars, the Emperor, out of pity, ordered their widows to be remarried. This command the head of the caste disobeyed, so the Emperor dismissed all Kshatriyas from his military service, and ordered them to be shop-keepers and brokers for the future.” Vide, W. W. Hunter's Statistical Account of Bengal, Vol. IV, P. 48.

* வால்மீகி ராமாயணம், அயோத்தியாகாண்டம், 23-வது சர்க்கம், 35-வது சுலோகம்.

"இதற்கொரு சரித்திரப் பிரமாணம் உண்டு. ஆலம்கர் சக்கரவர்த்தி காலம்வரைக்கும் ஆயுதத்தொழிலே அரசர்கள் மாத்திரம் கையாண்டு வந்தார்கள்.* அந்த சக்கரவர்த்திகாலத்தில் நடந்த ஒரு பெரிய தக்காண சண்டையில் அநேக அரசர்கள் கொலையுண்டார்கள். சக்கரவர்த்தி மனம் இரங்கி இறந்த அரசர்களின் விதவைகளை மறுமணம் புரிந்துக் கொள்ள உத்தரவிட்டான். இந்த உத்தரவை சாதித்தலைவர்கள் புறக்கணித்தார்கள். அதனால் சக்கரவர்த்தி யுத்தத் தொழிலிலிருந்து எல்லா அரசர்களையும் விலக்கி, பிற்காலம் அதாவது வருங்காலத்தில் அவர்கள் வர்த்தகர்களாகவும், தரகரிகளாகவும் இருக்க அவர்களுக்கு உத்தரவிட்டான்" என அண்டர்துரை அவர்கள் கூறியுள்ளார். இத்தகைய வகையால் கோட்புலிநாயனார் முதலியோர் தண்டத்தலைமையைப் பெற்றிருக்கலாம். அரசர்கள் யுத்தத்தொழிலி லிருந்து விலகியபின், மற்ற சாதியார்களை சமமாக யுத்தத் தொழிலில் சேர்த்துக் கொண்டனர். அக்காலத்தி லிருந்தே சூத்திரர் முதலிய மற்ற சாதியார்களும் யுத்தத்தொழிலில் இறங்கினர். இவ்வகையாக நம் ஏனாதிநாத நாயனாரும் அரசனிடமிருந்து தண்டத்தலைமையைப் பெற்றிருக்கப் படாதா? அல்லது பிற்காலத்தில் எல்லா சாதியாரும் படைத்தொழிலில் சேர்ந்ததைப்போல் இவரும் சேர்ந்திருக்கப் படாதா? எனின். அப்படி அவ்விருவகையிலும் இவருக்குக் கொள்ளப்படாது. அதேனெனில், அப்படைத் தொழில் இவருக்கும் இவர் குலத்தவருக்கும் சாதித்தொழில். இவ்விதம் கோட்புலிநாயனார் முதலியவர்களுக்கு சாதித்தொழிலெனக் கூறப்பட வில்லை. அதை விளக்குவாம்,

* ஆயுதத்தொழில் அரசர்களுக்கு அருதியான தொழில். (வால்மீகி ராமாயணம், அயோத்தியாகாண்டம், 40-வது சர்க்கம், 7-வது சுலோகம்.)

பெரியபுராணம், ஏனாதிநாதநாயனார் புராணம்,
5-வது செய்யுள்.

"நள்ளார் களும் போற்று நன்மைத் துறையின் கண்
எள்ளாத செய்கை யியல்பி னொழுகு நாட்
டள்ளாத தங்க டொழி லுரிமைத் தாயத்தின்
உள்ளா னதிசூர னென்பா னுள னானான்"

(இ-ள்) "பகைவர்களும் தம்மை வழிபடுதற் குரிய சால்பாகிய நன்னெறிக்கண் குறைவில்லாத செய்கையோடு கூடிய முறைமையில் நடக்கும் அந்நாளில், தள்ளக்கூடாத தங்கள் தொழிலுரிமைக் குரிய தாயத்தாரில் உள்ளவனாய் அதிசூர னென்றொருவ னிருந்தான்" என்பதாம். இச்செய்யுளில் ஆயுதத்தொழில் அவர் குலத்தொழில் என விளக்க,

| | |
|---|---|
| தள்ளாத | தள்ளக்கூடாத |
| தங்கள் | தங்களுடைய |
| தொழில் | தொழிலுக்கு |
| உரிமை | பாத்தியதையுடைய |
| தாயத்தின் | சுற்றத்தார்களில் |
| உள்ளான் | உள்ளவன் |

என்னும் பொருளைக்கொண்டு விளங்குகின்றது. இச்செய்யுள் ஏனாதிநாத நாயனாருக்கு படைத்தொழிலே குலத்தொழில் என விளக்குகின்றது.

பெரியபுராணம், ஏனாதிநாதநாயனார் புராணம்,
7-வது செய்யுள்.

"தானாள் விருத்திகெடத் தங்கள் குலத் தாயத்தின்
ஆனாத செய் தொழிலா மாசிரியத் தன்மைவள
மேனாளுந் தான்குறைந்து மற்றவர்க்கே மேம்படலா
லேனாதி நாதர்திறத் தேலாவிகல் புரிந்தான்"

(இ-ள்.) "தான் செய்துவரும் சீவனோபாயம் கெடும் படி தங்கள் குலத்திற்குரிய சுற்றத்தார்களுக்கு குறையாத சாதித்தொழிலாகிய வாட்படைப்பயிற்றும் ஆசிரியத் தன்மையால் வரும் வருவாயானது மேல் மேல் நாடோறும் குறைவடைந்து ஏனாதிநாத நாயனாருக்கு மேம்படுதலினாலே அந் நாயனாரிடத்து நீதியில்லாத பகையைச் செய்தான்" என்பதாம். இச்செய்யுளும் ஆயுதத்தொழில் அவருக்குக் குலத் தொழில் என விளக்க,

| | |
|---|---|
| தங்கள் | தங்களுடைய |
| குலம் | குலத்திலுதித்த |
| தாயத்தின் | சுற்றத்தார்களுக்கு |
| ஆனாத | கெடாத |
| செய்தொழிலாம் | செய்யத்தகுந்த தொழிலாம் |

என்னும் பொருளைக்கொண்ட பகுதியை வைத்துள்ளது. இவற்றுள் "செய்தொழிலாம்" என்னும் பகுதி "அப் படைத் தொழிலையே செய்யத்தகுந்த குலத்தவர்" என வற் புறுத்துகின்றது. இதனாலும் ஏனாதிநாத நாயனார் படைத் தொழிலுக்கு உரியார் என விளங்குவர்.

பெரியபுராணம், ஏனாதிநாத நாயனார் புராணம், 13-வது செய்யுள்.

"வந்தமைத்த மாற்றான் வயப்புலிபோத் தன்னார்மு
னந்தமது வாட்பயிற்று நற்றாயங் கொள்ளுங்கால்
இந்தவெளி மேற்கைவகுத் திருவேம் பொருபடையுஞ்
சந்தித் தமர்விளைத்தாற் சாயாதார் கொள்வதென"

(இ-ள்.) போர் செய்யும்பொருட்டு வந்து அறைகூவிய பகைவனாகிய அதிசூரன், வலியினையுடைய ஆண்புலிபோன்ற ஏனாதிநாத நாயனாருக்கு முன்னே (கூறுவானாயினன்), நம்மரபிற்குரிய வாள்வித்தையைக் கற்பிக்கும் நல்ல உரிமை

யை நாமிருவரும் ஒருவர்க்கொருவர் தனக்கெனச் சிறப்பாகக் கொள்ளுமிடத்து, இவ்விடத்திருக்கின்ற வெளியிடத்தில் இருவருடைய போர்த்தொழிற்குரிய படைவீரர்களையும் இருவகுப்பாக வகுத்து எதிர்த்து யுத்தஞ்செய்தால், தோல்வி யடையாதவர்கள் கொள்வதே நலமென்றான்'' என்பதாம். இச்செய்யுளில் வரும் "நந்தமது வாட்பயிற்றும் நற்றாயம்'' என்பதற்கு,

| | |
|---|---|
| நந்தமது | நம்முடைய |
| வாட்பயிற்றும் | வாளைப்பயிற்றும் |
| நற்றாயம் | நல்ல உரிமையை |

உடையோம் எனக் கூறியிருத்தலால், அப்படைத்தொழில் அவர்களுக்குக் குலத்தொழில் என விளக்கும். நந்தமது என்னும் பகுதி தொழிற் சொந்தத்தை விளக்குகின்றது. இவற்றை யனுசரித்து,

உபமன்னிய பக்த விலாசம், 29-வது அத்தியாயம், ஏனாதிநாதர் சரிதம், 6-வது சுலோகம்.

𑌕𑍁𑌲𑌕𑌰𑍍𑌮 𑌸𑌮𑍁𑌤𑍍𑌪𑌨𑍍𑌨 𑌵𑍃𑌤𑍍𑌤𑌿
𑌹𑌾𑌰𑍍𑌯𑌾𑌯𑍁𑌧 𑌶𑍍𑌰𑌮𑍇 ।
𑌏𑌨𑌾𑌦𑌿𑌨𑌾𑌥𑌮𑌾𑌚𑌾𑌰𑍍𑌯𑌂
𑌨𑌸𑍇𑌹𑍇 𑌪𑍌𑌰𑍁𑌷𑍇 𑌣𑌸𑌃 ॥

"குலக் கர்ம சமுத் பந்ந
வ்ருத்தி ஹாங்யாயுத ஸ்ரமே
ஏனாதி நாதமா சார்யந்
நஸேயே பௌருஷே ணஸ:''

(இ-ள்.) "ஏனாதிநாத நாயனார் குலத்தவர்கள் எல்லாருக்கும் வம்சத்தொழிலாக பிறந்திருக்குந் தொழிலில் (உள்ளவனாகிய) அந்த அதிசூரனென்பவன் மற்றவர்களுக்கு ஆயுதத்தை (கற்பிக்குந்) தொழிலில் குருஸ்தானமாகிய ஏனாதி

நாத நாயனுரை எப்பொழுதும் பவுருஷத்தினல் சகிக்காது விரோதித்து வந்தான்" என்பதாம். இச்சுலோகத்தில் வரும் "குலக்கர்ம சமுத்பந்ந வ்ருத்தி" என்பதற்கு,

| | |
|---|---|
| சமுத் | (ஏனுதிநாத நாயனுர் குலத்தவர்கள்) எல்லாருக்கும் |
| குலக்கர்ம | வம்ஸத் தொழிலாக |
| உத்பந்ந | பிறந்திருக்கும் |
| வ்ருத்தி | தொழில் |

அதாவது "ஆயுதத்தொழில் ஏனுதிநாத நாயனுர் குலத்தவர்கள் எல்லாருக்கும் வம்ஸத்தொழிலாக பிறந்திருக்கும் தொழில்" எனப் பொருள்கொள்ளும். இதில் குலத்தொழில் என விளக்க "குலக்கர்மம்" என்ருர். இத்தியாதிப் பிரமாணங்களால் "படைத்தொழில்"ஏனுதிநாதநாயனுருக்குக் குலத் தொழில் என விளங்கினது. ஏனுதிநாத நாயனுர் அரசவம்ஸத்தவ ராயினமையினுலேயே ஆயுதத்தொழிலேக் குலத் தொழிலாகப் பெற்றனர்.

பகவத்கீதை, 2-வது அத்தியாயம்,
31-வது சுலோகம்.

𑌸𑍍𑌵𑌧𑌰𑍍𑌮𑌮𑌪𑌿 𑌚𑌾𑌵𑍇𑌕𑍍𑌷𑍍𑌯
𑌨𑌵𑌿𑌕𑌂𑌪𑌿𑌤𑍁𑌮𑌰𑍍𑌹𑌸𑌿 ।
𑌧𑌰𑍍𑌮𑍍𑌯𑌾𑌦𑍍𑌧𑌿 𑌯𑍁𑌦𑍍𑌧𑌾𑌚𑍍𑌛𑍍𑌰𑍇𑌯𑍋
𑌽𑌨𑍍𑌯𑌤𑍍𑌕𑍍𑌷𑌤𑍍𑌰𑌿𑌯𑌸𑍍𑌯 𑌨𑌵𑌿𑌦𑍍𑌯𑌤𑍇 ॥

"ஸ்வதர்ம மபிசா வேக்ஷ்ய
நவிகம் பிது மர்ஹஸி
தர்ம்யாத்தி யுத்தாச் ச்ரேயோ
ந்யத் க்ஷத்திரி யஸ்ய நவித்யதே !!

(இ-ள்.) "மேலும் உன் வருணத்தாருக்கு விதிக்கப் பட்டிருக்கிற (அதாவது க்ஷத்திரியனுக்கு யுத்தஞ் செய்வது

ஸ்வதருமமானதா லந்த) தருமத்தைத் தெரிந்து யுத்தஞ் செய்யத் தயங்குவது உனக்குச் சரியல்ல, (ஏனென்றால்) க்ஷத்திரியனுக்குத் தருமத்தோடு கூடின யுத்தத்தைக் காட்டிலும் மேலானது வேறேயில்லை" என்பதாம்.

"Cast but thy eyes towards the duties of thy particular tribe, and it will ill become thee to tremble. A Soldier of the Kshatriya tribe hath no duty superior to fighting". Vide, Wilkins' Bhagwat gita, ch. II, P. 10.

இவ்வங்கிலேயப் பகுதி மேற்சுலோகத்தின் கருத்தைக் கொண்டதேயாம். ஆயுதத் தொழில் அரசர்களுக்குச் சாதித்தொழிலாதலால், சண்டைசெய்யத் தயங்கப்படாது, அதற்கு மேலான தருமம் க்ஷத்திரிய குலத்திற்குக் கிடையாது, செய்தே தீரவேண்டும் எனவும்; அப்படிச்செய்தால் மோட்சங் கிடைக்குமென அடுத்த சுலோகத்தில் அர்ச்சுனனுக்கு கிருஷ்ணன் வற்புறுத்துகின்றார்.

"The Rajaputs were a race of Warriors, who formed the ruling class, wherever they settled." Vide, J. Talboys Wheeler's History of India. ch. VII.

"இராஜ புத்திரர்கள் யுத்த வம்ஸத்தவர்கள். அவர்கள் தங்கும் தேசங்களுக்கு அரசாட்சி செய்யும் வகுப்பினருமாவர்" என உவீலர்துரை அவர்கள் கூறுகின்றார். பிரமம் என்பது வேதம், அதை ஓதி, அதில்சொல்லிய அர்த்தங்களை யறிந்து, அதன் தர்மங்களை அனுஷ்டிப்பவன் பிராமணன் என்று அங்கிராவு கூறுகின்றார்; இதைப்போல் போர் என்பது "யுத்தம்" அந்த யுத்தத்திற்குரிய நூற்களையும் ஆயுதங்களையும், ஓதியும் பழகியும், அதன் தர்மங்களை

அநுஷ்டிப்பவன் பொருநன் எனப்படுவன். பொருநன் என்பது க்ஷத்திரியருக்குரிய பல பெயர்களில் ஒன்று.

"புரவலன் பெருமா னேந்தல்
பூபாலன் வேந்தன் மன்னன்
நரபதி பொருநன் சக்ரி
நகைமுடி நிருப னோடு"

என்னும் சூடாமணி நிகண்டின் சூத்திரத்தால் விளங்கும். திருக்குறளில் பரிமேலழகரும் கல்வியை அரசியலில் வைத்து, கல்வி என்பதற்கு அரசன் தான் கற்றற்குரிய நூற்களைக் கற்றல்; அவையாவன அறநூலும், நீதிநூலும், யானை குதிரை, தேர், படைக்கலம் என்பவற்றி நூற்களும் முதலாயின எனப் பொருள்தந்து எழுதியுள்ளார். அவற்றால் வேதம் பார்ப்பாருக்கும், படைக்கலம் அரசருக்கும் உரியதென் றேற்படுகின்றது. இதனாலேயே அவர்களை படையயிற்றும் வகுப்பார் எனக் கூறுகின்றனர்.

"The Kshatriyas belong to the second or military class. They are kings and soldiers." Vide, Rev. H. Bower's Essay on Hindu Castes P. 5.

"க்ஷத்திரியர் இரண்டாவது அல்லது படையயிற்றும் வகுப்பைச்சாருவர். அவர்கள் அரசரும், யுத்தரங்கத் தவருமாவர்" என்பதாம். இப்பகுதியில் அரசர்களை ஆயுதவகுப்பார் என்கின்றனர். இவ்விதமாகவே நம் ஏனாதிநாத நாயனார் வம்சத்தவர்களாகிய சான்றார்களையும் சேக்கிழார் சுவாமிகள் "மறைப்படைவாட் சுற்றத்தார்" என்கின்றனர்.

பெரியபுராணம், ஏனாதிநாத நாயனார் புராணம்,
12-வது செய்யுள்.

"புறப்பட்ட போதின்கட் போர்த்தொழில்கள் கற்கும்
விறற்பெருஞ் சீர்க் காளையர்கள் வேறிடத்து நின்றார்

மறப்படைவாட் சுற்றத்தார் கேட்டோடி வந்து
செறற்கரும்போர் வீரர்க் கிருமருங்குஞ் சேர்ந்தார்கள்"

(இ-ள்.) "ஏனாதிநாத நாயனார் போர்க்கோலங்கொண்டு புறப்பட்டபொழுது, அவரிடத்தில் போர்த்தொழிலைக் கற்றுக்கொள்ளும் வலியால் மிக்க வீரர்களும், வேறிடங்களில் வசிப்பவர்களாகிய வீரம் பொருந்திய வாட்டொழிலை குலத்தொழிலாகப்பெற்ற அவர் சுற்றத்தார்களுங் கேட்டு, விரைந்து வந்து ஒருவராலும் செயித்தற்கரிய போர்த்தொழிலில் வல்லவராகிய ஏனாதிநாத நாயனாருக்கு இரண்டு பக்கமுஞ் சேர்ந்தார்கள்" என்பதாம். இப்பிரயோகத்தில் வரும் போர்த்தொழில்கள் கற்குங் காளையர்கள்" என்பதற்கு,

| | |
|---|---|
| போர்த்தொழிலை | யுத்தத்தொழிலை |
| கற்கும் | பயிலும் |
| காளையர்கள் | சிறுவர்கள் |

அதாவது "போர்த்தொழிலை காத்தொழிலாகப் பயிலும் சிறுவர்கள்" எனினும், "போர்த்தொழிலுக் குரியவர்களல்லாத சிறுவர்கள்" எனினும், "சாதித்தொழிலல்லாது ஜீவனார்த்தமாகப் பழகும் சிறுவர்கள்" எனினும் பொருந்தும். இக்காளையர்கள் கோட்புலி நாயனாரைப்போன்ற பிற சாதியார்களாயினமையின் அவர்களுக்கு போர்த்தொழிலைச் சாதித்தொழிலெனக் கூறுதொதுக்கினர் சேக்கிழார். ஆயின் நம் ஏனாதிநாத நாயனார் வம்சத்தவர்கள் போர்த்தொழிலுக் குரியாராயினமையின் அவர்களை "மறப்படைவாட் சுற்றத்தார்" என வகுத்தோதினர்.

| | |
|---|---|
| மறம் | வீரம்பொருந்திய |
| வாள்படை | வாளாயுதத்தை (யுடைய) |
| சுற்றத்தார் | குலத்தார் |

எனப் பொருள்படும். "ஆயுதம் பயிற்றுங் குலத்தார், ஆயுத குலத்தார்" என்பது தேர்ந்த முடிபு. இதனால் ஆயுதத் தொழிலை சாதித்தொழிலாகப் பெற்ற ஏனாதிநாத நாயனார் வம்ஸத் தவர்கள் அரசரே!

*பிரகஸ்பதி ஸ்மிருதி.*

శ్లో॥ ఇజ్యాధ్యయనదానేచ
ప్రజానాం పరిపాలనం।
శస్త్రాస్త్ర ధారణం సేవా
కర్మాణి క్షత్రియస్యతు॥

*"இஜ்யாத் யயனதா நேச*
*ப்ரஜாநாம் பரிபா லனம்*
சஸ்த்ராஸ்த்ர தாரணஞ் சேவா
கர்மாணி க்ஷத்ரியஸ் யது"

*இச்சுலோகத்தில்* வரும் *"சஸ்த்ராஸ்த்ர தாரணஞ் சேவா கர்மாணி* **க்ஷத்ரியஸ் யது**" என்பதற்கு,

| | |
|---|---|
| *சஸ்த்ரா* | *வாள்* |
| *அஸத்ரா* | *பாணம் (முதலியன)* |
| *சேவா* | *பயிற்றும்* |
| *கர்மாணி* | *தொழில்* |
| **க்ஷத்திரியஸ்யது** | *அரசர்களுக்குரிய* |
| *தாரணம்* | *கடன்* |

*எனப்பொருள் கொள்ளும்.* இதனால் *படைத்தொழில் அரசருக்குரிய சாதித்தொழில் என விளங்கினது. அவ்வரசத்தொழிலைச் சாதித்தொழிலாகப் பெற்ற, நமது ஸ்ரீமத்* ஏனாதிநாத நாயனாரும், அவர் வம்ஸத்திலுதித்த கிராமணி நாடார்க *ளாகிய நாமும்* அரசவம்ஸத்தவர் *எனவும், அவ்வம்*

ஸத்திற்குரிய தொழிலாகிய படைத்தொழிலேயே சாதித் தொழிலாகப் பூர்வம் நமது முன்னோர்கள் பெற்றிருந்தார்கள் எனவும் ஐயமற விளங்குகின்றது.

ஆயின் "க்ஷத்திரியனுக்கு ஆபத்துக்காலம் வந்த வழியும், வேட்பித்தல் முதலிய வேதியன் தொழில் இழிந்ததேயாம். எப்போதைக்கும் தன் சாதிக்காயினும் மேல் வருணத்தாருக்குரிய ஜீவனத் தொழிலைத் தான் விரும்பலாகாது" என வசிட்டரால் கூறியவாறு, நம்குலத்தவர் தாழ்ந்த குலத்தவராயிருப்பின் ஆயுதத்தொழிலாகிய உயர்ந்தத் தொழிலை கையாள நேருமா? அதுவுஞ் சாதித்தொழிலெனக் கூற முடியுமா? அரசருக்குரிய ஆயுதத்தொழிலை அநபாயச் சோழன் அவைக்களத்தில், ஏனாதிநாத நாயனார் வம்சத்தவர்களாகிய கிராமணிகளுக்கும், நாடார்களுக்கும் சாதித் தொழிலென சேக்கிழார் கூறவும் சோழன் ஒப்புவனோ? ஏனாதி நாத நாயனாரும், அவர் வம்ஸத்தவர்களாகிய சான்றார்களும் அரசவம்ஸத்தவ ராயினமையினாலேயே ஆயுதத்தொழிலை அவர்களுக்குச் சாதித்தொழிலெனச் சேக்கிழார் செப்பவும், சோழன் ஒப்பவும் நேர்ந்தது. இவற்றால் கள்தொழில் நம் குலத்தவர்களுக்கு ஆபத்துத் தொழில் அதாவது ஜீவனார்த்தமாக மத்தியிலிருந்து செய்துவரும் தொழில் எனவும், அரசத்தொழிலாகிய ஆயுதத் தொழிலே நம்மவருக்குரிய சாதித்தொழில் எனவும் விளங்கினமை காண்க. ஆகவே, இத்யாதிப் பிரமாணங்களை நோக்க நமது குலத் தொழில் "ஆயுதம் பயிற்றல்" எனவே தேர்ந்த முடிவு.

முற்றிற்று.

# முடிவுரை.

இற்றைக்குச் சுமார் 360-வருஷங்களுக்குமுன், அதாவது, பதினாறாம் நூற்றாண்டில் நவீனமாய் இத்தென்தேசத்தில் வெளிக்கிளம்பிய வடுக மகமதிய அரசர்களுடைய கொடுமையினால் நாம் நம் மதசாஸ்திரங்களைப் படிக்கவும், அதன்படி நம்குல தருமங்களை நடத்தவும், நம்மவர்களுக்கு அனுகூல மேற்படாமல் போயிற்று.

"In spite of the abilities they exhibit when suitably employed, and in spite of the reputation of their ancestors which has survived to this day, the descendants of the ancient rulers of the land have now lost nearly every thing and are reduced to the most abject condition." Vide, On The Original Inhabitants of Bharatavarsha or India, Ch. IV, P. 75.

பூர்வ அரசர்களுடைய வம்சத்தவர்கள் அவ்வளவு கீர்த்தி யுள்ளவர்களா யிருந்தபோதிலும், அவர்கள் தற்காலம் அவர்களுக்குரிய எல்லா அங்கங்களையுந் தோற்றுத் தாழ்த்தப் பட்டிருக்கின்றார்கள்" என்று ஆபர்ட்துரை அவர்கள் கூறியவாறு, அரசகுலத்தவர்களாகிய நாமும் வடுக மகமதிய அரசரால் தோற்கடிக்கப்பட்டு, மநு சொல்லுகிற பிரகாரம் ஆபத்துத் தருமத்தை, நம்மவர்கள் அனுஷ்டிக்க நேர்ந்தது. ஆபத்துத் தருமம் என்றால் பகையரசரால் பிடிக்கப்பட்ட† அரசர்கள் தங்கள் தொழிலினின்று விலகி தாழ்ந்தத் தொழிலைப் புரிவதாம்.

திருஷ்டாந்தமாக ஐந்தாறு வருடங்களுக்குமுன் நடந்த ஆங்கிலோ ஜெர்மன் யுத்தத்தில் ஜெர்மன் சக்கரவர்த்தி பெல்

† பாகவதம், தஸமஸ்கந்தம் 4-அத்தியாயம். 39-வது சுலோகம்.

ஜியத்தைப் பிடித்ததும்,அதிலிருந்து ஓடிப்போனபிரஜைகளை எல்லாம் அழைப்பித்து அவரவர்கள் செய்து வந்த தொழிலையும், சொத்து சுதந்தரத்தையும் விட்டுக்கொடுத்தாரே யன்றி,அவர்களோடு அரச சந்ததியார்களையும் அழைப்பித்து, அவர்களுக்குரிய தொழிலையும், சொத்து சுதந்தரங்களையும், அவர்களிடம் ஒப்புவித்தாரோ வெனின், இல்லை எனவே கூறவேண்டும். ஆதலால் அத்தகைய காலங்களுக்குப் பிறகு, அந்த அரச சந்ததியார்கள் மாத்திரம் ஆபத்துத் தருமத்தை அனுசரிக்க வேண்டும்.

"ஆபத்துக் காலத்தில் தனக்குக் கீழ்ப்பட்ட சாதியாருடைய பாவமான ஜீவன விருத்தியை அநுட்டிக்க வேண்டும்" என வசிட்டராலும், மநுவாலும் விதிக்கப்பட்டவாறு க்ஷத்திரிய குலத்தவர்களாகிய நாமும், நம் சாதித்தொழிலை விட்டு,நமக்குந்தாழ்ந்த சாதியார் தொழிலைப்புரிய நேர்ந்தது. அப்படி நேர்ந்தமையால் நம் குலத்துள் அனுச்சாரங்கள் காலந்தோறும் இடை இடையே நுழைய நேர்ந்தன. சுவல்ப காலஞ் சென்றதன்மேல் அவ்வநாசாரங்கள் நம்மவர்களுக்கு சிஷ்டாசாரம்போல் தோன்றும்படி ஆய்விட்டது. "ஆபத்துத் தருமத்தால் உத்தம சாதியாரும் அதம சாதியாராவதுண்டு" என யாஞ்ஞுவற்கியருங் கூறியதற்கிணங்க, நம் சாதியார்களிற் சிலர் கள்தொழிலைப் புரிந்து வருதலால், நம் சாதி மொத்தத்தையும் சௌண்டிக சாதியார் எனக்கூறி, சௌண்டிகரோடு சேர்த்து, இழிவுபடுத்தப் படுகிறோம். அவ்வழக்கே இப்பொழுது நம் சாதியின் பேரிலேறி துன்புறுத்துவது. அத்தொழிலை முற்றும் ஒழிக்க நாம் முயற்சிப்போமாக. சுபம்.